கல்கி



KALKI 6 - 10 - 1957

30 நயா பைசா


'அனஸின்'
மிகச்சிறந்தது, அதில் நான்கு மருந்துகள் சேர்ந்துள்ளன
1. க்வினையின் சல்பேட் 2. காப்பின்
3. பினஸிடின் 4. ஆஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட்
வலிகளுக்கு நிவாரணமளிப்பதில் புகழ் பெற்ற 'அனஸின்' விஞ்ஞான முறையில் சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். இவைகள் நரம்புகளின் கேந்திர ஸ்தானங்களில் கூட்டாக வேலை செய்து, தலைவலி, ஜலதோஷம் ஜுரம், பல்வலி, மற்றும் தசைவலிகளுக்குத் துரிதமாயும் அபாயமின்றியும் நிச்சயமாயும் நிவாரணம் அளிக்கிறது. வலிகளுக்குத் துரித நிவாரணமளிப்பதில் அனஸினுக்கு இணையொன்றில்லை ... அனஸினைப் போல் தீங்கு விளைவிக்காதவில்லை வேறொன்றில்லை. ஆகவே ஞாபகமிருக்கட்டும் 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். அது இருதயத்திற்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது வயிற்றுக் கோளாறுகள் உண்டு பண்ணவோ செய்யாது. 'அனஸின்' லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. 'அனஸின்' விலை ஒவ்வொருவர் சக்திக்கும் ஏற்றது. ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைஸா மட்டுமே.
நான்கு மருந்துகளின் சேர்க்கையான 'அனஸின்' வேண்டுமென்றே கேளுங்கள்
WILL NOT UPSET THE STOMACH
DOES NOT HARM THE HEART
ANACIN
TABLETS
10 नये पैसे 1957
2 नये पैसे 1957
ஒரு பாக்கெட்டின் விலை 12 நயா பைஸா

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.





மலர் 17 | இதழ் 10

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

ஹேவிளம்பி | புரட்டாசி 20

வாழ்வு உயர ஒரே வழி

"உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்"

வாழ இதுவே வழியென்று பாரதியார் பாடினார். சமீபத்தில் மேனாட்டு நல்லறிஞர் ஒருவர், அதே உண்மையை வேறொரு முறையில் உணர்த்துகிறார்.

"தெய்வம் உண்டு என்கிற நம்பிக்கையில் தளர்ச்சி கண்டதும், கலியின் கை ஓங்கும்; பனி வந்து மூடுவது போல அதர்மம் உள்ளத்தை ஆட்கொண்டு விடும்."

இப்படி அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். அந்த அறிஞரின் வாக்கு நம் நாட்டில் ரிஷிகளின் சாபத்தைப் போலப் பலித்து விட்டது. இந்தக் கோலத்தை பாரத சமுதாயத்திலே இப்போது கண்கூடாகக் காண்கிறோம்.

மக்களின் இதயங்களில் இப்போது ஆண்டவனுக்கு இடமில்லை. விடுதலை வந்தும் விமோசனம் இல்லை.


அவதார புருஷர் ஒருவரின் மேதையாலும், உழைப்பாலும், ஆன்ம சக்தியாலும் நாம் சுதந்திரம் பெற்றோம். மண்ணுலகிலேயே மகத்தான சக்தி வாய்ந்திருந்த ஒரு எதேச்சாதிகார சாம்ராஜ்யத்தைக் கதிகலங்கச் செய்ய வழி கண்டு பிடித்து, பாரத நாட்டுக்குப் பூரண சுதந்திரம் வழங்கும்படி அவர் செய்தார். அவர் தமது வாழ்வின் ஒரு ஒரு விநாடியிலும் கடவுளை எண்ணி எண்ணி வாழ்ந்தார்.

காந்தி மகானின் வெற்றியின் மூல பலம் எது? பகவான், பகவான் என்று அறுபது நாழிகையும் அவர் நம்பி வந்தார். அந்த மூல பலம் இல்லையேல் அவரால் ஒன்றும் செய்திருக்க முடியாது.

அந்த மகாபுருஷர் போன பிறகு, சுதந்திரம் அடைந்த பிறகு நாம் கடவுளை ஒரு இடையூறாக எண்ணிவந்தோம். அதன் பலனைத்தான் இப்போது அனுபவிக்கிறோம். ஒன்றுபட்டு வாழும் உணர்ச்சி குன்றிப் போய், லஞ்சப் பேயும், பதவிப் பித்தும் தலைக் கேறி, பொய்யும் மோசமும் மேலிட்டு வாழ்வில் மக்கள் உயர வகுக்கப்படும் எல்லாச் சட்டமும் திட்டமும் பயனற்றுப் போய் கலியின் வலையில் சிக்கி ஏங்குகிறோம்.

ஈசுவரன் இல்லையேல் தருமமோ சத்தியமோ எப்படி நிற்கும்? ரஸம் பூசாத கண்ணாடியானது பிம்பம் காட்டாது. அதுபோல் தெய்வ நம்பிக்கையில்லாத உள்ளத்தில் அந்தராத்மா, மனச்சாட்சி என்பதெல்லாம் வெறும் பேச்சு. மனச்சாட்சி யில்லாத நிலையில் நீதிநெறி என்பது உயிரற்றுப் போகும். கடவுள் இல்லையேல் ஒருவரை யொருவர் ஏன் நம்பவேண்டும்? அதன்பின் கூட்டுறவு ஏது? பரஸ்பர நம்பிக்கையும் நாணயமும் இன்றி வியாபாரம் எங்கே வளரும்? செல்வம் எப்படி உண்டாகும்? கடவுளில்லாத பண்பாடு புகையாகப் போய் மறைந்து போகும். வாழ்வில் நாம் மேலே உயர வேணுமானால் அதன் அடிப்படையில் நமக்குத் தெய்வ நம்பிக்கை அஸ்திவாரமாக அமைய வேண்டும்.

வாயால் விசாரித்து, சோதித்து, அலசிப் பேசி அடைந்து விடக்கூடிய பொருளல்ல கடவுள். அது உணர்ச்சிக்கு எட்டாத பொருள். வாதம் செய்து தரிசனம் பெற முடியாத



பொருளானாலும், எப்படிக் காற்று, கண்ணுக்குத் தெரியாத வாயு, உயிருக்குத் தேவையோ, அப்படியே மனிதனுக்குக் கடவுள் தேவை.

எந்தப் பொருள் நமக்குத் தேவையோ, அது ஏன் தேவை என்பதை ருசுப்படுத்துவது எவ்வளவு கடினமானாலும், அதை நாம் அடையத்தான் வேண்டும். இயற்கைத் தேவையிலேயே சான்றும் ஒன்றியிருக்கிறது. வேறு சான்று வேண்டிய தில்லை. அதன் தேவையே அதன் உண்மைக்குச் சான்று.


தான் எங்கிருந்து உண்டானது, எப்படி ஆனது, அன்னையென ஒருத்தி தனக்கு எப்படி இருக்கலானாள் என்பதெல்லாம் ஒரு குழந்தைக்குத் தெரியாதுதான். ஆனாலும் குழந்தைக்குத் தாய் இல்லாமல் முடியாது. அன்னையை அது இறுகக் கட்டி அணைத்துக் கொள்கிறது. குழந்தைக்கு யாருமே தாயை ருசுப்படுத்த முடியாது. அப்படி இருப்பினும் அன்னையினும் மேலான அன்போ, சான்றோ, காப்போ குழந்தைக்கு வேறு இல்லை. அப்படித் தான் நமக்குக் கடவுள்.

தனிப்பட்ட வாழ்விலோ, சமூக வாழ்விலோ கடவுளின்றி நமக்கு வாழ்வில்லை. பண்பாடு பண்பாடு என்பதெல்லாம் ஆண்டவன் வழிபாட்டை ஒட்டி நிற்பதுவே. அவனை வேண்டாமென்று தள்ளினோமானால் நமது பண்பாட்டையும் நாம் தள்ளினவர்களாவோம். சுச்சு வீடு நெருப்புக்கு இரையாவது போல் பாவம் நெருங்கியவுடன் பண்பாடு நீறாகப் போய்விடும். உண்மைப் பண்பாடு பொருளீட்டுதலில் இல்லை. ஆன்மீகத் துறையில் நாம் ஆற்றும் பணியிலும், உள்ளத்தை நெறி தவற விடாது நல்வழியில் கொண்டு செல்வதிலும், சுயநலத்தை ஒழித்துப் பிறருடன் அன்பு கொண்டு கூடி



இப்பொழுது இருந்தால்......

—விஜி



வாழ்வதிலும்தான பண்பாடு நிற்கிறது. இந்த நற்குணங்கள் யாவும் கடவுளிடம் நமக்கு உள்ள நம்பிக்கையைச் சார்ந்து நிற்கின்றன. நம்முன்னும் நமக்குப் புறம்பிலும் இருக்கும் பராசக்தியிடம் நமக்கு நம்பிக்கையிருந்தால்தான் நற்குணங்கள் படியும்.

போனது, போகட்டும், இனியாவது நாம் நல்வழியில் திரும்புவோமாக. எந்த நெறியினின்றும் வழுவி இன்று இந்தச் சிக்கல்களிலும் கஷ்டங்களிலும் சிக்கிக் கண் இழந்தவர்களைப் போலத் திண்டாடுகிறோமோ, அந்த நன்னெறியை நாம் மீண்டும் கடைப்பிடிப்போமாக. இருபதாம் ஆண்டுக்குரிய முன்னேற்றம் என்ற மோக வார்த்தையில் நம்பிக்கை வைத்துப் பேராசை பிடித்து இனியும் மோசம் போக வேண்டாம். உலகம் தோன்றின நாள் முதலாய்ப் பலப்பல சோதனைகளில் தேறி நின்று ஒளிரும் தெய்வநம்பிக்கை என்ற தீபத்தைக் கையில் ஏந்தி நம் பெரியோர்கள் பாதம் பட்ட பாதையிலே செல்வோமாக. வாழ்வு உயர இதுவே வழி.

விஞ்ஞானம் நமக்குப் பயன்பட வேண்டுமானால், விஞ்ஞானங்களுக்குள்ளே யெல்லாம் மறைந்து கிடக்கும் கடவுளை நம்முடைய இதயங்களிலும் நாம் எப்போதும் வைத்திருக்க வேண்டும். அணுவுக்கும் சிறியவன் அவன். அண்டங்களுக் கெல்லாம் பெரியவனும் அவனே.

இந்த அற்புத உலகம், தூரதிருஷ்டிக் கண்ணாடியும் பௌதிக கணித சாஸ்திரங்களைக் கொண்டு காணப் பெறும் பிரமாண்ட உலகம் எதை யொட்டி நிற்கிறது? எப்படி உண்டாயிற்று? அந்த சக்தியை தியானித்து வணங்குவோம்.

— சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்.



ஆகா! என்ன குழப்பம்!!

"ஆடுகிற மாட்டை ஆடிக் கறக்கணும்; பாடுகிற மாட்டைப் பாடிக் கறக்கணும்" என்று தமிழில் ஒரு பழமொழியுண்டு. புது வரிகள் போட்ட போது அதற்கேற்ப நமது நிதி மந்திரி டி. டி. கே. பாரத நாட்டிலே "சோஷலிஸ பாணி" என்று பிரமாதமாகச் சொல்லி வந்தார். ஆவடி காங்கிரஸ் தீர்மானித்த முடிவுப்படி சோஷலிஸ சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு தமது தலையில்தான் சுமந்திருப்பது போல் பேசினார்.

ஆனால் இப்பொழுது அமெரிக்காவில் என்ன சொல்கிறார் தெரியுமா? இனி தேசிய மயம் கிடையாது: தொழில்கள் தேச உடைமையாக்கப்பட மாட்டாது என்று கூறுகிறார், அமெரிக்க முதலாளிகள் இந்தியாவில் முதலீடு செய்யலாம் என்பதற்காக இப்படிச் சொல்லியிருக்கிறார்.

இந்தச் சமயத்தில் நமது 'ஸ்டேட் பாங்கின்' உதவித் தலைவர் திரு என்.வி. காட்கில், நமது நாட்டிலுள்ள நெசவாலைகளையும் சர்க்கரை ஆலைகளையும் தேச உடைமையாக்கிக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்!

அமெரிக்கர்களுக்கு ருஷ்யா என்றாலோ கம்யூனிஸம் என்றாலோ சற்றும் பிடிக்காது என்பது உலகறிந்த விஷயம். அதற்குத் தகுந்தபடியும் டி. டி. கே. பேசியிருக்கிறார்.

நமது நாட்டில் கம்யூனிஸ்ட்கள் ருஷ்யா சைனாவுடன் கலந்து கொண்டு டில்லியைக் கைப்பற்றி விடுவார்கள். சீனா நம் பேரில் படையெடுக்கும் என்றுங்கூட அமெரிக்காவில் நிதி மந்திரி பேசியிருக்கிறார்.

நமது பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேருவோ சீனாக்காரர்களும் ருஷ்யாக்காரர்களும் நமக்கு ஆப்த நண்பர்கள் என்று ஆயிரம் தடவை சொல்லி வந்திருக்கிறார்.

பணம் வேண்டும் என்றால் அடிப்படையான கொள்கைகளைப் பற்றி இஷ்டப்படி தாறுமாறாகப் பேசலாமா?

இவற்றையெல்லாம் பார்க்கும் போது, நமது சர்க்காரில் அதிகாரத்தில் இருப்பவர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு குழப்பத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. எந்த விஷயத்தைப் பற்றியும் யாருக்கும் தெளிவான கருத்தில்லை. இந்த நிலையில் பாரத தேசம் எப்படி முன்னேற முடியும்?

தேவரைச் சிறையிலடைத்த அநியாயம்

தமிழ் நாட்டுப் பொது மக்களுக்குச் சென்னை சர்க்காரிடம் ஒரு சந்தேகம் எழுந்துள்ளது. இவர்கள் நாட்டில் அமைதியை நிலைநாட்டத்தான் விரும்புகிறார்களா, அல்லது பயமும் பீதியும் கலவரமும் உண்டாக்கத்தான் விரும்புகிறார்களா? எதை உண்டாக்க விரும்புகிறார்கள் என்று தெரியாமல் திண்டாடுகிறார்கள்.

உண்மையில் அமைதியை நிலைநாட்ட விரும்பினால் அவர்கள் பசும்பொன் திரு முத்துராமலிங்கத் தேவர் அவர்களைக் கைது செய்திருக்க மாட்டார்கள்! அதிலும் மதுரை மாநகரில் இருபதினாயிரம் பேர்கள் பெருந்திரளாக வந்து கூடியிருந்த பெருங் கூட்டத்தில் அவர் அமைதியை நிலைநாட்டும்படி வேண்டிக் கொண்ட உருக்கமான வேண்டுகோளைக் கேட்டு, மக்கள் அமைதியாக இருப்பதற்கு எண்ணிய ஒரு சில மணி நேரத்துக்குள்ளாகவே, அன்றிரவே கைது செய்திருக்க மாட்டார்கள்!

காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி பூர்வாங்க மகாநாட்டில் தலைவர்கள் எல்லாம் ஒரே ஒரு விஷயத்தைத்தான் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டார்கள். "ராமநாதபுரம் ஜில்லாவில் இவ்வளவு கலவரம் நேர்ந்தும் திரு முத்துராமலிங்கத் தேவர் அமைதி இழக்காமல் பொறுமையோடிருப்பது மிக மிக வியப்பாக ஆச்சரியமாக இருக்கிறது" என்றார்கள். "அவர் பொறுமையோடிருப்பது மட்டுமல்ல, ராமநாதபுரம் ஜில்லா மறவர்களையும் ஹரிஜனங்களையும் அமைதியோடிருக்கும்படி வேண்டிக் கொண்டிருக்கிறார். அதனால்தான் இன்று நாட்டில் அமைதி நிலவுகிறது" என்று ஒருமுகமாகச் சொன்னார்கள். இது மகாநாட்டுத் தலைவர்களின் அபிப்பிராயம் மட்டுமல்ல, மதுரை ராமநாதபுரம் மக்கள் எல்லோருடைய அபிப்பிராயமுமாகும்!

கா. சீ. க. மகாநாட்டின் தலைவர்களை மகாநாட்டுப் பந்தலுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மதுரையில் கீழ மாசி வீதியில் நாடார்கள் முக்கியமாக வியாபாரம் செய்கிறார்கள். இந்த வீதி வழியாக ஊர்வலம் வந்தால் ஏதாகிலும் கலவரம் ஏற்படுமோ என்று போலீஸார் பயந்தனர். அதற்காக வேண்டி, நாடார்கள் வியாபாரம் செய்யும் வீதியில் ஊர்வலம் வராமல் வேறு வீதிகள் வழியே ஊர்வலத்தை நடத்திச் சென்றனர். இதற்கு திரு முத்துராமலிங்கத் தேவர் அவர்களே முன்னணியில் நின்று ஒத்துழைத்தார். இது ஒன்றே போதும், அவர் நாட்டில் அமைதியை நிலைநாட்ட எவ்வளவு ஆர்வம் கொண்டிருக்கிறார் என்பதற்கு.

திரு தேவர் அவர்கள் மாநாட்டுத் திறப்புரையைச் சுமார் மூன்று மணி நேரம் நிகழ்த்தினார். கொட்டு மழையில் இருபதினாயிரம் மக்கள் அமைதியோடிருந்து அவர் பேச்சைக் கேட்டனர். கட்டபொம்மன் காலத்திலிருந்து பாரத நாட்டுச் சுதந்திரம் பெற்றது வரை அதன் வரலாற்றைக் கூறி அவர் நிகழ்த்திய பேருரை ஓர் அற்புதம். இந்தப் பிரசங்கத்தினிடையே ராமநாதபுரம் கலவரங்களைப் பற்றி மிகத் தெளிவாகக் கூறினார். "பணம் படைத்த நாடார் சமூகத்தினர் இத்தகைய கலவரங்களைத் தூண்டி விடுகின்றனர். எனது உயிரையும் மாய்க்க விரும்பு

கின்றனர். நாடார் சமூகமே! என்னைக் கொல்வதினால் நீங்கள் நலமுற முடியும் என்றால் எனது உயிரையே பலி தருகிறேன்'' என்று இதயம் கனிந்து கூறினார்.

மேலும் மறவர்களையும் கேட்டுக் கொண்டார். ''அமைதியை இழந்து அராஜகத்தில் இறங்கினால் என் இதயத்தைப் பிளந்து என் இரத்தத்தைக் குடித்த பாவம் உங்களைச் சேரும்'' என்று கல்நெஞ்சம் கரைந்துவிடும் படி கூறினார்.

இப்படி அராஜகமும் பீதியும் போலீஸ் வெறியாட்டமும் தலைதூக்கி நிற்கும் வேளையில் அமைதியை நிலைநாட்டப் பாடுபட்டு வரும் சமாதான தூதரை, மறவர்களின் தலைவர் திரு முத்துராமலிங்கத் தேவரைக் கைது செய்தது ராஜதந்திரச் செய்கையாகாது. அதிலும் அமைதியை நிலைநாட்டியாக வேண்டும் என்று மிக வன்மையாக வற்புறுத்திப் பிரசங்கம் நிகழ்த்திய ஒரு சில மணி நேரங்களில் திரு தேவரைக் கைது செய்தது. இந்த நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்று சொல்வதே குற்றம்போல் தோன்றுகிறது!

திரு தேவர் போலீஸில் கைதியானதிலிருந்து மதுரை நகர மக்கள் மூகத்தில் ஈயாடவில்லை. எந்த நிமிஷத்தில் எத்தகைய கலவரம் மூளுமோ என்ற பீதியுடன்தான் மக்கள் நடமாடி வருகிறார்கள்! சர்க்கார் வெளி ராஜ்யங்களிலிருந்து வேண்டிய போலீஸ் படையினரை வரவழைத்துத் தக்க பந்தோபஸ்து அளிக்க ஏற்பாடு செய்துள்ளனர். இத்தகைய ஏற்பாடுகள் எத்தனை நாட்கள் நடத்திக்கொண்டிருக்க முடியும்?

ராமநாதபுரத்தில் ஓரளவு அமைதி நிலை ஏற்பட்டபிறகு திரு தேவர் அவர்களைக் கைது செய்தது ஏன் என்பதற்குப் பொதுமக்கள் ஒரு சமாதானம் சொல்லுகிறார்கள்.

முக்கியமாக, இந்தக் கலகமே தேர்தலிலிருந்து உண்டானது என்று எண்ணி வந்த ஜனங்கள் இப்படிச் சொல்லுகிறார்கள். முதன் மந்திரி திரு காமராஜர் மேல் தொடரப்பட்டுள்ள தேர்தல் வழக்கை முன்னணியில் நின்று நடத்துபவர் திரு முத்துராமலிங்கத் தேவர். சாட்சி விசாரணையே இல்லாமல் ஆட்சேபனை விண்ணப்பத்தை ஒரு சிறு காரணங்களை வைத்துத் தள்ளிவிட வேண்டும் என்று திரு காமராஜர் மதுரையில் தேர்தல் நீதிபதியையும் சென்னையில் ஹைகோர்ட்டையும் கேட்டுக்கொண்டு பெரிய வக்கீல்களை வைத்து வாதாடினார். அந்த ஆட்சேபனை தள்ளுபடியாகிவிட்டது. இனி சாட்சி விசாரணை நடந்தே தீரவேண்டும். திரு தேவர் அவர்களைக் கைது செய்துவிட்டால் ஒரு தொந்தரவு மிராது என்று எண்ணி இப்படிச் செய்ததாகப் பலர் ஊகிக்கிறார்கள். ஒரு காரணமும் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லாமல் அவர் பேரில் ஒரு குற்றச்சாட்டையும் சொல்லாமல் விசாரணையின்றிச் சிறையில் வைக்கும் சட்டத்தையும் உபயோகித்துக் கைது செய்ததனால் இப்படி எண்ணுகிறார்கள்.

தேர்தல்கள் மக்களை எவ்வளவு இழிவான நிலைகளுக்குக் கொண்டு செல்கிறது! தேர்தல்கள் காரணமாகச் சாதி உணர்ச்சி எழுந்தது. காங்கிரஸ் அட்ஹாக் கமிட்டியார் தேர்தல்களில் அபேட்சகர்களை நிறுத்துவதற்கு முன் காங்கிரஸ் அபேட்சகரின் தேச சேவையைப் பற்றிக் கணக்கெடுக்கவில்லை. அவரது உயர்ந்த குணங்களைப் பற்றிக் கணக்கெடுக்கவில்லை. திறமையைப் பற்றிக் கணக்கெடுக்கவில்லை. அதற்கு மாறாக, தொகுதியிலுள்ள மக்களில் பெருவாரியான மக்கள் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்று கணக்கிட்டனர். அபேட்சகரின் சாதியைக் கேட்டனர். அந்தச் சாதி மக்களிடம் அவருக்கு நல்லுறவு இருக்கிறதா என்று விசாரித்தனர். அவரால் எவ்வளவு பணம் செலவழிக்க முடியும் என்று தெரிந்து கொண்டனர். அவ்வளவுதான், அந்தத் தொகுதிக்கு அவரை அபேட்சகராக நிறுத்தினர். சாதி உணர்ச்சியை விரட்டப் பாடுபட்ட காங்கிரஸ் ஸ்தாபனத்திலே சாதி வெறியும், பணத் திமிரும் புகுந்ததால் இத்தகைய கொடுமைகள் நடைபெறுகின்றன! கலகத்துக்குப் பிறகு திரு காமராஜருடைய தேர்தல் விசாரணை நடக்கவிருக்கிறது. நேர்மையான முறையில் விசாரணை நடைபெறுதவாறு அவருடைய எதிர்க்கட்சியில் முக்கியஸ்தராக விளங்கும் ஒருவரைக் கைது செய்திருப்பது சற்றும் கௌரவம் தராத செய்கையாகும்.

இலங்கை சர்க்காரும் சுப்ரீம் கோர்ட்டும்

—கொழும்பு, செப்டம்பர், 29உ

இவ்வாரம் கொழும்பில் நடைபெற்ற ஒரு சம்பவம் இந்தியர்களுக்கிடையில் மிகுந்த பரபரப்பையும் கவலையையும் உண்டுபண்ணியிருக்கிறது. கொழும்பிலுள்ள வெற்றிவேல் நாடார் என்ற ஒரு இந்தியரின் வாசபர்மிட் காலாவதியாகியவுடன் அவரை இரண்டு வாரங்களுக்குள்ளாக இலங்கையை விட்டு வெளியேற வேண்டுமென்று உத்தரவிட்டு, இமிகிரேஷன் காரியாலயம் அவருக்கு நோட்டீஸ் கொடுத்திருந்தது. தமது கடையையும் சொத்துக்களையும் விற்றுக் கொண்டு இந்தியாவுக்குத் திரும்ப இரண்டு வாரத் தவணை போதாதென்றும், ஆகையால் தமக்கு நியாயமான தவணை கொடுக்குமாறு இமிகிரேஷன் இலாகாவுக்கு உத்தரவிட வேண்டுமென்றும் கோரி வெற்றிவேல் நாடார் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் கொடுத்தார். அந்த அப்பீல் செப்டம்பர் 23ம் தேதி சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தபொழுது, விசாரணையைச் சரியாக ஒரு மாதத்துக்கு ஒத்தி வைக்க வேண்டுமென்று சர்க்கார் தரப்பு வழக்கறிஞர் கோரினார். அதன்படி விசாரணை ஒரு மாதத்துக்கு ஒத்திப் போடப்பட்டது. இவ்விதம் விசாரணையை ஒத்திப்போட கோர்ட் அனுமதியைப் பெற்ற மறுநாள் காலை வெற்றிவேல் நாடாரை இமிகிரேஷன் அதிகாரிகள் திடீரென்று கைது செய்து இந்தியாவுக்கு நாடு கடத்துவதற்காகப் போலீஸ் ஸ்டேஷனில் அடைத்து வைத்தார்கள்.


உடனே வெற்றிவேல் நாடாரின் வழக்கறிஞர் சுப்ரீம் கோர்ட்டில் இன்னொரு மனுவைத் தாக்கல் செய்தார். மனுதாரின் அப்பீல் விசாரணையில் இருக்கையில், அதிலும் அந்த விசாரணையை அரசாங்கமே ஒத்தி வைக்கக் கோரியிருக்கையில் அதற்கிடையிலே மனுதாரரைக் கைது செய்து காவலில் வைத்திருப்பது சட்ட விரோதம். இது சுப்ரீம் கோர்ட்டின் அதிகாரத்தையே அவமதித்ததாகும். ஆகையால் வெற்றிவேல் நாடாரை உடனே கோர்ட்டில் ஆஜர் செய்யும்படியும் சட்ட விரோதமான காவலிலிருந்து அவரை விடுதலை செய்யும்படியும் உத்தரவிட வேண்டும். இமிகிரேஷன் அதிகாரிகளின் நடவடிக்கை கோர்ட்டை அவமதிப்பதாயிருந்தால் அதற்கு ஏன் தண்டனை விதிக்கலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு கோர வேண்டும். இவ்வாறு ஸ்ரீ வெற்றிவேல் நாடாரின் வழக்கறிஞர் மனுவில் வேண்டிக்கொண்டிருந்தார். இந்த மனுவை ஏற்றுக்கொண்ட சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் வெற்றிவேல் நாடாரை உடனே கோர்ட்டில் ஆஜர்செய்ய வேண்டுமென்று அவரைக் கைது செய்த அதிகாரிக்கு உத்தரவிட்டனர். இக்கடிதம் எழுதும்வரையில் திரு வெற்றிவேல் நாடார் கோர்ட்டில் ஆஜர் செய்யப்படவில்லை! பொது ஜனங்களின் சட்ட உரிமைகளை நிலைநிறுத்துவதற்காக ஏற்பட்ட சுப்ரீம் கோர்ட்டில் ஒருவருடைய குடியுரிமையைப் பற்றிய வழக்கு விசாரணையிலிருக்கும்பொழுதே அந்த நபரைப் போலீசார் கைதுசெய்து நாடு கடத்த முயற்சி செய்வதாயின் இது இலங்கையிலுள்ள இந்தியர்களுக்கு மிகுந்த கவலையைக் கொடுக்கக் கூடிய விஷயமாகும்.


* * *

மலாயாவில் சமீப காலம் வரையில் இலங்கை ஹைகமிஷனராயிருந்த ஸ்ரீ மாணிக்கம் சரவணமுத்து இவ்வாரம் கொழும்பு விவேகானந்த சபையில் ஒரு அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினார். அப்பொழுது தமிழ் கலாசாரம் வேத காலத்துக்கு முற்பட்ட கலாசாரமென்றும், உலகில் மிக மிகத் தொன்மை வாய்ந்தது என்றும், தமிழ்க் கலாசாரத்தையும் தமிழ் மொழியையும் ஓராயிரம் தனிச் சிங்களச் சட்டங்கள் வந்தாக்கூட அழிக்க முடியாதென்றும் அவர் கூறினார். மொஹஞ்சதரோ நாகரிகம் திராவிட நாகரிகமென்பதில் சந்தேகத்துக்கு இடமேயில்லையென்று பாரதப் பிரதமர் நேரு தமது புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதை ஸ்ரீ சரவணமுத்து சுட்டிக்காட்டிக் கிரேக்க, பாபிலோனியா, எகிப்திய நாகரிகங்களெல்லாம் அழிந்த பின்னரும் தமிழ் நாகரிகம் இன்றைக்கும் நிலைத்திருப்பது கால வெள்ளத்தையெல்லாம் வெல்லும் மகத்தான சக்தி தமிழ் நாகரிகம் ஒன்றுக்குமட்டுமே உண்டு என்பதை உலகறிய நிரூபணம் செய்கிறது என்றார்.

இலங்கைத் தோட்டங்களில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர் ஓய்வு பெறும் பொழுதும், வேறு காரணங்களினால் அவர்களுடைய இடம் காலியாகும் பொழுதும் அந்த இடங்களுக்கு இனி இலங்கையர்களையே நியமிக்க வேண்டுமென்று தொழில் மந்திரி ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார். தோட்ட வேலைகளை இலங்கையர் மயமாக்க வேண்டுமென்பதற்காகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஒரு இந்தியத் தொழிலாளியின் இடம் காலியானால் அந்த இடத்துக்கு அவருடைய பிள்ளையையோ அல்லது வேலையில்லாமல் தோட்டத்திலிருக்கும் இதர இந்தியர்களையோ நியமிப்பதென்பது இப்பொழுது வழக்கமாயிருந்து வருகிறது. இனி, இவ்விதம் செய்யாமல் சிங்களவர்களை வேலையில் அமர்த்துமாறு தோட்ட முதலாளிகளைக் கட்டாயப்படுத்தத் தொழில் மந்திரி உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இந்த உத்தரவு தோட்டங்களிலிருக்கும் இந்தியர்களின் சந்ததியார்களைக் கடுமையாகப் பாதிப்பதாயிருக்கும் என்று அஞ்சப்படுகிறது.

—ரஜனி





புனர்ஜன்மம்

— எரவாடா உபவாசம் —

ராஜாஜி

ஹரிஜனங்களுடைய விடுதலைக்கு அடிகோலிய உண்ணாவிரதத்தின் வெள்ளி விழா இந்த வாரம்.

இப்போதெல்லாம் பல பேர் பல்வேறு குறைகளுக்குப் பரிகாரம் கிடைக்க வேண்டும் என்று கோரி உண்ணாவிரதம் இருப்பது பற்றிக் கேள்விப்படுகிறோம். வாசிக்கவும் செய்கிறோம். இந்தக் குழப்பத்தில், காந்திஜி மேற்கொண்ட உண்ணாவிரதத்தின் முக்கியத்தையும் உண்மையான தன்மையையும் நாம் புரிந்து கொள்வது கடினம். உண்ணாவிரதத்தைப் பற்றி அடிக்கடி கேள்விப்படுவதால், அது சகஜமாகி விடுகிறது. அதனால் உடலுக்கு ஏற்படும் வேதனையைக்கூட நாம் நன்கு அறிந்து கொள்வதில்லை.

1924-ம் வருஷம் செப்டம்பர் மாதம் காந்திஜி 21 நாட்கள் உண்ணாவிரதம் இருந்த போது நான் அருகே இருந்தவன். அதனால் அவரது சரீரம் எவ்வளவு வேதனைக்கு உள்ளாயிற்று என்பதையும், அது எவ்வளவு பயங்கரமான ஆபத்து என்பதையும் நான் நேரில் பார்த்தேன். இந்தியா முழுவதுமுள்ள கோடிக்கணக்கான மக்களின் எதிர்கால வாழ்வு காந்திஜி உயிர்வாழ்வதையே பொறுத்திருந்தது. நல்லவேளையாக அந்தப் பெரிய ஆபத்திலிருந்து தப்பினார்; நூலிழையில் தப்பினார்.

எட்டு வருஷங்களுக்குப் பிறகு, 1932 செப்டம்பர் மாதம், எரவாடா சிறையில் காந்திஜி இறுதி வரையில் உண்ணாவிரதம் இருக்க உறுதி கொண்டுள்ளார் என்ற செய்தியைக் கேட்டதும் என் மனம் துடித்துவிட்டது. இந்தியாவில் உள்ள சட்டசபைகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் விஷயமாகப் பிரிட்டிஷ் சர்க்கார் ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்து விட்டனர். மகா வல்லமையும் பிடிவாத குணமும் உள்ள பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் தீர்மானத்தை மாற்றிக் கொண்டால்தான் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட முடியும் என்று காந்திஜி அறிவித்திருந்தார். இதைக் கேட்டதும், என் மன வேதனையைத் தெரிவித்து, காந்திஜிக்கு ஒரு தந்தி கொடுத்தேன். அதற்கு அவர் கீழ் வருமாறு பதில் தந்தி கொடுத்திருந்தார்:

''வேதனை அடைவதற்குக் காரணமில்லை. அதற்கு மாறாக, தாழ்த்தப்பட்டவர்களின் நலனுக்காக இறுதி சத்தியாக்கிரகம் புரிய ஒரு தோழருக்கு இறைவன் ஒரு சந்தர்ப்பம் அளித்திருப்பதைக் குறித்து நீர் பெரு மகிழ்ச்சி அடைவீர் என்று எதிர்பார்க்கிறேன். உண்ணாவிரதத் தேதியை மாற்றுவதற்கு இடமில்லை.''

உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கு முன் அவரைச் சிறையில் கண்டு பேச அனுமதிக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொண்டேன். என் முயற்சி பலிக்கவில்லை. அரசியல் சம்பந்தமற்ற ஒரு சில பம்பாய்ப் பிரமுகர்கள் செப்டம்பர் 18-ம் தேதி காந்திஜியைக் கண்டு பேச அனுமதிக்கப்பட்டனர். ஆனால் எனக்கு அனுமதி கொடுக்கச் சர்க்கார் மறுத்துவிட்டார்கள். தேவதாஸ் காந்தியும் அப்படியே அனுமதிக்கப்படவில்லை. செப்டம்பர் 20-ந் தேதி உண்ணாவிரதம் ஆரம்பமான பிறகுதான் சர்க்கார் மனத்தை மாற்றிக் கொண்டு, என்னையும் மற்றவர்களையும் காந்திஜியைச் சந்திக்க அனுமதித்தனர்.

பிரிட்டிஷ் சர்க்காரின் அறிக்கையில் ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருந்தது. அம்பேத்கர் கோஷ்டியின் சம்மதத்துடன் இருதரப்பினரும் ஒரு முடிவுக்கு வரும் பட்சத்தில், அந்த முடிவை ஏற்றுக் கொள்வதாகப் பிரிட்டிஷ் சர்க்கார் அறிவித்திருந்தனர். ஆனால் டாக்டர் அம்பேத்கரின் குணமும், கடுமை கண்டிப்பும், பிடிவாதமும் எங்களுக்குத் தெரியும்.

யமன் எதிரில் நின்றதாகக் கண்டோம். இந்தியா முழுதும் ஆடவர்களும் பெண்களும் கலங்கித் தவித்துக் கொண்டிருந்தார்கள். இக் காலத்து ஜனங்கள், இந்தியா எப்படி, என்னென்ன முறைகளைக் கைக்கொண்டு இன்றைய நிலையை அடைந்துள்ளது என்பதை அறியார்கள். இந்தியா எவ்வளவு கஷ்டங்களுக்கும் கவலைகளுக்கும் உள்ளாக வேண்டியிருந்தது என்பதையும் அறியார்கள். எனவே அதன் சம்பந்தமான முழுக் கதையையும்நான் சொல்லுவது நல்லது. அந்தக் கதை 1931 நவம்பர் மாதம் 13-ந் தேதி ஆரம்பமாகிறது. அன்று தான் லண்டன் வட்டமேஜை மகாநாட்டில் சிறுபான்மையோர் கமிட்டியின் கடைசிக் கூட்டம் நடந்தது. அதில் காந்திஜி செய்த பிரசங்கம் மறக்க முடியாததாகும். அவர் அந்தக் கமிட்டியின் அக்ராசனராக இருந்தார். இந்தியர்களிடையே ஒற்றுமை குலையாமல் தவிர்க்க அவர் மிகவும் கஷ்டப்பட்டார். ஆனால் முதலிலிருந்து கடைசி வரையில் அவருக்கு விரோதமாகச் சதி வேலை செய்ததால், அம் முயற்சியில் அவர் வெற்றி பெற முடியவில்லை. அதனால் அவர் மிகுந்த மனவேதனை அடைந்தார்.

அப்போது அவர் சொன்னார்:

'' மற்றச் சிறுபான்மையோரின் கோரிக்கைகளை நான் அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால், ஹரிஜனங்கள், (அந்தக் காலத்தில் இந்தப் பெயர் வழங்கவில்லை.) தீண்டாதார் சார்பில் விடுத்துள்ள கோரிக்கை இரக்கமற்ற

கொடுமையாக எனக்குத் தோன்றுகிறது. கொடிய ஒரு தடையை நிரந்தரமாக நிலைக்கும்படி செய்வதாக இருக்கிறது. சீக்கியர்கள் என்றென்றும் சீக்கியர்களாக இருக்கலாம். முஸ்லிம்களோ, ஐரோப்பியர்களோ என்றென்றும் முஸ்லிம்களாகவும், ஐரோப்பியர்களாகவும் இருக்கலாம். ஆனால், தீண்டாதார் என்றென்றும் தீண்டத் தகாதவர்களாகவே இருக்கவேண்டுமா? தீண்டாமை வாழ்வதாக இருப்பின் ஹிந்து மதம் அழிவதையே நான் விரும்புவேன். டாக்டர் அம்பேத்கரிடத்திலும் தீண்டாதார்களை உத்தாரணம் செய்ய வேண்டும் என்ற அவரது லட்சியத்திலும், அவரது திறமையிலும் எனக்கு மிகுந்த மதிப்பு உண்டு. ஆனால் இந்த விஷயத்தில் அவர் செய்தது பெரும் தவறு என்றே நான் சொல்ல வேண்டும். ஒரு வேளை தாழ்த்தப்பட்டவர் என்ற நிலையில் அவர் பெற்ற மோசமான அனுபவங்கள் அவர் புத்தியைக் குழப்பி விட்டிருக்கலாம். இந்த அநீதியை நான் தனி ஒருவனே எதிர்க்கும்படி நேர்ந்தாலும் என் உயிரைக் கொடுத்தாவது அதை எதிர்த்து நிற்பேன் என்று நிச்சயமாகக் கூறுகிறேன்.''

இவ்விஷயம் கடைசியாக ஸ்ரீ ராம்சே மெக்டொனல்டின் தீர்ப்புக்கு விடப்பட்டது. காந்திஜி இந்திய மக்களிடையில் ஒற்றுமை உணர்ச்சியை பலப்படுத்தும் உத்தேசத்துடன் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். ஆனால், அவர் இந்தியாவில் வந்து இறங்கியதும், அவரைக் கைதுசெய்துசிறைப்படுத்திவிட்டார்கள்.

பல மாதங்கள் சென்றன; ஆனால் யாதொரு முடிவும் வெளியாகவில்லை. 1932 மார்ச் மாதம் காந்திஜி, இந்தியா மந்திரி சர் சாமுவல் ஹோருக்கு ஒரு கடிதம் எழுதினார். ஹரிஜனங்கள் சம்பந்தமான அநீதித் திட்டத்தை தாம் உயிரைக் கொடுத்தாயினும் எதிர்ப்பதாக வட்டமேஜை மகாநாட்டில் கூறியது ஒரு சபதமாகும். வெறும் அலங்கார வார்த்தைகள் அல்ல என்றும், திடீரென்று ஏற்பட்ட உணர்ச்சிப் பெருக்கால் கூறப்பட்டவை அல்ல என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

''நான் இந்தியாவுக்குத் திரும்பியதும் தனித் தொகுதி முறையை எதிர்த்து, குறிப்பாக, தாழ்த்தப் பட்டவர்களுக்குத் தனித் தொகுதி முறையை எதிர்த்துப் பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டலாமென நம்பியிருந்தேன். ஆனால், அதற்கு இடமில்லாமல் காரியம் வேறு விதமாக நடந்து விட்டது. தீண்டாதாருக்குத் தனித் தொகுதி முறையைச் சிருஷ்டிப்பதென்று பிரிட்டிஷ் சர்க்கார் முடிவு செய்வார்களாயின், நான் சாகும்வரையில் உண்ணாவிரதம் இருந்துதான் தீர வேண்டும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். என் மனச்சாட்சியின் கட்டளை அதுதான். அந்தக் கட்டளையை மீறும் துணிச்சல் எனக்கு இல்லை. எனக்கு புத்தி சுவாதீனமில்லை. பைத்தியக்காரன் என்கிற பட்டம் எனக்கு ஏற்படுவதாக இருந்தால் கூட நான் அந்தக் கட்டளையை நிறைவேற்றித்தான் தீர வேண்டும். ஆனால் தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தொகுதியைச் சிருஷ்டிக்கும் உத்தேசம் பிரிட்டிஷ் சர்க்காருக்கு இல்லை என்றும், எனக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பீதிக்குச் சிறிதும் காரணமில்லை என்றும், இன்னும் நம்பி வருகிறேன்.''

இவ்விதம் காந்திஜி சர் சாமுவல் ஹோருக்கு எழுதிய கடிதத்தில் எழுதியிருந்தார். அதற்கு சாமுவல் ஹோர் ஏப்ரல் மாதம் பதிலளித்தார். அவ் விஷயமாக இன்னும் யாதொரு முடிவும் செய்யப்படவில்லை. ஒரு முடிவுக்கு வருமுன் காந்திஜியின் கருத்துகள் ஆலோசிக்கப்படும் என்று அவர் தமது பதிலில் எழுதினார்.

1932-ம் வருஷம் ஜூலை மாதத்தில் கூடச் சிறையில் அவ்விஷயமாக சம்பாஷணை நடந்த போது பிரிட்டிஷ் மந்திரி சபையிடமிருந்து நீதி கிடைக்காது என்று சர்தார் பட்டேல் காந்திஜியிடம் கூறினார். ஆனால், காந்திஜிக்கு பிரிட்டிஷ் சர்க்காரிடம் நம்பிக்கை இருந்தது. ''மெக்டொனல்டு டோரிகளை எதிர்த்து நிற்பார்'' என்றார் காந்திஜி. ''நீங்கள் கூறுவது தவறு. அவர்கள் எல்லாம் ஒரேகூட்டம்'' என்று குறிப்பிட்டார் பட்டேல். சர்தார் பட்டேல் கூறியதைக் காந்திஜி அங்கீகரிக்க

அண்ணல் காந்திஜிக்குத் திருமதி மீராபஹன் சர்க்கா செப்பனிடுவதில் உதவி புரிகிறார்.



வில்லை. ''மெக்டொனல்ட் அவருடைய நாட்டின் நலனுக்காக டோரிகள் கூட்டு மந்திரி சபையில் சேர்ந்திருந்தாலும், தமது வாழ்க்கையின் நீண்ட காலக் கொள்கைகளைக் காற்று வாக்கில் விட்டுவிட மாட்டார்'' என்றார் காந்திஜி.

1932 ஆகஸ்டு 17-ந் தேதி பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் முடிவைத் தெரிவித்தனர். முஸ்லிம்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் தனித் தொகுதிகள் இருக்க வேண்டும் என்றே முடிவு செய்து விட்டார்கள். மறுநாளே, அதாவது 18-ம் தேதியே காந்திஜி பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு, செப்டம்பர் மாதம் 20-ம் தேதியிலிருந்து மரணம் வரையில் காலவரம்பின்றி உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்து விட்டார். காந்திஜி பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு எழுதியதாவது: ''1931 நவம்பர் 13-ம் தேதி சிறுபான்மையோர் கமிட்டியில் நான் கூறியபடியும், சர் சாமுவல் ஹோருக்கு எழுதியபடியும், என் உயிரைக் கொடுத்தாயினும் உங்கள் தீர்ப்பை எதிர்க்க வேண்டியவனாக இருக்கிறேன். அவ்விதம் செய்ய இப்போது ஒரு வழிதான் இருக்கிறது. உப்பு அல்லது சோடா கலந்தோ அல்லது கலக்காமலோ தண்ணீர் மாத்திரம்தான் சாப்பிடுவேன். மற்றப்படி எவ்வித உணவும் சாப்பிட மாட்டேன். பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் முடிவை மாற்றிக் கொண்டு தாழ்த்தப்பட்டோர் தனித்தொகுதிகள் திட்டத்தை வாபஸ் செய்து கொள்வார்களாயின் உண்ணாவிரதத்தை விட்டுவிடுவேன். இல்லையேல் உயிர் போகும் வரையில் உபவாசம் இருப்பேன்''

செப்டம்பர் 3-ந் தேதி பிரதம மந்திரியிடமிருந்து பதில் வந்தது. அந்தப் பதிலின் சாரமாவது :

''தங்களுடைய கடிதம் வந்து சேர்ந்தது. அது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தையும் வருத்தத்தையும் உண்டு பண்ணியிருக்கிறது. சட்டசபையில் நியாயமான அளவு ஸ்தானங்கள் பெற வேண்டியது தாழ்த்தப்பட்டவர்களின் உரிமையாகும். அந்த உரிமையைப் பாதுகாக்க வேண்டியது தங்கள் கடமை யென்று பிரிட்டிஷ் சர்க்கார் கருதுகின்றனர். ஹிந்து சமூகத்திலிருந்து தாழ்த்தப்பட்டவர்களைப் பிரித்து விடும்படியாக எதுவும் செய்யக் கூடாது என்பதில் பிரிட்டிஷ் சர்க்கார் ஜாக்கிரதையாகவே இருந்து வருகின்றனர். தாழ்த்தப்பட்டோர் ஹிந்து தொகுதியில் மற்றவர்களுடன் வோட்டு கொடுக்கலாம். எனினும், முதல் இருபது வருஷங்கள் வரையில் தாழ்த்தப்பட்டோருக்கு, அவர்களுடைய நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்கச் சில விசேஷத் தொகுதிகள் இருக்க வேண்டும். அவற்றில் அவர்கள் மட்டும் வோட்டு செய்வார்கள்.''

பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்குக் காந்திஜி உடனே பதிலளித்தார். ''தாழ்த்தப்பட்டோருக்கு ஹிந்துக்கள் தொகுதியிலும் விசேஷத் தொகுதியிலும் வோட் இருப்பதால் மாத்திரம் தாழ்த்தப்பட்ட வகுப்பினரோ, ஹிந்து சமுதாயமோ பிளவுபட்டுச் சீர்குலையாமல் தடுத்துவிட முடியாது. ஆனால், ஹிந்து சமூகத்தைச் சேர்ந்தவர்களாகத் தாழ்த்தப்பட்டோர் இருக்கும் வரையில், சிறிது காலமாக இருந்தால்கூட, சட்டபூர்வமாக அவர்களைப் பிரித்து வைப்பதைத்தான் நான் எதிர்க்கிறேன்.''

செப்டம்பர் 20-ந் தேதி காந்திஜி பிரார்த்தனை செய்துவிட்டுச் சரியாக மணி பன்னிரண்டு அடித்ததும் உண்ணாவிரதம் ஆரம்பித்தார். தேசம் முழுவதும் மக்கள் அன்று சாப்பிடவில்லை. எல்லாரும் பிரார்த்தனை செலுத்தினார்கள். கவி தாகூர் உட்படச் சகலரும் இந்தத் தடவை மகாத்மாவை இழந்து விடுவோமோ என்று கலங்கினர்.


உடனே பம்பாயில் மகாநாடு கூட்டினோம். நாட்டின் க்ஷேமத்துக்காக மகாத்மா உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் பாதுகாக்க வழி என்ன என்பதைப் பற்றி ஆலோசித்தோம். பிரிட்டிஷ் சர்க்காரும் டாக்டர் அம்பேத்கரும் எங்களுக்கு விரோதமாக இருந்ததால் சமரசமுயற்சியை மேற்கொண்ட நாங்கள் காலனுடன் போட்டி போடவேண்டியிருந்தது. தாமும் ஜயகரும் சேர்ந்து ஒரு திட்டம் தயாரித்திருப்பதாக சர் தேஜ் பகதூர் சாப்ரு கூறினார். அவர்கள் அந்தத் திட்டத்தை மகாநாட்டில் சமர்ப்பித்தார்கள்.

அவர்களுடைய திட்டம் இதுதான் :

சில ஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டும்; அந்த ஸ்தானங்களுக்கு ஹரிஜனங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த ஸ்தானங்களில் குறிப்பிட்ட ஒரு தொகைக்கு ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த வாக்காளர்கள் ஒவ்வொரு ஸ்தானத்துக்கும் பூர்வாங்கத் தேர்தலில் மூன்று பேர்களைப் பொறுக்கி எடுக்க வேண்டும். இறுதித் தேர்தலில், அந்த சமூகத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் உட்பட ஹிந்து வாக்காளர்கள் யாவரும் சேர்ந்து அந்த மூன்று பேர்களில் யாருக்கு வேண்டுமாயினும் வோட்டு கொடுக்கலாம். ஆனால் அந்த மூன்று பேர்களில் எவருக்குப் பெரும்பான்மையான வாக்குகள் கிடைக்கின்றனவோ அவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் போதிய பாதுகாப்பாக இருக்கும். அதே சமயம், அம்முறை கூட்டுத் தொகுதி முறைக்கும் விரோதமாக இராது.

இதுதான் சாப்ரு-ஜயகரின் திட்டம். இதை காந்திஜி ஒத்துக் கொள்வாரா என்று தேஜ் பகதூர் சாப்ரு தயங்கினார். அவ் விஷயத்தை முன் கூட்டியே நான் ஊகித்துக் கூற முடியுமென சர் புருஷோத்தம தாஸ் நம்பினார். அத் திட்டத்துக்கு டாக்டர் அம்பேத்கர் இசைந்தால், அதை காந்திஜியும் அங்கீகரிக்கும்படி செய்ய முடியுமென்று நான் மகாநாட்டில் கூறினேன். ஏனெனில், முடிவில் ஹிந்து சமுதாயத்தார் அனைவரும் ஹரிஜனங்கள் உட்பட வாக்கு கொடுப்பார்கள். ஆனபடியால் சமூக ஒற்றுமைக்கு அந்தத் திட்டம் முரணாக இல்லை அல்லவா? நான் உத்தேசமாக அவ்விதம் கூறியதுகூட எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. அத்திட்டத்தைப் பொதுவாக டாக்டர் அம்பேத்கர் அங்கீகரித்தார். சில்லறை ஷரத்துக்களை யொட்டிப் பிறகு தமது முடிவைத் தெரிவிப்பதாகக் கூறினார். உடனே நாங்கள் புனாவுக்கு ஓடினோம்.

சிறைக்கு வெளியில் உள்ள ஒரு ஆபீஸ் அறையில் காந்திஜியைச் சந்தித்துப் பேசினோம்,



மக்களின் இன்றைய வாழ்விலே விளம்பரக் கலை முக்கிய ஸ்தானம் பெற்று விளங்குகிறது. வியாபாரம் ஓங்கி வளர இந்தக் கலை பெருதவி புரிகிறது. இன்று விளம்பரக் கலை பல நவீன முறைகளிலே மக்களின் மனத்தைக் கவரும்படியாக விருத்தியாகி வருகிறது. இத்தகைய அருங் கலையில் ஈடுபட்டுள்ளவர்கள் நிறுவிய 'விளம்பரக் கலைக் கழகம்' தனது முதலாண்டு விழாவை ஒரு வாரம் வெகு விமரிசையாகக் கொண்டாடியது இவ்விழாவை யொட்டி விளம்பரக் கலைப் பொருட்காட்சி வைத்திருந்தார்கள். அழகான கண்ணைக் கவரும் மலரொன்றும் வெளியிட்டிருக்கிறார்கள். சென்னை தென்னிந்திய வர்த்தகசபை மண்டபத்தில் செப்டம்பர் 23-ந் தேதி நிகழ்ந்த இவ்விழாவை டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் துவக்கி வைத்துப் பேசுவதையும், பொருட்காட்சியில் ஒரு பகுதியையும், இவ் விழாவுக்கு விஜயம் செய்திருந்த பிரமுகர்களையும், தொழிலதிபர்களையும் படத்தில் காணலாம்.

சாப்ரு காந்திஜிக்குத் திட்டத்தை விளக்கிக் கூறினார். காந்திஜி சில கேள்விகள் கேட்டார். அக் கேள்விகளுக்குப் பதில் அளித்த பிறகு, "திட்ட விவரங்களை எழுதிக் கொடுங்கள். நான் அவற்றைப் பரிசீலனை செய்யவேண்டும்" என்றார் காந்திஜி. அவர், டாக்டர் அம்பேத்கர், ஸ்ரீ எம்.ஸி ராஜா இருவரையும் பார்த்துப் பேச விரும்பினார். அவ்விருவரும் ஹரிஜனங்களில் இரு பிரிவுகளுக்குத் தலைவர்களாக இருந்தனர்.

நாங்கள் தயாரித்த திட்டத்தை காந்திஜியிடம் கொடுத்தபோது, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் சட்டபூர்வமாக ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதைத் தாம் ஆட்சேபிக்கவில்லை என்றார் காந்திஜி. எனினும் சட்டபூர்வமான வற்புறுத்தலின்றி ஜாதி ஹிந்துக்கள் தாங்களாக வலுவில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைத் தேர்ந்தெடுப்பதையே தாம் மிக விரும்புவதாகக் கூறினார். ஆனால், அவர்களுக்கு இரண்டு விதமாகப் பிரித்து ஸ்தானங்கள் ஒதுக்கி வைப்பதை காந்திஜி ஆட்சேபித்தார். டாக்டர் அம்பேத்கர் அத் திட்டத்துக்கு இசைந்தால், அவர்களுக்கென்று ஒதுக்கி வைத்த எல்லா ஸ்தானங்களுக்குமே பூர்வாங்கத் தேர்தலும் இறுதித் தேர்தலும் சாப்ரு திட்டத்தின்படி நடத்தி முடிவு செய்வதையே அவர் விரும்பினார். அந்த யோசனையை டாக்டர் அம்பேத்கர் ஒத்துக் கொண்டார். சில்லறை விஷயங்களை மகாநாட்டில் விவாதித்து முடிவு செய்யும்படி விட்டுவிட்டு காந்திஜி திரும்பிச் சென்றார்.

இந்த விவாதங்கள் எளிதில் முடியவில்லை. சில நாட்கள் சென்று விட்டன. ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களின் தொகையை, தாழ்த்தப்பட்டோரின் ஜனத்தொகைக்குச் சரியாக அதிகப்படுத்த வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். ஜனத்தொகைப் புள்ளி விவரங்களைத் தக்கர்பாபா நன்றாகப் பரிசோதனை செய்தார். எனவே, மெக்டொனால்டின் தீர்ப்பில் ஒதுக்கப்பட்ட ஸ்தா

னங்களின் தொகை 71 ஆக இருந்தது. நம்முடைய ஒப்பந்தப்படி ஜனத்தொகைக் கணக்கு பார்த்தபோது அந்த ஸ்தானங்களின் தொகை 147 ஆக உயர்ந்து விட்டது.

ஒவ்வொரு ஸ்தானத்துக்கும் பூர்வாங்கத் தேர்தலில் நிற்பவரின் தொகை இரண்டாக இருக்க வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கர் கூறினார். அத் தொகை ஐந்தாக இருக்க வேண்டும் என்று காந்திஜி விரும்பினார். கடைசியில் சமரசமாக நாலு என்று நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால், எப்படி, எப்போது மேற்படி திட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, ஒரே தொகுதியில் எல்லா இடங்களிலும் நடப்பது போல் சாதாரணத் தேர்தலை நடத்த ஆரம்பிப்பது என்பதுபற்றி வெகு நேரம் விவாதம் நடந்தது.

பத்து வருஷங்களுக்குப் பிறகு, தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையே பொதுஜன வோட்டு எடுத்துத்தான் மேலே குறிப்பிட்ட திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கர் வற்புறுத்தினார். பொதுவாக எல்லோருமே எதிர்த்தனர். அதனால் பிளவுகளும் துவேஷப் பிரசாரமும் நடைபெறும் என்று எதிர்த்தனர்.

விவரங்களை அப்போதைக்கப்போது காந்திஜிக்கு அறிவித்து வந்தோம். தாழ்த்தப்பட்டோரிடையே பொதுஜன வாக்கெடுப்பை அவர் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் டாக்டர் அம்பேத்கர் கூறிய பத்து வருஷம் மிகவும் அதிகம் என்றும், ஐந்து வருஷங்களுக்குப் பிறகு அத் திட்டத்தைக் கைவிட்டு விட வேண்டும் என்றும் காந்திஜி வற்புறுத்தினார். அந்தக் கெடுவைப் பத்து வருஷமாக நீடிக்கும்படி டாக்டர் அம்பேத்கர் காந்திஜியிடம் சென்று அவரை ரொம்பக் கேட்டுக் கொண்டார். ஆனால், அவரது முயற்சி பலிக்கவில்லை. "ஐந்து வருஷம் அல்லது என் உயிர்" என்று காந்திஜி கண்டிப்பாகக் கூறி விட்டார். டாக்டர் அம்பேத்கர் அதிருப்தியுடன் திரும்பி விட்டார்.

பத்து வருஷ கெடு வேண்டும் என்பதில் டாக்டர் அம்பேத்கர் மிகப் பிடிவாதமாக இருந்தார். இந்த ஒரு விஷயமாக, சமரச முயற்சிகள் யாவும் வீணாகி விடும் போல் தோன்றியது. இவ்விஷயத்தில் விட்டுக் கொடுக்கும்படி டாக்டர் அம்பேத்கரை எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தபோது, காந்திஜியின் நிலைமை கவலைக்கு இடமாகி வருகிறது என்ற செய்தியைத் தேவதாஸ் காந்தி கொண்டு வந்தார். காந்திஜியின் நிலை ஆபத்தான கட்டத்துக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதை டாக்டர்கள் கில்டரும் பட்டேலும் அபிப்பிராயப்பட்டனர். மகாநாட்டில் இருள் சூழ்ந்தது. எல்லோரும் சோகத்தில் ஆழ்ந்தனர்.

திடீரென்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது. நான் டாக்டர் அம்பேத்கரை ஒரு தனி அறைக்கு அழைத்துச் சென்று என் யோசனையைக் கூறினேன். "இந்தச் சிக்கலை அறுத்து விடுவோம். கால கெடுவே வேண்டாம். ஐந்து வருஷமும் வேண்டாம், பத்து வருஷமும் வேண்டாம். பொதுஜன வாக்கெடுப்பு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. நாம் பரஸ்பரம் ஒப்புக் கொள்ளும் போது, எந்தத் தேதியானாலும் சரி மேற்படி திட்டம் ரத்தாகும்" என்றேன்.

இந்த யோசனைக்கு அம்பேத்கர் இசைந்தார். இதை காந்திஜி நிச்சயமாக ஒப்புக் கொள்வார் என்று கூறினேன். எல்லோருக்கும் நம்பிக்கை உண்டாயிற்று. உடனே காந்திஜியைப் போய்ப் பார்க்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டார்கள். நான் அவசரம் அவசரமாகச் சென்று அந்த யோசனையை காந்திஜியிடம் விவரித்துக் கூறினேன். "கால கெடு சீக்கிரமாக வரலாம் அல்லது தாமதித்து வரலாம். எல்லாம் பரஸ்பர சம்மதத்தைப் பொறுத்திருக்கிறது" என்றேன் "பேஷ்" என்று ஒரே வார்த்தையில் காந்திஜி பதிலளித்தார்.

மகாநாட்டில் ஏற்பட்ட கவலை தீர்ந்தது. ஒப்பந்தத்தில் நாங்கள் எல்லோரும் கையெழுத்திட்டோம். மகிழ்ச்சியின் அறிகுறியாக டாக்டர் அம்பேத்கரும் நானும் பௌண்டன் பேனாக்களை மாற்றிக் கொண்டோம்.


ஒப்பந்தத்தின் விவரம் லண்டனுக்குத் தந்தி மூலம் அனுப்பப் பட்டது. அச்சமயம் பிரதம மந்திரியும் மற்ற மந்திரிகளும் லண்டனில் இல்லை. செய்தி கிடைத்ததும் அவர்கள் லண்டனில் பிரதம மந்திரியின் ஜாகைக்கு ஓடி வந்தார்கள். சில மணி நேரத்தில் ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதாக பிரிட்டிஷ் சர்க்கார் அறிவித்தனர். செப்டம்பர் 26-ந் தேதி காந்திஜி உண்ணாவிரதத்தை நிறுத்தினார். அடுத்தநாள் காந்திஜியின் ஜன்ம நட்சத்திரம். இந்த உபவாசம் தீர்ந்தது ஒரு புனர் ஜன்மமே யாயிற்று.

அந்த வாரத்தில் இந்தியாமுழுதும் அதற்கு முன் என்றும் இராதவாறு கவலையில் ஆழ்ந்தது. அந்தக் கவலை தீர்ந்தபோது நாடெங்கும் மக்கள் கரைகாணாத மகிழ்ச்சி அடைந்தனர். பிரிட்டிஷ்சர்க்கார் தாமதமின்றி நடவடிக்கை எடுத்துக் கொண்டதற்காக எங்கும் மக்கள் அவர்களைப் பாராட்டினர். மகாத்மாவின் சக்தியை பிரிட்டன் உணர்ந்து கொண்டது என்பதை இந்தச் சம்பவம் நிரூபித்தது. இந்தச் சம்பவத்தின் வெள்ளி விழா இந்த வாரம்.

அவ்விஷயமாக பிரிட்டனுடன் நமக்கிருந்த சண்டையைப் பூனா ஒப்பந்தம் தீர்த்துவிட்டது. எனினும், அதனுடன் நம் பேரில் பெரும் பாரம் வைக்கப்பட்டது. தேசம் முழுவதும் உள்ள பண்டைய சம்பிரதாயத்தையும் மூடக் கொள்கையையும் எதிர்த்து நாம் கடுமையான போராட்டம் நடத்தும்படியான கடமை ஏற்பட்டு விட்டது.

தேசம் முழுவதும் அப் போராட்டம் இருந்து வருகிறது. நகரங்களில் இருப்பதைக் காட்டிலும் கிராமங்களில் இன்னும் கடுமையாக இருக்கிறது. நாம் தூங்கவில்லை. கடமையை மறக்கவில்லை. நாம் அவ்விஷயமாக இதுவரையில் ஏதாவது சாதித்திருக்கிறோமா, இல்லையா என்பது பற்றிப் பாரபட்சமற்றவர்கள் தான் தீர்ப்புக் கூற வேண்டும். ஆனால், இது போன்ற பிரச்னைகள் உலகத்தில் பல உள. மற்றவர்களைக் காட்டிலும் நாம் எவ்வளவோ வெற்றி பெற்றுள்ளோம் என்றே கூறலாம்.

ஜம்ஷெட்பூர் வழியே



அரசாங்க எஃகுத்தொழிற்சாலைகள் மூன்றையும் நிர்வகிக்க விருக்கும் நானூறு இள இன்ஜினீயர்கள் அயல் நாடுகளில் பயிற்சி பெறச் செல்லுமுன் ஜம்ஷெட்பூரில் ஆறுவாரம் தங்குவார்கள்.

இந்திய எஃகுத் தயாரிப்பின் அடிப்படை முறைகளை இவர்கள் எஃகு நகரமாகிய ஜம்ஷெட்பூரில் அறிந்து கொள்வார்கள். அத்துடன் டாடா ஸ்டீல் நிபுணர்களிட மிருந்து பல தொழில் நுணுக்கங்களையும் கேட்டறிவார்கள்.


வருங்கால எஃகு உற்பத்தியில் ஈடுபட விருக்கும் இவ்வின்ஜினீயர்களை வர வேற்பதில் ஜம்ஷெட்பூர் பெருமை கொள்கிறது.

டாடா ஸ்டீல்


இரு மில்லியன் டன் உற்பத்திக்கு



தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்.







சென்னை நகரம் சென்ற சில
தினங்களாகப் பக்திவெள்ளத்தில்
மூழ்கித் திளைத்து வருகிறது. செப்டம்பர் மாதம் 23-ந் தேதி நடமாடும் தெய்வமாக விளங்கும் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் இளைய சுவாமிகளோடு சென்னை நகருக்கு விஜயம் செய்துள்ளார். அன்று விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு விலே சுவாமிகளை ஊர்வலமாக அழைத்து வந்தார்கள் பக்தர்கள். ஆழ்வார்பேட்டையில் 'ஹிந்து' பத்திரிகையின் அதிபர் திரு கே. சீனிவாசன் அவர்கள் இல்லத்திலிருந்து மயிலாப்பூர் சம்ஸ்கிருதக் கல்லூரிக்கு நாதஸ்வர இசை முழங்க, வேதபாராயணம் ஒலிக்க ஆசார்ய சுவாமிகள் பவனி வந்தார். வழி நெடுகிலும் பக்தர்கள் ஆசார்ய சுவாமிகளுக்கும் இளைய சுவாமிகளுக்கும் பூர்ண கும்பம் மாலை மரியாதைகள் வழங்கிப் பக்தியோடு வரவேற்றனர். ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் ஊர்வலக் காட்சிகளையும், சுவாமிகள் இளையசுவாமிகளுடன் பக்தகோடிகளுக்குத் தரிசனம் தரும் திருக்கோலத்தையும் படங்களில் காணலாம்.



போட்டோ: விச்சு


தீபாவளி — விளக்குகள்
பளிச்சிடுகின்றன ; வாணங்
களும் வெடிகளும் முழங்குகின்
றன. குழந்தைகளுக்கெல்லாம்
கொண்டாட்டம். தின்பண்டங்
களை ஒரு கை பார்த்துவிடுவார்கள் !
ருசிகரமான தின்பண்டங்கள் தயா
ரிப்பதற்கு எப்போதையும்விட
டால்டாவுக்கு அதிகத் தேவை
ஏற்படும் காலம் தீபாவளி
தான்; ஏனென்றால்
டால்டா
ஊட்டமளிப்பது,
ஆரோக்கியமானது,
சிக்கனமானது.
டால்டா ப்ராண்ட்
வனஸ்பதி
DALDA

மாதர்குலதிலகங்கள்

மீரா பஹன்



ஆத்மீகத் துறையிலே - அளவிறந்த சாதனைகளைக் கண்டு அகிலமனைத்துக்கும் வழிகாட்டியாக நிற்கும் பாரதத்தின் மண்ணுக்குப் புலனாகாத அபூர்வ சக்தி ஒன்று இருக்கிறது.

அந்தச் சக்தியின் காந்தத்தினால் கவரப்பட்டு எத்தனை எத்தனையோ அயல்நாட்டவர்கள் பாரதத்தையே தங்கள் தாயகமாகக் கொள்ளும் துடிப்புடன், அதன் பணியையே தம் வாழ்வாகக் கொள்ளும் நோக்கத்துடன் வந்துள்ளார்கள்.

அத்தகையவர்களுள் திருமதி மாதலின் ஸ்லேட் என்னும் பெண்மணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்.

'பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த மகாத்மா' வின் அருள் ஒளியே அவரை நம் நாட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்ததற்கு முக்கிய காரணம்.

அரச குடும்பத்துக்கொப்பான சுக போகங்களும் சௌகரியங்களும் நிறைந்த சீமான் குடும்பத்திலே பிறந்தவர் திருமதி மாதலின் ஸ்லேட். அவரது தந்தை அட்மிரல் ஸ்லேட் ஆங்கில அரசாங்கத்தின் அதி நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்; கப்பற் படை நாயகர்.

சீரும் சிறப்புமாகச் செல்வத்தில் புரண்டு வளர்ந்து கொண்டிருந்த திருமதி ஸ்லேடின் மனக் கண்ணெதிரே, இனம் விளங்காத சக்தி யொன்று சிறு பிராயம் முதற்கொண்டே தன் அன்புக் கரங்களை நீட்டி அழைத்துக் கொண்டிருந்தது.

ரோமேயின் ரோலந்து என்னும் பேரறிஞர் எழுதிய 'மகாத்மா காந்தி' என்னும் நூலைப் படிக்கும் வாய்ப்பு கிட்டியதுமே, அவருக்கு இனம் விளங்காத அந்தச் சக்தியின் இனம் விளங்கி விட்டது. அது முதற்கொண்டு அந்தச் சக்தியின் நிழலை நாடியே இருவது என்ற ஒருமைப்பட்ட உள்ளத்துடன் அவர் மனம் தளராத, இடைவிடா முயற்சியில் ஈடுபட்டார். பாரதீய பழக்க வழக்கங்களையும் பண்புகளையும் கற்கப் பிரயாசை எடுத்துக் கொண்டார்.

பாரதத்தையே தம் தாயகமாகக் கொள்ளும் பெரு நோக்கத்துடன், பாமர மக்களின் நலனுக்காகப் பாடுபடும் மகாத்மாவின் நிழலடியில் நின்று பணி புரிய வேண்டும் என்ற பேரவாவுடன் 1925-ம் ஆண்டு நவம்பர் மாதம் சபர்மதி ஆசிரமத்தை அடைந்தார். அன்று முதல் பாரத பூமிதான் அவரது தாயகமாகத் திகழ்கிறது.

பாரதத்தின் பெருமைக்கு ஒரு எடுத்துக் காட்டு பக்த மீராவின் சோதனை மிகுந்த வாழ்க்கை வரலாறு.

பக்த மீராவைப் போலவே சோதனைகளிலும் சாதனைகளிலும் வெற்றி கண்ட திருமதி ஸ்லேடுக்கு மகாத்மா முன்னறிவுடன் வைத்த மீரா பஹன் என்னும் பெயர் எவ்வளவு பொருத்தமானது!!

மகாத்மா காந்தியின் நிழலில் நின்று தம்மை உய்வித்துக் கொள்ள வந்த திருமதி ஸ்லேடுக்கு மகாத்மா காந்தி எத்தனை எத்தனை சோதனைகளை யெல்லாம் நிகழ்த்தி விட்டார்! புடம் போட்ட தங்கமாக ஆக்க மகாத்மா எடுத்துக் கொண்ட முயற்சிகள் தாம் எத்தனை எத்தனை?

தம்மை அண்டித் தம் அருகிலேயே இருக்க எண்ணி வந்த அவரைத் தில்லி யென்றும் ரேவாடி என்றும் பல இடங்களுக்கு அனுப்பிப் பாரதீயப் பண்பின் பெருமைகளை உணரச் செய்தார். சேவையின் உயர்வைத் தீரக் கற்கச் செய்தார். தமது நிர்மாண வேலைகள் அனைத்திலும் பயிற்சி பெறச் செய்து நல்ல தொண்டராக்கி விட்டார். சபர்மதி ஆசிரம நிர்வாகத்தைக் கூடத் திருமதி ஸ்லேட் திறம்பட நிர்வகித்து மகாத்மாவின் பாராட்டுதலைப் பெற்றார்.

மகாத்மாவின் மனத்துக்கு உகந்த சேவைகளில் கோசேவை என்பது மிகமிக முக்கியமானது. மீராபஹன் தற்சமயம் ரிஷிகேசத்தில் உள்ள பசுலோக ஆசிரமத்தை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

மகாத்மாவின் அருமைப் புதல்வியாகி அவரது உள்ளத்துக்கு இசைந்த பணியில் ஈடுபட்டிருக்கும் மீரா பஹன் பல்லாண்டு வாழ்ந்து பணியின் சிறப்பைப் பாருக்கு எடுத்து ஓத வேண்டுகிறோம்.

இந்தியாவில் முதல்...

30 ஆண்டுகளுக்குமுன் பிரபாத் கிரோஸ் விளக்குத் திரிகள் உற்பத்தியுடன் ஆரம்பித்தனர். சடுதியில் ஆயில் பிரஷர் விளக்குகள், ஸ்டவ்கள் செய்யத் தொடங்கினர். இன்று பிரபாத் பொருள்கள் உயர்தரத்தின் சின்னங்கள் - உலகில் எத்தேசமும் பெருமை கொள்ளக்கூடிய தரம்



பிரபாத்

ஸ்டவ்கள் · ஊது விளக்குகள் · லாந்தர்கள் · மாண்டில்கள்

இன்றும் சிறந்தது!

[illegible]

மோகனச் சிரிப்பு

வெ. தூரன்

எங்களுக்கு ஒரே ஆனந்தம். காந்திமகான் வருகிறார்; வந்து எங்களோடு இரண்டு நாட்கள் தங்கப் போகிறார் என்றால் யாருக்குத்தான் ஆனந்தமாக இருக்காது?

"வித்யாலயம் செய்த பாக்யம்
மேலோன் காந்தி வருகிறார் இங்கு"

என்று மாணவர்கள் எல்லோரும் பாட்டுப் பாடிக் கூத்தாடத் தொடங்கி விட்டார்கள்.

"ஆட்டுப்பாலைக் கறந்து தருவோம்
அவரைப் பணிந்து புனித மடைவோம்"

என்று சிறுவர்கள் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் ஜபித்துக் கொண்டிருந்தார்கள்.

காந்தியடிகளின் வருகையை எதிர்பார்த்து எங்கள் ராமகிருஷ்ண வித்தியாலய குருகுலத்திலே எல்லா ஏற்பாடுகளும் குதூகலமாக நடந்து கொண்டிருந்தன.

ஹரிஜனங்களின் முன்னேற்றத்துக்கான சொற்பொழிவுகள் நிகழ்த்திக் கொண்டும், நிதி திரட்டிக் கொண்டும் காந்தியடிகள் நாடெங்கும் சுற்றிவந்த சமயம் அது. எங்கள் வித்தியாலயம் அந்தச் சமயத்திலே போத்தனூர் ஜங்ஷனுக்கு அருகிலே இருந்தது.

கோயம்புத்தூர் வந்து மாலையில் பொதுக் கூட்டத்திலே பேசிவிட்டு இரவு மூன்று மணிக்கு காந்தியடிகள் வித்தியாலயத்துக்கு வந்து சேர்வதென்று திட்டம் வகுத்திருந்தார்கள். வந்து அங்கு மறுநாளும் தங்குவதென்பது ஏற்பாடு.

நாங்கள் ஆவலோடு அந்த நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். குறிப்பிட்ட நாளன்று பகல் இரண்டுமணிக்கே ஸ்ரீமதி மீராபஹன் வித்யாலயம் வந்துவிட்டார்கள். அவர்கள்தான் அடிகளின் உணவு முதலிய வசதிகளுக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பவர்கள். வந்தவுடனே, 'பாபுவுக்குப் பேரீச்சம் பழம் வாங்கி வைத்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்கள்: 'இதோ தயாராக இருக்கிறது' என்றேன் நான்.

நாங்கள் வாங்கி வைத்திருந்த பழத்தை எடுத்துச் சுவைத்துப் பார்த்தார்கள். எனக்குச் சபரியின் ஞாபகம் திடீரென்று வந்தது. 'இந்தப் பழம் நன்றாகத்தான் இருக்கிறது. நல்ல பேரீச்சம் பழம் கிடைக்காவிட்டால் என்ன செய்வதென்று நானே கொஞ்சம் கொண்டு வந்திருக்கிறேன்' என்று அவர்கள் ஒரு பெட்டியைக் காண்பித்தார்கள். தாயின் அன்பு அவர்களிடத்திலே கனிவதை நாங்கள் உணர்ந்தோம்.

நிலக்கடலை, பேரீச்சம்பழம், ஆட்டுப்பால் இவைகள்தான் காந்தியடிகளின் முக்கிய உணவு. இவைகளைப் பற்றி மீராபஹன் எடுத்துக் கொண்ட சிரத்தையைக் கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தோம்.

காலம் தவறாமலும், திட்டப்படியும் காந்தியடிகள் எல்லாக் காரியங்களையும் செய்பவர். ஆனால் இந்த முறை அவருடைய பிரயாணத்திலே மக்களுடைய உற்சாகம் அவருடைய காலத் திட்டங்களைத் தகர்த்து வைத்துவிட்டது.

வழியிலே எதிர்பாராத இடங்களிலெல்லாம் திரளாக மக்கள் கூடி நின்று மகாத்மாவின் தரிசனத்துக் காக மணிக் கணக் காகக்





வல்லபாய் பட்டேலும், மாந்தருக்குள் ஒரு தெய்வமும்.

காத்திருந்தார்கள். அவர்களுடைய அன்பை மீறிக் கொண்டு குறிப்பிட்ட இடங்களுக்குப் போய்ச் சேருவதென்பது சாத்தியமா?

காந்திஜி மாலை ஆறு மணிக்குக் கோயம்புத்தூருக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் அங்கு வந்து சேரவே இரவு ஒன்பது மணியாகி விட்டது. லட்சக் கணக்கான மக்கள் பொறுமையோடு மைதானத்திலே அவரை எதிர்பார்த்து அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்குக் காந்தியடிகள் தமது அன்பு நெறியை எடுத்துக் கூறிவிட்டு, வித்தியாலயம் வருவதற்கு இரவு பத்தரை மணிக்கு மேலாகி விட்டது.

காந்தியடிகள் ஏறி வந்த கார் போத்தனூர் தண்டவாளத்தைக் கடக்கும் போது, ஒரு பெரிய விபத்து நேர்ந்தது. காலம் மிகவும் தாழ்ந்து விட்டபடியால் அடிகளார் வேகமாகக் காரை விடும்படி ஆணையிட்டார். இருட்டிலே கார் பறந்தது. அதை ஓட்டுபவன் அந்த ஊருக்குப் புதியவன். அதனால் போத்தனூருக்கருகில் திடீரென்று பாதையிலே ஒரு திருப்பம் இருப்பதையும் அந்தத் திருப்பத்திலேயே ரயில் பாதையைக் கடக்க ஒரு கேட் இருப்பதையும் அவன் முன்கூட்டியே அறிந்திருக்கவில்லை.

கார் வேகமாக வந்து கொண்டிருந்தது. பாதை சடக்கென்று நேர்கோணத்திலே திரும்பியது. எதிரே பார்த்தால் ரயில் கேட் சாத்தியிருந்தது. அதன் சிவப்பு விளக்கு பயங்கரமாகக் காட்சியளித்தது. காரை நிறுத்துவ தென்பது அந்தக் கணத்திலே முடியாத காரியம். அது தடாலென்று கேட்டில் மோதியது. அவ்வளவுதான்! ஆனால் யார் செய்த புண்ணியமோ கேட் அப்படியே பெயர்ந்து முன்னால் சாய்ந்து விழுந்தது. கண்ணிமைத்துத் திறப்பதற்குள் கார் அதன் மேலே ஓரளவு ஏறி நின்று விட்டது. யாருக்கும் ஒரு தீங்கும் நேரவில்லை. காரின் முன்பகுதி மட்டும் சற்று சீர் குலைந்து விட்டது.

எங்களுக்குப் பகீர் என்றது. நடுநடுத்துப் போய் விட்டோம். ஆனால் காந்தியடிகள் வாய்விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தார். எங்களுடைய திகிலெல்லாம் அவருடைய சிரிப்பொலியிலே கரைந்து விட்டது.

இந்த மாதிரி உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடிய ஒரு பெரிய விபத்து நேரிட்டிருந்தால் நமக்கு அன்று ஒன்றும் ஓடாது. அதைப் பற்றியே இரவெல்லாம் பேசித் தீர்த்திருப்போம். ஆனால் மகாத்மா அடுத்த நிமிஷத்திலேயே அதை மறந்து விட்டார் என்று எங்களுக்குத் தோன்றியது. அதைப் பற்றி அவர் ஒரு பேச்சுப் பேசவில்லை.

எத்தனையோ இடங்களில் பேசி விட்டும், நீண்ட நெடும் தூரம் பிரயாணம் செய்து விட்டும் வந்த அந்த மகான் வித்தியாலயத்துக்குள் நுழைந்தவுடனே அன்று முடிக்க வேண்டிய அலுவல்களிலே ஈடுபட ஆரம்பித்து விட்டார்.

அடுத்த நாள் நிகழ்ச்சித் திட்டங்களையும் அவர் பரிசோதிக்கலானார்.

ஹரிஜன நிதிக்காக அன்று வசூலான தொகையின் கணக்கை அன்றே பார்த்து முடிக்க வேண்டும் என்பது அவருடைய கண்டிப்பு. பொதுமக்கள் அன்போடு வாரிக் கொடுக்கும் அந்தப் பணத்தில் ஒவ்வொரு காசுக்கும் சரியாக கணக்கு வைப்பதில் அவர் காட்டிய அக்கறை பொது வாழ்வில் உள்ள எல்லோருக்கும் ஒப்பற்ற படிப்பினையாகும்.

சீணக்கு முடிந்தது. அவசரமாக எழுத வேண்டிய தபால்கள் வந்தன. காந்திஜி வேகமாக அறைக்குள் நடந்துகொண்டே கடிதங்களுக்குப் பதில் எழுதுவதற்கு வாசகம் சொல்லிக் கொண்டிருந்தார்.

இரவு பன்னிரண்டு மணிக்குத்தான் அவர் ஓய்வெடுக்கச் சென்றார். அது நல்ல பனிக் காலம். குளிரும் அதிகம். ஆனால் 'காந்தியடிகளுக்குத் திறந்த வெளியிலேயேதான் படுக்கை ஏற்பாடு செய்ய வேண்டும்.' அது தான் அவருடைய விருப்பம்' என மீராபஹன் கூறியதால் அப்படியே செய்திருந்தோம்; படுக்கையின்மேல் கெட்டியாக இரண்டு முரட்டுக் கம்பளங்களைப் போட்டு மூடியிருந்தோம். அந்தக் கம்பளங்களே இரவு பன்னிரண்டு மணிக்குள் முற்றிலும் பனியில்

நனைந்து போயின. அந்தனை பனியிலே ஒரு சால்வையைப் போர்த்துக் கொண்டு அந்த மகான் படுத்துறங்கினார்.

இந்தக் காட்சி இன்னும் என் மனத்திலே பசுமையாக இருக்கிறது. மக்களுக்காக உழைத்த மகான், மக்கள் சமூகத்தில் மிகவும் கஷ்ட நிலையில் உள்ள மக்களைப் போலவே வாழ்ந்து வந்தார். திறந்த வெளியில் கொட்டும் பனியில்தான் படுத்துறங்கினார். "சொல்லுவது எல்லார்க்கும் சுலபமாகும். சொன்னபடி நடப்பவர்கள் மிகவும் சொற்பம்" என்ற வாக்குப்படி சொன்னபடி வாழ்ந்து காட்டிய உத்தமர். உயிருக்கே எமனாக வந்த மிகப் பெரிய ஆபத்தையும் இன்னும் பல தொல்லைகளையும் மறந்துவிட்டுப் படுத்தவுடனேயே நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்து விட்டார். மாந்தருக்குள் ஒரு தெய்வம் என்றால் தெய்வம்தான்.

அதிகாலையிலே நான்கு மணிக்குப் பிரார்த்தனைக் கூட்டம். அந்தக் கூட்டத்துக்குக் குறித்த நேரத்தில் அடிகள் வந்து விட்டார்.

அந்தத் திருமேனி சோர்வையே அறியாதா? ஒரு நாளா, இரண்டு நாட்களா, எத்தனை எத்தனை கூட்டங்கள், எத்தனை எத்தனை தூரம் பிரயாணம், அவற்றால் ஏற்படும் களைப்பை யெல்லாம் அவரிடத்திலே பிரார்த்தனையின்போது காணவில்லை. ராமநாம நினைவிலே மெய்மறந்து அவர் பிரார்த்தனை செய்து எங்களுக்கெல்லாம் அரியதோர் உபதேசமும் செய்தருளினார்.

காலையிலே ஆயிரக்கணக்கான மக்கள் அவருடைய தரிசனத்துக்காக வந்து கொண்டேயிருந்தார்கள். அவருடைய கையெழுத்தைப் பெற்றுப் பத்திரப்படுத்திக் கொள்வதிலே பலருக்கு ஒரே ஆசை.

இந்த ஆசையையும் ஹரிஜனங்களின் முன்னேற்றத்துக்குக் காந்தியடிகள் பயன்படுத்திக் கொண்டார். கையெழுத்துக்குக் கட்டணம் உண்டு. அந்தக் கட்டணம் ஹரிஜன நிதிக்கு!

கட்டணம் விதித்த பிறகும் கையெழுத்திடும் வேலை அடிகளுக்குக் குறைந்து விடவில்லை.

இப்படிக் கையெழுத்து வாங்க வேண்டும் என்ற ஆசையோடு ஒரு இளம் பெண்மணி எல்லோரையும் முந்திக்கொண்டு காந்தியடிகளிடம் வந்தாள். அவளுடைய கணவன் சற்றுத் தூரத்திலே நின்று கொண்டிருந்தான். தன்னுடைய அருமை மனைவி உற்சாகத்துடன் காந்திமகானை நோக்கிச் செல்வதைப் பார்த்துக் கொண்டே புன்முறுவலுடன் காட்சியளித்தான். அவனுடைய சட்டைப் பையிலிருந்து காந்திமகானிடம் கையெழுத்து பெறுவதற்கு வேண்டிய பணத்தையும் எடுத்துக் கொண்டுதான் அந்தப் பெண் பாபுவிடம் வந்து சேர்ந்தாள்.

காந்தியடிகள் கையெழுத்து போடப் பேனாவை எடுத்தார். 'தமிழிலே கையெழுத்து வேணும்' என்று அந்த மங்கை மிகுந்த பணிவுடன் தெரிவித்தாள்.

'தமிழா! அதற்குக் கட்டணம் இரட்டிப்பாயிற்றே?' என்று சொல்லிவிட்டுக் காந்திமகான் வாய் விட்டுச் சிரித்தார்.

அந்த மங்கை கொஞ்சங்கூடத் தாமதம் செய்யவில்லை. மறுபடியும் தன் கணவனிடம் பணம் வாங்கி வரக்கூட நினைக்கவில்லை. தன்னுடைய வலது கைவிரலில் அணிந்திருந்த வைர மோதிரத்தைக் கழற்றி அடிகளின் பாதத்தில் வைத்து வணங்கினாள்.

காந்திமகானும் அந்தப் பெண்மணிக்குத் தமிழிலே கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.

காந்திமகானிடம் தமிழ்க் கையெழுத்து வாங்கியதில் அந்தத் தம்பதிகளுக்கு ஒரே ஆனந்தம். அதைவிட வேறொரு ஆனந்தமும் அவர்கள் உள்ளங்களிலே பொங்கியது.

காந்திமகான் கையெழுத்தைக் கணவனும் மனைவியுமாகப் பல முறை பார்த்தார்கள். இருவர் முகங்களிலும் மகிழ்ச்சி பொங்கிக் கொண்டிருந்தது.

'ரொம்பச் சல்லிசாகத் தட்டிக்கொண்டு வந்து விட்டாயே' என்று கணவன் அளவு கடந்த உற்சாகத்தோடு சொன்னான்.

'ஆமாம், கையெழுத்து ஒருபுறம் இருக்கட்டும். அந்த மோகனச் சிரிப்புக்கு வைர மோதிரம் ஒன்று போதுமா? அதற்கு ஆயிரம் கொடுக்கலாம்' என்றாள் பெண்மணி.

'நானும் அதையேதான் சொன்னேன்' என்றான் காதலன்.

'இந்தப் பொக்கைவாய்ச் சிரிப்புக்காரர் மகாத்மாவேதான்' என்பதை உணர வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?' என்று என் உள்ளத்திலே ஒரு எண்ணம் எழுந்து என்னை இன்பத்தில் ஆழ்த்தியது.

பேஷா வாங்கித்தரேன்!

"நீங்க சொல்றதும் வாஸ்தவம்தான். இந்த நவராத்திரிகுள்ளே எல்லோரும் நம் வீட்டிற்கு வரவேண்டியிருக்கு. நாமும் எல்லோர் ஆத்திற்கும் போக வேண்டியிருக்கு. குழந்தைகளை அனுப்பி வைத்தால், 'உங்கம்மா எங்காத்திற்கெல்லாம் வருவாளா' என்று மனஸ்தாபப் படுகிறார்கள். இதற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை!'' என்றாள் சீதா மாமி.

"அது மட்டுமா? முன்மாதிரி இப்போ தெல்லாம் டிராம் வண்டிகூட இல்லையே? இந்த பஸ்ஸிலே ஏறி, ஊரைக்கண்டுபிடிப் பதற்குள் போதும், போதும் என்றாகி விடுகிறது'' என்றாள் சரசு மாமி.

"அதெல்லாம் சரி, நீங்கள் மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் நடக்கும் துர்க்கா பூஜை. ஸ்ரீ ஸாயிபாபா மந்திரில் நடக்கும் நவராத்திரிக்கான விசேஷ பூஜைகள் மற்றும் கபாலி கோயிலில் கற்பகாம்பிகையின் தரிசனம் வெல்லாம் அவசியம் பார்க்கணும்.''

"உங்க பெண் மைதிலி, என்னைக் கையோடு கூட்டிண்டுவரச் சொன்னான்னு சொன்னேனே. அது எதற்குன்னு சொல்லவே யில்லையே, மாமி?''

"அடாடா, முக்கியமான விஷயத்தைச் சொல்ல மறந்தே போய்ட்டேன். உங்க பெண் ஜயா, எங்காத்துக்கு அழைக்கவந்த போது கட்டிண்டிருந்த புதுப்பாவாடை ரொம்ப நன்னாயிருக்கு. அதேமாதிரி அவளுக்கும் வேணும்னு கேட்டாள். எனக்கும் பிடிச்சிருந்தது. சரி, நீங்க வந்தால் உங்களையே அழைச்சிண்டு போய் வாங்கித் தரேன்னு சொல்லியிருந்தேன்.''

"பேஷா வாங்கித்தரேன். பாவாடை துண்டு மட்டுமென்ன? காஷ்மீர், மைசூர். கொள்ளேகாலம் சேலைகள், சோளி பீஸ்கள் எல்லாம் ரகரகமாக வைத்திருக்கிறார்கள் ஆரணி ஸில்க் ஹவுஸில். கோயிலிலிருந்து திரும்பி வரும்போது ஸன்னதித் தெரு வழியா நுழைந்து உங்களுக்குத் தேவையான தீபாவளி ஜவுளிகளை வாங்கிண்டு உங்காத்துக்குப் போய் விடலாம்."

குறிப்பு: எங்களது சேலை ரகங்களைத் தமது மதராஸ் விலைக்கே கீழ்க்கண்ட விலாசங்களில் கிடைக்கும்:

1. தி சௌத் இந்தியா கிளப் கோ-ஆபரேடிவ் சப்ளை சொஸைடி லிட். 9. ஜந்தர்மந்தர் ரோடு. நியூடில்லி
2. சுதர்சன் & கோ., 1/4. பிரின்ஸ்குலாம் முகம்மது ரோடு. காளிகட் போஸ்ட், கல்கத்தா-26
3. தி சௌத் இந்தியா கோ-ஆபரேடிவ் ஸ்டோர்ஸ் லிமிடெட் 11/255, கடர்கஞ்ச், கானபூர்

அநுமகரத்வஜா

ஷட்குண மகரத்வஜா சக்தி வாய்ந்தது



சுத்தமான ஷட்குணத் தங்கத்தினால் மிகவும் சிறிய அளவில் ஆனால் பிரமாத சக்தி வாய்ந்ததாக உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டுப் பிறகு மாத்திரை வடிவம் ஆக்கப்பட்டிருக்கிறது. உபயோகிப்பதற்கு மிகவும் சுலபம். மற்ற மகரத்வஜங்களை விடச் சக்தி வாய்ந்தது.

○★○

14 மாத்திரைகள்
ஒரு புட்டியில் இருக்கின்றன!
(7 முழு அளவுகள்)

○★○

பெங்கால் கெமிகல்

கல்கத்தா - பம்பாய் - கான்பூர்

சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
ஆர். எல். கௌடர் & கம்பெனி
59, பந்தர் தெரு :: சென்னை-1

ஆந்திர ராஜ்ய டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
சத்ய நாராயண பார்மஸி
குமரி தெரு, விஜயவாடா-1 & விஜயநகரம்

பாவை விளக்கு

அத்தியாயம் 15

ஆனந்த மஜேலயம்

சமஸ்தான உத்தரவையும் சித்தப்பாவின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான் தணிகாசலம். அவனுக்குத் தன் எண்ணத்தைச்சொல்லவும் முடியவில்லை. சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை. 'செங்கமலம் நடனமாடப் போகிருள். அதற்காக நான் வாரக்கணக்கில் காத்திருக்கிறேன். அதைப் பார்க்காமல் நான் எங்கும் போக முடியாது. வேலைக்கே உத்தரவு வந்தால்கூடப் போக முடியாது' என்று எப்படிச் சித்தப்பாவிடம் சொல்வது?

உத்தரவு அவசர உத்தரவு. இரண்டு நாளைக்குள் கிடைக்கும்படி கையெழுத்து வாங்கி அனுப்பி வைக்க வேண்டுமாம்.

இந்த அரசாங்க விவகாரங்களில் 'அவசரம்' என்ற சொல்லுக்குச் சரி பாதி அர்த்தம்தான் உண்டு. அவர்கள் எழுதினல் அதை அப்படியே மற்றவர்கள் கடைப்பிடிக்க வேண்டும். மற்றவர்கள் அவர்களுக்கு எழுதினல் 'அவசரம்' என்பதை ஆறுமாதம் என்று கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். அவனுடைய சித்தப்பாவுக்கு இது அனுபவம் கற்றுக் கொடுத்த பாடம்.

"புறப்படுகிருயா?" என்ருர்.

"சமஸ்தானத்து மந்திரியின் செயலாளர் இன்றைக்குத் திருவிழாவுக்கு வரப் போவதாகச் சொன்னீர்களே, அவர்களிடம் வாங்கிக் கொள்ளலாமா?"

சித்தப்பா சிரித்தார். "கையெழுத்து வாங்குவது மிகச்சிறிய



அகிலன்



காரியம். இதற்குப் போய் இத்தனை பெரிய உத்தியோகஸ்தரைப் பார்க்க வேண்டாம். அதுவும் வந்த இடத்தில் அவரைப் பார்ப்பது சரியில்லை. நீ கண்ணை புரத்துக்குப் போகத்தான் வேண்டும்.''

''நானைக்குப் போகிறேன்'' என்று அழாக் குறையாகச் சொன்னான் தணிகாசலம். ''இன்றைக்கு ஐந்தாம் திருவிழா பார்க்க வேண்டும்.''

சித்தப்பா யோசனை செய்து விட்டு, 'சரி' என்றார். படித்த பையனுக்குப் பக்தியிலும் திருவிழா விலும் நம்பிக்கை இருந்தது அவருக்குப் பெருமை தந்தது. மேலும் தம்முடைய கைக் காரியங்களில் அன்றைக்கு அவன் உதவி செய்ய வேண்டும் என்றும் எதிர் பார்த்தார். தணிகாசலத்துக்கு எல்லையற்ற ஆனந்தம் ஏற்பட்டது. மலை போல் வந்த சோதனை ஐந்தே நிமிஷத் தில் பனிபோல் விலகி விட்டதல்லவா? ஆனால் அந்த ஐந்து நிமிஷத்துக்குள் அவன் பட்டிருக்கும் பாடு!

இரவின் வரவுக்காக, நிலவின் மலர்ச்சிக்காக, செங்கமலத் தின் நடனத்துக்காகத் தணிகாசலம் ஒவ்வொரு கணத்தையும் எண்ணிக் கொண்டிருந்தான். பொழுது சாய்ந்தவுடன் புதுப்பட்டி பொங்கி எழுந்தது. ஊரைச் சுற்றிலும் பொட்டல் கண்ட இடத்தி லெல்லாம் ஒரே கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம். பொட்டல் களைத் தூள் பறக்க அடித்து விட்டது திருவிழாக் கூட்டம்.

ஒன்பது மணி ஆயிற்று. காளை வாகனத்தில் சிவபெருமானும் அன்ன வாகனத்தில் பார்வதி தேவியும் எழுந்தருளினார்கள். ஆண்மையின் கம்பீரத்தையும், மிடுக்கையும் உடல் வலிவையும் காட்டிக் கொண்டிருந்தது காளை. பெண்மையின் நளினத்தையும் மிரட்சியையும், எழிலையும் எடுத்துச் சொல்லியது அன்னம். தஞ்சாவூரிலிருந்தும் திருச்சியிலிருந்தும் வந்த மலர்க் குவியலின் கதம்ப மணத்தோடு, சந்தனம், சாம்பிராணி, சூடம், ஊது வத்தி அத்தனையும் சேர்ந்து கொண்டன. நூற்றுக்கணக்கான தீவர்த்திகளும் 'காஸ் லைட்'டுகளும் கிழவாசல் தெருவைப் பட்டப் பகலாக்கின. வாணவேடிக்கைகள் புதுப்பட்டியின் வானவெளியில் வர்ணஜாலம் காட்டின.

நடன ஏற்பாடுகள் தொடங்கும் வேளை நெருங்கியது.

சமஸ்தானத்தின் சார்பில் வந்திருந்த மந்திரியின் செயலாளர் மகாலிங்கம் தொந்தியும் தொப்பையுமாக ரத்தினக் கம்பளத்தில் அமர்ந்திருந்தார். வழுக்கைத் தலையும் மூக்குக் கண்ணாடியும், இடுப்பில் வரிந்து கட்டிய ஜரிகை அங்கவஸ்திரமுமாக அவர் உட்கார்ந்திருந்த விதம் பக்தியின் பணிவைக் காட்டியது. இறைவனின் சந்நிதி பல்லவா? கிராம அதிகாரிகளும், பெண்களும் அவரவர்களுக்குரிய இடத்தில் அமர்ந்திருந்தார்கள். தர்மகர்த்தா சீட்டுப்பிள்ளை என்ற அந்தஸ்தைப் பயன்படுத்திக்கொண்டு தணிகாசலம் முன் வரிசையில் வந்து உட்கார்ந்தான். எதிரில் கண்ணுக் கெட்டியதாரம்வரை ஒரே ஜனத்திரள்.

சின்ன மேளம் ஒலிக்கத் தொடங்கியவுடன், கூட்டம் முழுவதும் வாய்மூடி அமைதி காட்டியது. தாளங்கள் கொஞ்சின. நட்டுவக் கிழவனார் துதி பாட, நாட்டிய மங்கை அரங்கத்தின் மத்தியில் தோன்றினாள்.

அடி மேல் அடி வைத்து அவள் அன்ன நடை நடந்து வந்தாள். மலர்ப் பாதங்கள் சதங்கைகளின் வாயிலாகச் சிரித்தன. தான் பிறந்த மண்ணில் முளைத்த மன்னனுக்கு முன்னால் ஆடப்போகும் ஆனந்த மனோலயம் அவள் கண்களில் துள்ளியது. தணிகாசலம் நிமிர்ந்து உட்கார்ந்தான். தன்னுடைய செங்கமலம் தனக்காகவே ஆட வருவது போல் அவனுக்குத் தோன்றியது.

சிரங் குனிந்து அம்மைக்கும் அப்பனுக்கும் கரம் கூப்பினாள் செங்கமலம். பிறகு சமஸ்தானத்துப் பிரமுகருக்காக அவள் கரங்கள் குவிந்தன. அடுத்தாற் போல் சட்டென்று தணிகாசலத்தின் பக்கம் திரும்பி, மின் வெட்டுப் போல் ஒரு புன்முறுவலை உதிர்த்து விட்டு, அரங்கத்தின் மையத்துக்கு ஒயிலாக நடந்து வந்தாள்.



பக்க வாத்தியங்கள் முழங்கின.

சடைப் பின்னல் முழங்காலுக்குக் கீழே தொங்கியது. நெருப்பு நிறச் சிவப்பில் ஜரிகை மின்னும் மார்புக் கவசம். மேக வர்ணப் பட்டில் அரைக் கச்சை; மின்னலிடைப் பெண் அணங்கு மெல்ல மெல்லத் தென்றலில் நடுங்கும் பூங்கொடியாக மாறினாள்; பூங்கொத்தாகவே மாறினாள். கண்களென்ற இரு குவளை மலர்கள், இதழ்களென்ற ஒரு சிவப்புரோஜா, முகமென்ற ஓர் நிலவுத் தாமரை, கரங்கள் என்ற இரு வண்ணக் குமுதங்கள்—அனைத்துமே ஒன்றாய் அங்கு இதழ் விரித்து, படபடத்து, மணம் சிதறின; சிதறிக் கொண்டே இருந்தன.



''ஜல், ஜல்! ஜல, ஜல, ஜல், ஜல்!''

நட்டுவக் கிழவரின் தாளத்துக்குச் செங்கமலத்தின் பாதச் சதங்கை எதிரொலி செய்தது. சின்ன மேளம் அவளுடைய நுண்ணுணர்வை உந்தித் தள்ளிப்பரவசப் படுத்தியது. நட்டுவனாரின் துதிப் பாடல் அதன் உட்பொருளுக்கு அவள் வாயிலாக உருவம் கொடுத்தது. அவள் ஆடினாள்; அவர் பாடினார்; ஆயிரக்கணக்கான கண்கள் இமைப்பை மறந்தன. தணிகாசலத்தின் உள்ளம் துடிப்பையே மறந்தது.

தணிகாசலத்தின் தந்தை பரமசிவமும் அவரது மரணத் தருவாயில் தன் மகனுக்கு ஒரு செல்வத்தை விட்டுப் போயிருந்தார். சட்டைப் பையில் வைத்துக் கொள்ளும் அளவுள்ள திருவாசகப் புத்தகம் அது. அளவுக்கு அதிகமான இன்பம் வந்த போதும் துன்பம் வந்த போதும் அவன் அதன் பக்கங்களைப் புரட்டி உருகுவான். திருவாசகத்துக்கு உருகாத நெஞ்சு எது?

தணிகாசலம் சாதி வேற்றுமை பாராட்டியதில்லை. 'சாதி குலம் பிறப்பெனும் சுழிப்பட்டுத் தடுமாறும்' மாந்தரைத் திருவாசகம் இடித்துக் காட்டியது. மத வேற்றுமையும் அவன் பாராட்டியதில்லை. 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்ற சமரசத் தத்துவத்தையும் அது வலியுறுத்தியது. தன்னுடைய மனத்துக்குள்ளேயே தன்னை அறியாது நடனம்புரியும் ஓர் தத்துவத்தை அவன் உயர்ந்த பொருள்கள் அனைத்திலுமே கண்டான். கோயிலின் கோபுரத்தைக் கண்ட போது மட்டிலும் அவன் மனம் உயர்வதில்லை. முஸ்லிம்களின் தொழுகைக்குரிய மூன்றாம்பிறைச் சந்திரன் அவனை உயர்த்தியிருக்கிறது. கிறிஸ்தவர்களின் தியாகச் சின்னமான மாதாகோயிலின் சிலுவைச் சின்னம் அவனை உயர்த்தியிருக்கிறது. 'உள்ளது ஒன்றுதான்' என்ற எண்ணம் அவனுக்கு எப்போதும் உண்டு. என்றாலும் பரம் பரையாக ரத்தத்தில் ஊறி வளர்ந்த பழக்க வழக்கங்களை அவன் வெறுக்கவில்லை. திருவாசகத்தைக் கையிலெடுத்த போதெல்லாம் அவன் தந்தையை நினைத்தான். அவர் தமது கரங்களால் தொட்டுப் படித்த புத்தகம் அது. அவர் புரட்டிய பக்கங்களை அவனும் புரட்டி,



அவர் பாடிய பாடல்களை அவனும் பாடி அவர் உருகியது போலவே, தானும் உருகுகிறான். பரம்பரை ரத்த ஓட்டத்துக்குத்தான் எத்தனை வலிமை? ஆனாலும் புதுமையில் நன்மை கண்டபோது அவன் ஏற்றுக் கொள்ளுவதற்குத் தயங்கியதில்லை.

அந்தத் திருவாசகம் இப்போது நடன அரங்கில் ஒலித்தது.

மாணிக்கவாசகர் தில்லையம்பதிக்குச் சென்று ஆடும் பெருமானைக் காண உள்ளே நுழைந்தாராம். கோயிலின் உட்பிராகாரமெங்கும் இளம் பெண்களின் கூட்டம் நிறைந்திருந்தது. அவர்கள் உல்லாசமாகச் சிற்றுலக்கை பிடித்துத் திருச்சுண்ணம் இடித்துக் கொண்டிருந்தார்கள். கை வளையல்கள் கிலுகிலுக்க, கூந்தல் மலர் சிந்திச் சிதற, வண்டுகள் ரீங்காரமிட, முகத்தில் வியர்வை அரும்ப அவர்கள் பாடிக் கொண்டே சுண்ணம் இடித்த காட்சி மணிவாசகரின் மனத்தைத் தொட்டிருக்க வேண்டும்.

ஆனந்த மனோலயத்தில் அவர் அன்று பாடிய பாடலை இன்று நட்டுவக் கிழவனார் புதுப்பட்டிக் கீழவாசலில் கணீரென்று பாடினார்:—

"பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்,

மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்

கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனியின் தொழுமினெங் கோனெங்
கூத்தன்

தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன் செய் சுண்ணம் இடித்து
நாமே."

தணிகாசலம் இந்த உலகத்திலேயே இல்லை. பொருள் நிறைந்த இன்னிசையே ஓர் பெண்ணுருக் கொண்டு இப்படித் தன் முன் ஆடுகிறதா? இசைக்கு உருவம் உண்டா? நிறம் உண்டா? மணம் உண்டா? உயிரைப் பற்றிப் பறித்து மேலே தூக்கும் வலிமை உண்டா? என்ன அதிசயம் இது!

'மாவின் வடுவகிரன்ன கண்ணீர்' என்று சொல்லும்போது, செங்கமலம் இரு கூறாய்ப் பிளந்தெடுத்த மாவின் வடுவாகிய தன் விழிக்கோணத்தை இரு விரல்களால் லாகவமாய்ச் சுட்டிக் காட்டினாள். 'கூவுமின்' என்றபோது அவள் தன் செவ்விதழில் கரம் பதித்துப் பூங்குயில் போல் கூவிக் காட்டினாள். 'வாருங்கள், ஓடி வாருங்கள், பாடுங்கள், ஆடுங்கள், தொழுதேற்றுங்கள்' என்றெல்லாம் அவள் எப்படி எப்படி அபிநயம் பிடித்துக் காட்டுகிறாள்! எத்தனை அற்புதமாக, அநாயாசமாக அந்தக் காட்சிகளை அவள் கண் முன்னே கொண்டு வருகிறாள்! ஆனந்த மனோலயம் என்பது இதுதானா?

இல்லை; இன்னும் இருக்கிறது.

அடுத்த பாடல் துவங்கியபோது அவள் மென்மை நிறைந்த பனி மலராக இல்லை. கரங்களும், கால்களும், விரல்களும் உறுதி பெற்றுத் துடித்தன. தலைப் பின்னல் புயலில் அகப்பட்ட நாணல் கொண்டைபோல் நாலாபுறமும் சுழன்று வீசியது. பொங்கிப் பூரிக்கும் இளமை



யின் அழகை அவள் அள்ளி அள்ளி வீசிக் கொண்டு தரையில் கால் பாவுவது தெரியாமல் ஆடினாள். தீவிர கதிக்கு ஆட்டம் திரும்பி விட்டது. சுழன்று சுழன்று, வளைந்து—நெளிந்து, புரண்டு—மிரண்டு ஆனந்தத்தின் எல்லையையே எட்டிப் பிடிக்க முயற்சி செய்துவிட்டாள்.

காற்றுக்கு அடங்காத நெருப்புத்துளி, கலையின் வாயிலாக, கடவுளின் கரத்துக்குள் அகப்பட வேண்டுமென்று தவிக்கும் இன்ப வேதனையின் தவிப்பு அது. வெறும் ஆட்டமா அது?

"முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
அத்தன் கருணையொ டாடவாட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே"

கூட்டத்தினரின் தலைகள் ஆடின; தோள்கள் ஆடின. கூட்டமே பாட்டுக்கு ஏற்ப அங்குமிங்கும் அசைந்தாடியது. மரங்கள், கிளைகள், இலைகள், காற்று எல்லாமே செங்கமலத்துடன் சேர்ந்தாடுவது போல் தணிகாசலத்துக்கு ஒரு பிரமை. அவன் சுற்றியிருப்பவர்களை முற்றிலும் மறந்து கழுத்து சுளுக்கும் வரையில் தலையாட்டினான்.

சித்தம் அவனிடமில்லை. அது பித்துக் கொண்டு விட்டது. சிவனை நினைத்தும் சிவனுக்காக ஆடியவளை நினைத்தும் அது



பித்துக்கொண்டு விட்டது. சிவனுக்காக மாத்திரமா அவள் ஆடினாள்? தனக்காகவும் ஆடினாள் என்பதை நினைக்கும் போது இந்த உலகத்திலேயே தன்னைவிட அதிர்ஷ்டசாலி வேறு யாருமில்லை என்று எண்ணிக் கொண்டான்.

நடனம் முடிந்தவுடன் சமஸ்தானப் பிரமுகர் வாய் திறந்தார்: "செல்லக் கண்ணுவின் நாட்டியத்தைப் பார்த்திருக்கிறேன். இந்தப் பெண் தாயாரையும் மிஞ்சி விட்டாள். அடடா! அற்புதம்! அற்புதம்!"

தணிகாசலம் பெருமை தாங்காமல் பிரமுகரைத் திரும்பிப் பார்த்தான்.

பிரமுகரின் பார்வை தணிகாசலத்தின் மேல் விழுந்தது. "இங்கிருந்த எல்லோரையும்விட நீதான் அதிகமாய் ரசித்தாய்!" என்று சொல்லிச் சிரித்தார். மற்றவர்களும் சிரித்தார்கள்.

தணிகாசலம் வெட்கிப் போய்த் தலை குனிந்தான்.

"வெட்கப்படாதே! உன் வயதில் நானும் இப்படித் தான் செய்திருப்பேன். கலைகளை ரசிக்கத் திறந்த மனம் வேண்டும்."

நன்றியுடன் அவரை நோக்கிவிட்டு நகர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

இதற்குள் தீபாராதனை தொடங்கியது. முறைப்படி வெற்றிலைப் பாக்கு வழங்கப்பட்டது. செங்கமலத்தின் முறை வந்தவுடன் பெரிய தாம்பாளத்தில் பிரசாதங்களை வைத்துச் சமஸ்தான அதிகாரியிடம் நீட்டினார் தர்மகர்த்தா. செங்கமலம் பணிவுடன் வந்து அவருக்கு முன் கைகூப்பினாள். மனதார அவளை வாழ்த்திப் பிரசாதத் தட்டைக் கொடுத்தார் மகாலிங்கம். கையில் தட்டை வைத்துக் கொண்டே கூட்டத்தை ஒரு முறை சுற்றிப் பார்த்தாள் செங்கமலம். அருகில் நின்ற தணிகாசலம் கண்ணில் பட்டு விட்டான். அவனைப் பார்த்து நிதானமாகச் சிரித்தாள். 'உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?' என்று கேட்பது போல் புருவங்களை உயர்த்தித் தலையாட்டினாள்.

'ஆம்' என்று அவனும் தலையசைத்தான். அவனுடைய கண்களின் ஓரங்களில் படிந்திருந்த ஈரக் கசிவு அவனை அவளிடம் காட்டிக் கொடுத்து விட்டது. அவர்கள் இரண்டு பேருமே தங்களை மறந்து அந்தக் கூட்டத்தினரிடம் தங்களை வெளிப்படுத்திக் கொண்டார்கள். சமஸ்தான அதிகாரி இந்தக் காட்சியைக் காணத் தவறவில்லை. 'பையன் காரியத்துடன்தான் தலையாட்டியிருக்கிறான்' என்று நினைத்துக் கொண்டார்.

இந்தச் சிறு சலனம் அவருக்கு அவனிடம் அன்பு பிறக்கக் காரணமாயிருந்தது. பலர் பொறுமைப் படுவார்கள்; ஏனோ அவர் பெருமைப்பட்டார்.

ஊர்வலத்துக்கு சுவாமி தூக்கியவுடன் மகாலிங்கம் கண்ணபுரத்துக்குப் புறப்பட்டார். காரின் பிற்பகுதி முழுவதும் மலர் மாலைகளும் பிரசாதங்களும் நிரம்பியிருந்தன. சித்தப்பாவுக்குப் பக்கத்தில் நின்று அவரை வழியனுப்ப வந்தான் தணிகாசலம். "நீ யார் தம்பி?" என்று அவனைக் கேட்டார் மகாலிங்கம். "என் அண்ணா பிள்ளை" என்று சித்தப்பாவிடமிருந்து பதில் வந்தது.

அவனை முதுகில் தட்டிக் கொடுத்து விட்டு உள்ளே போய் உட்கார்ந்து கொண்டார். கூட்டம் விலகிக் காருக்கு வழி விட்டது. கார் நாற்பது மைல் வேகத்தில் புதுப்பட்டியை விட்டுக் கண்ணபுரத்துக்குக் கிளம்பியது.

அத்தியாயம் 16

நிலவில் நடந்தது

அம்மையும் அப்பனும் தங்கள் தங்கள் வாகனங்களில் ஏறிக் கொண்டு ஊர்வலம் புறப்பட்டார்கள். ஐம்பது ஐம்பது பேர்களாகப் பிரிந்து போட்டி போட்டுக் கொண்டு வாகனங்களுக்குத் தோள் கொடுத்தார்கள், கிராமத்து இளவட்டங்கள். தஞ்சாவூரிலிருந்து வரவழைத்த நாயனக் கச்சேரியுடன் ஜனத்திரள் நெருக்கியடித்துக் கொண்டு கிளம்பியது. செங்கமலம் ஊர்வலத்தோடு நடந்து சென்றால் தானும் செல்ல நினைத்தான் தணிகாசலம். அவள் போகவில்லை. அவளை வீட்டில் இருக்கச் செய்து விட்டு, செல்லக்கண்ணு மாத்திரம் சின்ன மௌனத்துடன் நடந்தாள்.

ஊர்வலம் கோயிலுக்குத் திரும்ப இன்னும் இரண்டு மணி நேரமாவது செல்லும். சித்தப்பா கூட்டத்துடன் நடந்தார். அவருக்கு அது கடமை. சிறிய தாயார் உள்ளே தூங்கப் போய் விட்டாள். தணிகாசலத்துக்குத் தனிமை தேவையாக இருந்தது. காலியாகக் கிடந்த தெருத் திண்ணையில் விரிப்பொன்றும் போட்டுக் கொள்ளாமல் மெதுவாய்ச் சாய்ந்தான். ருசிகரமான பசும் புல்லை வயிறு நிறையத் தின்றவுடன் அசை போட விரும்பும் காளைக் கன்றின் நிலை அவனுக்கு.

சித்திரை நிலவு விண்ணிலிருந்து அமிர்த தாரை பொழிந்தது. கோவில் கோபுரம், அதை அடுத்து நின்ற தென்னைகள், எதிர்ச்சாரி வீடுகள், இடையில் தெரிந்த வீதி இவ்வளவும் பசும் பாலில் முழுகிக் கிடந்தன. தூரத்திலிருந்து நானாவித ஒலிகள்; ஒரு புறம் நாகசுர இசை; ஒரு புறம் வானத்திடையே சீறிச் செல்லும் அதிர் வேட்டுக்கள். அந்த உலகம் முழுதுமே அப்போது இளவேனிற்காலத்து நிலவின் போதையில் மயங்கிப்போயிருந்தது.



செங்கமலம் அவனுக்கு வெகு சமீபத்தில், அடுத்த வீட்டில், ஐந்தடி தூரங்கூட இடைவெளி இல்லாத நெருக்கத்தில் இருந்தாள். இருந்தும் என்ன பயன்? நிலவு கூட முகத்தில் பட்டுக் கொண்டுதான் இருக்கிறது; உறவாடிக் கொண்டுதானிருக்கிறது. ஆனால் எட்டிப் பிடிக்க முடியவில்லையே!

அவனுக்கும் அவளுக்கும் எட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு இடைவெளி இருப்பது போல் தோன்றியது. தன்னைப் போலவே அவளும் இப்போது தனித்திருப்பாள். தனக்குத்தான் உறக்கம் வரவில்லை. அவளுக்கு வருமா? அவள் ஆடிக் களைத்திருக்க மாட்டாளா? சோர்வு அவள் கண்களை வருடி உறங்கச் செய்திருக்காதா? படுக்கையில் அவள் பூங்கொடி போல் துவண்டு கிடக்கும் காட்சியைத் தணிகாசலம் கற்பனை செய்து பார்த்தான்.

தணிகாசலத்துக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஜுர வேகத்தில் அவன் இருதயம் சுட்டுக் கொண்டிருந்தது. குளுமையாக வீசிய காற்றோ, பாலாகப்பொழிந்த நிலவோ அவன் சூட்டைத் தணிக்கவில்லை. மெதுவாக எழுந்து தெருவுக்கு வந்தான். தன்னையறியாமல் நடந்து அடுத்த வீட்டு வாசலுக்கு எதிரில் நின்றான். மாடிச் சன்னலைப் பார்த்த போது அது திறந்திருந்தது. சன்னலை ஒட்டினாற்போல் நின்று கொண்டிருப்பது யார்? யார் அது?

தணிகாசலத்துக்கு அது யாரென்று தெரிந்து விட்டது. இரண்டும் இரண்டு சிலைகளாக நின்று விட்டன.

கீழே ஓர் உயிருள்ள செம்புச் சிலை தரையில் நிலைக்குத்தி நின்றது. மேலே ஓர் பளிங்குச் சிலை சன்னலில் ஆணி அறைந்த மாதிரி நின்றது.

இரண்டு சிலைகளுமே மூச்சுவிட மறந்து, கண்ணிமைக்க மறந்து, எல்லாச் சலனங்களையும் மறந்து, ஒன்றில் ஒன்று ஒன்றிப் போய் நின்றன. இடம், காலம், சூழ்நிலை, சுற்றுப்புறம் அனைத்துமே மறந்த நிலை அது. தணிகாசலம் நீண்ட பெருமூச்சு விட்டான். திடீரென்று அவனுக்கு அந்த வீட்டுக்குள் நுழைந்து போய், மாடிப்படி

யேறி, அவளிடம் சென்று, 'உன்னுடைய நடனத்தை என்னால் மறக்கவே முடியாது!' என்று சொல்லத் தோன்றியது. ஆனால் அதற்குள் அவனைப் பயம் பிடித்துக் கொண்டது. சன்னலுக்கு வெளியே தெரிந்த செங்கமலத்தின் கரத்தின் அசைவைக் கூடக் கவனியாமல் அவன் வந்த வழியே திரும்பினான்.

உலகத்தின் காதல் கதைகள் அப்போது அவன் நினைவில் வந்தன. அம்பிகாபதி இப்படித்தானே அரசிளங் குமரிக்காக நின்றிருப்பான்? அரேபிய இளைஞன் கயஸ் இப்படித்தானே லைலாவுக்காக நின்றிருப்பான்? ரோமியோ இப்படித்தானே ஜூலியத்துக்காக நின்றிருப்பான்? கதைகளில் படிப்பதைவிட அற்புதமான சம்பவங்கள் வாழ்க்கையிலும் நடக்குமா?

பழையபடி இன்னிசையில் சாயப்போன தணிகாசலம், காலடிச் சத்தம் கேட்டுப் பின்னால் திரும்பிப் பார்த்தான். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அங்கே, அந்தப் பொல்லாத நேரத்தில், அவனை நோக்கிச் செங்கமலம் வந்து கொண்டிருந்தாள்.

நிலவே பெண்ணாய்ச் சமைந்ததுபோல் அவள் அங்கு வந்து நின்றாள். தணிகாசலம் தடுமாறினான். "செங்கமலம்... நீயா?" என்றான்.

"தணி...கா...சலம்!"

அவனுக்கு ஏனோ அந்த வேளையில் அவள் அங்கு வந்தது பிடிக்கவில்லை.

"இந்த நேரத்தில் நீ வரலாமா?"

"நீங்கள் மட்டும் அங்கே வரலாமா?"

"நீ சன்னலுக்குப் பக்கத்தில் நிற்பாய் என்று தெரியாது."

"நீங்கள் தெருப்பக்கம் வருவீர்கள் என்று எனக்கும் தெரியாது."

இருவரும் சிரித்தார்கள்.

"எனக்குத் தூக்கம் வரவில்லை: தெருவில் நடந்தேன்."

"எனக்கும் தூக்கம் வரவில்லை" என்றாள் செங்கமலம்.

"செங்கமலம்! எனக்குப் பயமாக இருக்கிறது. நீ போய்விடு. நாளைக்கு நான் கண்ணபுரம் போக வேண்டும். அடுத்த நாள் வழக்கம்போல் சந்திப்போம்!" என்றான் தணிகாசலம்.

"ஊஹூம்!" என்று தலையாட்டினாள் அவள். "முடியாது!"

அவளுடைய இந்தத் துணிச்சல் அவனுக்கு முட்டாள்தனமாய்த் தோன்றியது.

"வேண்டாம், செங்கமலம்!"

"வாருங்கள், இப்படியே நடந்துபோய்க் குளத்தங்கரை அரச மரத்தடியில் உட்கார்ந்து பேசுவோம்."

"உன் அம்மா வரமாட்டார்களா?"

"ஊர்வலம் திரும்புவதற்குள் ஒரு கோடிப் பேச்சு பேசி விடலாம்."

"திருவிழாக் கூட்டம் நிறைய வந்திருக்கிறதே!"


"அதனால்தான் தைரியமாய்ச் சொல்கிறேன். நம்மைப் போல் பலர் பல இடங்களில் உட்கார்ந்து பேசுவார்கள். நம்மைக் கவனிக்க அவர்களுக்கு நேரமேது?"

நெஞ்சு பயத்தால் படபடக்க அவளுடன் நடந்தான் தணிகாசலம். இருவரும் அரச மரத்தடிக்கு வந்தார்கள்.

குளத்தங்கரையில் ஒவ்வொரு பக்கத்திலும் நாலைந்து அரச மரங்கள். மரங்களைச் சுற்றிலும் உட்கார்ந்து கொள்வதற்கு வசதியாகச் சதுரக்கல் பதித்திருந்தார்கள். கிழக்கு மூலையில் இருந்த ஓர் மரத்தடி நிழல் இருவருக்கும் தனிமை தந்தது. உட்கார்ந்தார்கள்.

வலது பக்கத்தில் தாமரைக் குளம், அதை அடுத்து வயல்வெளி, அதை அடுத்து ஐயனார் கோயில், கோயிலுக்





எஸ்ட்ரேலா
பாட்டரீஸ்
ESTRELLA
BRIGHT LIGHT
LONG LIFE
ESTRELLA BATTERIES LTD
BOMBAY
இருட்டு நேரங்களில்
உங்களுக்கோர் வழிகாட்டி
எஸ்டிரெல்லா பாட்டரீஸ் லிட்.
பம்பாய் — மதாராஸ் — டெல்லி — நாகபூர் — கல்கத்தா — கான்பூர்

NAS-56 E 7



மனோரம்மியமான இந்த
கூந்தல் தைலத்தை
பரிட்சித்துப் பாருங்கள்
இலவசமாகக்
கிடைக்கும்!
மாதிரி சைஸ் : ந. பைசா 75
நடுத்தர சைஸ் : ரு. 1.87
பெரிய சைஸ் : ரு. 3.25
உள்ளூர் வரிகள் தனி.
இனம்.
அனுப்பினால்
போஸில்,
போஸில்
வாசனை
கேஸ்டர் ஆயில்

கப்பால் ஏரிக்கரை. எங்கும் பொழிந்த நிலா, ஓட்டைக் குடையில் தண்ணீர் வழிவது போல், மரத்தடிக்குள்ளும் பொட்டுப் பொட்டாய்க் கசிந்துகொண்டிருந்தது. ஊர்வலத்து நாதசுரக்காரரின் கல்யாணி ராக ஆலாபனை வெகு தொலைவிலிருந்து கேட்டது.

''ஏதாவது பேசுங்களேன்'' என்றாள் செங்கமலம்.

''நேற்று நீ கூறியது என் நினைவுக்கு வருகிறது. நடனம் முடிந்தவுடன் எங்கேயாவது புறப்பட்டுப் போய் விடலாம் என்று சொன்னாயே, அதை நினைத்துக் கொண்டிருக்கிறேன்.''

செங்கமலம் சிரித்தாள். ''அந்த முட்டாள்தனத்தை நாம் இருவருமே செய்ய மாட்டோம். எனக்கு உங்களிடம் நம்பிக்கை உண்டு.''

நிலவின் சிறு கீற்று அவள் கன்னத்தில் பட்டு விளையாடியதைத் தணிகாசலம் கவனித்தான்.

''பேசுங்கள்! உங்கள் வாயால் என் நடனத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமென்று எனக்கு ஆசை இருக்காதா?''

''செங்கமலம்! நடனமா அது?.... சொன்னால் நான் உளறுவதாய் நினைக்க மாட்டாயே?'' அவன் தொடர்ந்து உளறினான். ''நீ என்னை எங்கேயோ கோபுரத்தின் உச்சியில் தூக்கி வைத்து விட்டாய். என் உயிர் உன்னுடைய ஒவ்வொரு அசைவிலும் ஒட்டிக் கொண்டு உன்னையே பம்பரமாய்ச் சுற்றி வந்தது. நீ பொல்லாதவள். மென்மையே தெரியாத என்னைக் குழைத்தெடுத்து உன் கண்ணின் மையாகத் தீட்டிக் கொண்டாய்; கழுத்துச் சங்கிலியாக வளைத்துக் கொண்டாய்; வண்ணச் சதங்கையாக அணிந்து கொண்டாய்.''

செங்கமலத்துக்கு இப்படி ஒரு பையனால் உளற முடியுமென்று தெரியவில்லை. அவளும் பைத்தியமானாள்.

''நீங்கள்தான் என்னை இப்போது தூக்கிக் கொண்டு பறக்கிறீர்கள். இந்த நாளை என்னால் மறக்கவே முடியாது; மறக்கவே முடியாது!''

அரச மரத்தின் தளிர்போல் அவள் தேகம் நடுங்கியது.

சரேலென்று ஒரு வாணம் கிளம்பி வெடிக்கவே அவர்கள் பேச்சை நிறுத்தினார்கள். மேலும் மேலும் தொடர்ந்தாற் போல் வாணங்கள் சீறிக் கொண்டே இருந்தன. செங்கமலம் காதைப் பொத்திக் கொண்டு, ''இப்போது எனக்குப் பயமாக இருக்கிறது'' என்றாள்.

தணிகாசலம் அவள் பயத்தைச் சட்டை செய்யாமல் தன்னுடைய நம்பிக்கை நிறைந்த எதிர்காலத்தை அவளிடம் விவரித்தான். அடுத்த நாள் கண்ணபுரத்துக்குப் போய்க்கையெழுத்து வாங்கிக் கொடுக்க வேண்டும். பிறகு வெகு சீக்கிரத்தில் வேலை கிடைத்து விடும். வேலை கிடைத்த பின்பு செங்கமலம் புதுப்பட்டியில் இருந்தால் விடுமுறையில் அவளைப் பார்க்க வருவான். கண்ணபுரத்துக்கே அவள் வந்து விட்டால் அங்கு சந்திக்க முயற்சி செய்வான்.-எல்லாம் அவள் சொல்லக் கூடிய முடிவான பதிலைப் பொறுத்திருக்கிறது.

''என்னிடம் சொல்லாமல் மாத்திரம் நீ ஊருக்குப் போய் விடாதே! அதை என்னால் தாங்க முடியாது.''

''பயப்படாதீர்கள்'' என்று கூறிச் சிரிக்க முயன்றாள் செங்கமலம். அவளால் சிரிக்க முடியவில்லை. பயம் அவள் சிரிப்பைப் பாதியில் நிறுத்தியது.



''இந்த வெடிச் சத்தம் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. வருகிறீர்களா, போவோம்!''

''அம்மா வர நேரமாகும் என்றாயே?''

''பாதியில் கிளம்பி வந்தாலும் வந்து விடும். வேண்டாம், இனி இங்கே தங்க வேண்டாம்.'' அவள் எழுந்தாள்.

''நீதானே என்னை இங்கே அழைத்துக் கொண்டு வந்தாய்?''

''ஆமாம், நான்தான் இப்போது உங்களை வீட்டுக்குக் கூப்பிடுகிறேன். வாருங்கள்.'' பயத்தால் அவள் அழுது விடுவாள் போல் தோன்றியது.

தணிகாசலமும் எழுந்தான். அதிர்வேட்டுச் சத்தம் அவனைக் கலக்கி விட்டது; அவளுடைய தாயாரின்

நினைவை எழுப்பிவிட்டது. அந்த நினைவு வந்தபிறகு அவள் பெண்ணாகவே இல்லை.

இருவரும் கோயிலின் வெளிப்பிராகாரத்து மதிலின் நிழலில் நடந்தார்கள். நீண்ட ஒற்றையடிப்பாதை அது. அங்கே நிலவு இல்லை. இருள் மங்கலாகப் பரவிக் கரைந்தோடிக் கொண்டிருந்தது. காய்ந்த இலைச்சருகுகள் காலில் பட்டு இலேசாகச் சத்தமிட்டன.

எதிரே பத்தடி தூரத்தில் ஒரு பெண்ணுருவம் வந்தது. பெண்ணாக அது தோன்றவில்லை. ஒரு கணம் அவர்கள் இருவரையும் நின்று பார்த்துவிட்டு, வெகு வேகமாக அவர்களை நெருங்கி நடந்தது. செங்கமலம் 'ஆ!' என்று அலறிக் கொண்டே 'தணிகாசலத்தின் கரத்தைப் பிடித்தாள். பிறகு தேள்



கொட்டியது போல் உதறிக் கொண்டு விட்டு விட்டாள்.

எதிரே வந்துகொண்டிருந்தவள் செங்கமலத்தின் தாயார் செல்லக்கண்ணு.

அருகில் வந்தவுடன் அவள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். அந்த இருளில் கூட அவள் விழிகள் நெருப்பைக் கக்குவது அவனுக்குத் தெரிந்தது. காளிதேவியை அவன் கண்டதில்லை, இன்று கண்டு விட்டான்.

இடது கையால் செங்கமலத்தின் கழுத்தைப் பற்றினாள் செல்லக்கண்ணு. "ஏண்டி! நான் பெற்ற பெண்ணா நீ? உன்னை நான் எங்கெல்லாம் தேடுவது? எத்தனை நாளாய் இப்படி நடக்கிறது? அடிபாவி! காரியத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டாயே!"

அவளை ஒரு தள்ளுத் தள்ளிவிட்டு அவன் பக்கம் திரும்பினாள்.

"ஏம்பா தம்பி, தர்மகர்த்தா குடும்பத்துக்கு இது அவமானமில்லையா? நீ படிச்ச பையன். இப்படிச் செய்யலாமா? இது உனக்கு நல்லா யிருக்கா?"

அவனுக்கு இது எப்படி நன்றாக இருக்கும்,—அவள் இந்த வேளையில் குறுக்கே வந்து விட்டது?

பலி கொடுக்கப் போகும் ஆட்டுக் குட்டியை இழுத்துச் செல்வது போல் தன் மகளைப் பரபர வென்று தள்ளிக் கொண்டு போனாள் செல்லக்கண்ணு. தணிகாசலத்துக்குக் கண்கள் கலங்கி விட்டன. தன்னால் அவளுக்கு நேர்ந்து விட்ட அவமானத்தை அவனால் பொறுக்க முடியவில்லை. அவளுக்கு மாத்திரமா இந்த அவமானம்?

மிகப் பெரிய மனிதன் என்று தன்னை எண்ணிக் கொண்டிருந்தவன் இப்போது மிகச் சிறிய மனிதன் என்று எண்ணினான். அடுத்தாற்போல் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகள் அவனைச் சல்லடைக் கண்களாய்த் துளைத்தன. இப்போது செல்லக்கண்ணு அவளை அழைத்துக் கொண்டு போய் என்ன செய்வாள்? செங்கமலம் அவளுக்கு என்ன பதில் சொல்லுவாள்?

இன்னும் ஊர்வலம் முடிந்த பாடில்லை. சித்தப்பா வரும் வரையில் காத்திருந்து அவரிடம் அவள் சொல்ல மாட்டாள் என்பது என்ன நிச்சயம்? அல்லது சித்தியையே தூக்கத்திலிருந்து எழுப்பிச் சொல்ல மாட்டாள் என்பது தான் என்ன நிச்சயம்? இனி வீட்டுக்குப் போகலாமா, வேண்டாமா? வீட்டுக்குப் போகாமல் வேறு எங்கே போவது? போனால் மற்றவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது? சே! சிறுபிள்ளைத்தனம்!


செங்கமலத்தையும் அவன் நொந்து கொண்டான். யார் இவளை இப்படி நள்ளிரவில் வரச் சொன்னது? பயந்து நடுங்கும் இந்த முட்டாள் பெண்ணுக்கு இந்த அசட்டுத் துணிவு ஆகவே ஆகாது. பலர் பலமாதிரி நினைத்துக் கொள்வதற்கு இடம் கொடுத்து விட்டாள்.

அடுத்த ஐந்து நிமிஷத்தில், அல்லது மறுநாள் பொழுது விடிந்தவுடன் என்ன நடக்கப் போகிறதோ என்ற கிலி அவனைப் பிடித்துக் கொண்டது. கால்களை முன் வைத்து மேலே நடக்கலாமா, பின் வைத்து வேறு பக்கம் திரும்பலாமா என்று அவன் போராடிக் கொண்டிருந்தான். கோயிலுக்குள்ளிருந்த மகிழ மரத்திலிருந்து ஒரு ஆந்தை அலறியது. நாயனக்காரர் வாசித்த காம்போதி இப்போது காம்போதியாக ஒலிக்கவில்லை; முகாரியாக ஓலமிட்டது. தணிகாசலம் தயங்கினான்; தடுமாறினான். (தொடரும்)

பூச்சிகள் உங்கள் வீட்டில்

உபத்திரவம்

செய்யவிடாதீர்கள்!



லின்டேன் கலந்த ப்ளிட் உபயோகித்து



அவைகளின் தொல்லையை ஒழியுங்கள்!

வீட்டில் நடமாடும் பூச்சிகள் ஒரு பெரிய தொல்லையாயிருப்பதோடு மட்டுமின்றி, பலவித வியாதிகளைப் பரப்பவும் செய்யலாம்! எப்பொழுதும் ஜாக்கிரதையாகவே இருங்கள். பூச்சிகளை அனைப்பொழுதில் சீக்கிரமாகக் கொல்லும் சக்தி வாய்ந்த லின்டேன் கலந்த ப்ளிட்டைத் தவறாமல் உபயோகியுங்கள்! முன்னிலைவிட தீவிர சக்தியாய்ந்த இந்த பூச்சிகொல்லி அதிக துரிதமாக வேலை செய்கிறது. இதில் லின்டேனும், டி.டி.டி.யும் (D.D.T.) ஒருங்கே சேர்ந்துள்ளதால், இதன் பலன் அதிக காலம் நீடித்து நிற்கிறது. லின்டேன் கலந்த ப்ளிட் புகழ் பெற்ற ஸ்பிரே, வெள்ளை மற்றும் சிவந்த டின்னில் கிடைக்கும்.



ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி
(யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பெற்றது: கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

V. 4507

காந்தி ஜயந்தி

பேராசிரியர் கல்கி

சொல்லினில் அடங்குவதில்லை ; நினைவுக்குள் நிற்பதில்லை. கற்பனைக்கு எட்டுவதில்லை — காந்தி மகாத்மாவின் பெருமை.

கவிதை திகைக்கிறது. காவியம் திணறுகிறது. கலைகள் தலை வணங்குகின்றன— காந்திஜியின் அற்புத சரிதத்தை எண்ணி.

இமயத்தைக் காட்டிலும் உயர்ந்து நின்றவர் ; கங்கை நதியைக் காட்டிலும் புனிதமானவர், சூரியனை விடத் தேஜஸ் படைத்தவர். தாயைக் காட்டிலும் கருணை உள்ளவர்; கடவுளைப் போல நம்மைக் காக்க வந்தவர்; சத்தியத்தைப் போலச் சலியாது நின்றவர், உலகம் போற்றும் உத்தமர்.

பாரத புண்ணிய பூமியில் இன்றைக்கு எண்பது வருஷங்களுக்கு முன்னால் அவர் பிறந்தார். 1869-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ந்தேதி இந்த உலகத்தை உய்விக்க அவதரித்தார். அந்தப் புனித தினத்தை இன்று கொண்டாடுகிறோம்.

பாரத நாட்டில் இதற்கு முன்னால் இரண்டு அவதார புருஷர்களுடைய பிறந்த நாளைத்தான் தேசமெங்கும் கொண்டாடுவது வழக்கம். ஸ்ரீ ராமபிரான் அவதரித்த ராமநவமி உற்சவம் கொண்டாடுகிறோம். ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஜன்மம் தரித்த கோகுலாஷ்டமி அல்லது கிருஷ்ண ஜயந்தியைக் கொண்டாடுகிறோம். ஸ்ரீ ராமபிரான் கையில் கோதண்டம் ஏந்தி இராவணாதி ராட்சதர்களை வதம் செய்து மக்களைக் காப்பாற்றினார்.

ஸ்ரீ கிருஷ்ண பகவானோ பூதகி, சகடாசுரன் முதல் கம்ஸன், ஜராசந்தன், சிசுபாலன், தந்தவக்ரன் வரையில் பல அசுரர்களையும் கொடுங்கோலர்களையும் வதம் செய்து மக்களைக் காப்பாற்றினார்.

இவையெல்லாம் இதிகாசங்களில் நாம் படித்தவை. இந்நிகழ்ச்சிகளைப் பரம்பரை பரம்பரையாக உண்மை என்று நம்பி ராமநவமியும் கிருஷ்ண ஜயந்தியும் கொண்டாடி வருகிறோம்.



நம்முடைய காலத்தில் நம் கண் முன்னே நடமாடிய அவதார புருஷர் மகாத்மா காந்தி. இவர் பாரத மக்களை அடிமைத்தனம் என்னும் கொடிய பூதத்தின் வாயிலிருந்து காப்பாற்றினார். தீண்டாமை என்னும் ராட்சதன், மதுபான மென்னும் அரக்கன், அறியாமை என்னும் காட்டேரி ஆகியவர்களிடமிருந்து நம்மை ரட்சித்து அருளினார்.

ஸ்ரீ ராமர் கோதண்டம் ஏந்தினார். ஸ்ரீ கிருஷ்ணன் சக்ராயுதம் தரித்தார். ஆனால் காந்தி மகாத்மாவோ பலாத்கார ஆயுதங்களை அடியோடு புறக்கணித்து அஹிம்சையாகிய வில்லையும் சத்தியமாகிய சக்கரத்தையும் தரித்துப் 'பாழ்பட்டு நின்ற பாரத தேசந்தன்னை' அடிமைத்தனம் முதலிய அரக்கர்களிடமிருந்து காப்பாற்றிப் பாரத மக்களுக்கு வாழ்வை அளித்தார்.

அத்தகையவர் அவதரித்த தினத்தை இன்று கொண்டாடுகிறோம்.

ஒருவர் நமக்கு ஒரு உதவி செய்தால் அதை உயிர் உள்ள வரைக்கும் மறக்கக் கூடாதென்பது மனித குலத்தின் தர்மம். மக்களில் உயர்ந்தோர் அனைவரும் இந்தத் தர்மத்தை வற்புறுத்தி யிருக்கிறார்கள்.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாய்க்
கொள்வர் பயன் தெரிவார்!"

என்று தமிழ்மறை சொல்லுகிறது.

காந்தி மகாத்மா நமக்குச் செய்திருக்கும் நன்றி தினைத் துணையானதா? அற்பசொற்பமானதா? அதற்கு ஈடு இணை சொல்ல வேறு ஒன்று உண்டா?

காந்தி மகாத்மா தோன்றி இந்திய மக்களை அடிமை நிலையிலிருந்து உயர்த்தினார். மாநிலத்தில் நம்மை மனிதர்கள் ஆக்கினார். உலக சரித்திரத்தில் கண்டும் கேட்டும் அறியாத அஹிம்சா தர்ம முறையினால் பாரத நாடு சுதந்திரம் பெறச் செய்தார். இதன் மூலம் பாரத தேசத்தை உலகத்துக்கே வழிகாட்டும் ஜோதியாக விளங்கச் செய்தார்.

அத்தகைய மகாபுருஷரை, மாந்தருக்குள் தெய்வத்தை மறக்க முடியுமா?


உலக கலைஞர்கள்
கண்ட உத்தமர்



உலகில் வேறு யாருக்கும் இல்லாத' சிறப்பு காந்தி மகாத்மா ஒருவருக்குத்தான் இருந்தது. அவரை ஒவ்வொரு அறிஞரும் ஒவ்வொரு கோணத்தில் பார்த்துப் பக்தி செலுத்தி வருகிறார்கள். உலக சித்திரக் கலைஞர்கள் அந்த உத்தமரை எப்படி யெல்லாம் பார்த்திருக்கிறார்கள் என்பதை இங்கே காணலாம்.

1. ஒரு சீன சித்திரக்காரர், 2, 3, 7, 10, 12. 1932-ம் ஆண்டு இங்கிலாந்துப் பத்திரிகைகளில் வெளியானவை. 4. ஆஸ்கார் பெர்கர். 5. 1918-ம் ஆண்டில் திரு லூக் டே. 6. லண்டன் சித்திரக்காரர் திரு கிலன். 8. ஒரு அமெரிக்கச் சைத்ரிகர். 9. திரு ஜே. கிரேஸ். 11. திரு டேவி.











மகாத்மா மணிமொழிகள்

ஒருவன் தைரியத்தையோ அல்லது நம்பிக்கையையோ மற்றவர்களிடம் கடன் வாங்க முடியாது. பகவத்கீதை அறிவிப்பது போல் சந்தேகமுள்ள மனிதன் அழிவுக்கு இலக்காகிறான்.

★

சத்தியம் என்னும் வலிவான அஸ்திவாரத்தின் மேல்தான் உலகம் நிற்கிறது. அசத்தியம் என்பது 'இல்லாதது' பொய்மை என்றும், சத்தியம் என்பது 'இருப்பது', வாய்மை என்றும் பொருள்படும். அசத்தியம் என்பது 'இல்லாதது'; ஆகையால் அதன் வெற்றிக்கு இடமேயில்லை; சத்தியம் இருப்பது; ஆகையால் அதை அழிக்கவே முடியாது. இது தான் சத்தியாக்கிரகக் கொள்கையின் ரத்தினச் சுருக்கம்.

★

மனிதனின் உண்மையான தொழில் அவன் தன்னுடைய ஒழுக்கத்தை விருத்தி செய்து கொள்ள வேண்டும் என்பது. பணத்தைச் சம்பாதிப்பதற்காக விசேஷமாக எதையும் படித்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியமே கிடையாது. ஒருவர் நேர்மையான மார்க்கத்தை மாத்திரம் பின்பற்றுவாராயின் அவர் பட்டினி கிடக்கவே நேராது. அப்படிப்பட்டதோர் நிலைமையே ஏற்பட்டு விட்டாலும் அவர் அச்சமின்றி அதைச் சமாளிக்கவும் தயாராக இருப்பர்.

★

சுயமரியாதை என்பது கர்வமோ அல்லது அகம்பாவமோ அல்ல. பயத்தினாலோ, சாப்பேறித் தனத்தினாலோ உரிமைகள் இழந்துவிட அனுமதிப்பதில்லை என்ற ஒரு மனநிலையே சுயமரியாதையாகும். கடவுளிடம் நம்பிக்கை யுள்ளவன் சுயமரியாதையையும் அடைகிறான். கடவுளிடம் நம்பிக்கை இல்லாதவனுக்கு உரிமை என்பது இன்னதெனத் தெரியாது; நல்லது செய்வது எப்படி என்பதும் அவனுக்குத் தெரியாது என்பதே என்னுடைய திடமான நம்பிக்கை.

வர்ணாசிரமம் என்பது மனிதன் இந்த உலகில் ஆற்ற வேண்டிய பணியை அறிவுறுத்துகிறது. அவன் கோடி கோடியாகப் பணத்தைக் குவித்து, பெரிய பெரிய வீடுகளைக் கட்டுவதற்காகப் பிறக்கவில்லை; வாழ்க்கையின் சௌகரியங்களைத் தும் கண்டு பிடிப்பதற்காகவும் தோன்றவில்லை. ஆனால் மனிதன் தனது சக்தியின் ஒவ்வொரு அணுவையும் தன்னைக் கடவுள் படைத்ததின் நோக்கத்தையறிந்து ஈடுபடுத்த வேண்டும்.

★

நான் அஹிம்சையிலும், சத்தியாக்கிரகத்திலும் நம்பிக்கையுடன் மூழ்கிப் போயிருக்கிறேன். அஹிம்சையும் உண்மையும் எனக்கு இரண்டு சுவாசப் பையைப் போல. சுவாசப் பை இல்லா விட்டால் மனிதன் எப்படி வாழ முடியாதோ, அப்படியே அஹிம்சையும் உண்மையும் இல்லாமல் என்னால் வாழ முடியாது.

★

கதர் அனைவருக்கும் வேலை அளிக்கிறது. மில் துணி சிலருக்கே வேலையளித்து, பலருடைய உண்மையான தொண்டை விழுங்கி விடுகிறது. கதர் மக்களுக்கு உதவுகிறது; ஆனால் மில் துணி சில வகுப்பினருக்கே பயன்படுகிறது. கதர் தொழிலுக்கு உறுதுணை செய்கிறது; மில் துணி அதைப் பறித்து விடுகிறது.

★

பெரும்பான்மை என்னும் விதி குறுகிய முறையில் பயன்படுத்தப் படுகிறது. ஒருவர் விரிவான முறையில் பெரும்பான்மை விதிக்கு உட்பட வேண்டியதுதான். ஆனால் பெரும்பான்மை என்று கூறி, எதற்கும் தலையசைத்து அடிபணிவது அடிமைத்தனமாகும். ஜனநாயகம் என்பது அந்நாட்டு மக்கள் ஆடுகளைப் போல் தலையசைத்துச் செல்ல வேண்டும் என்பதில்லை. ஆனால் ஜனநாயகத்தில் ஒவ்வொருவருடைய அபிப்பிராய சுதந்திரமும் செயலும் காக்கப்பட வேண்டும்.



அப்போது மணி ஒன்பதரை இருக்கும். கணவனை வேலைக்கு அனுப்பி விட்டுத் தன் பெட்டி யருகே வந்தாள் வஸந்தி. பெட்டிக்கடியிலிருந்த ஓலைப் பையைத் திறந்து அதிலிருந்த பணத்தை எண்ணிப் பார்த்தாள். சரியாய் எண்பத்திரண்டு ரூபாய்கள் இருந்தன. 'கார்த்திகைப் பண்டிகைக்குள் ஒரு ஜோடி தங்க வளையல்கள் செய்து கொள்வதற்கான பணத்தைச் சேர்த்து விடலாம்' என்று எண்ணிக் கொண்டாள்.

இதற்காகத்தான் அவள் எவ்வளவு பாடுபட்டிருப்பாள்! தாயின் கடைசிக் கோரிக்கையைப் பூர்த்தி செய்வதே அவள் லட்சியமாக இருந்தது. எத்தனை கஷ்டங்களை அனுபவித்தாலும் வீட்டுச் செலவில் மிச்சப்படுத்தியே பணம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தன்னுடைய சௌகரியங்களையெல்லாம் குறைத்துக் கொண்டு அங்கே வந்திருந்தாள்.

உடனே கல்யாணத்துக்கு முன் நடந்த சம்பவங்கள் சில அவள் மனக்கண்முன் தோன்றின.

★

அன்று பார்வதி அம்மாள் கவலை தோய்ந்த முகத்தோடு உட்கார்ந்திருந்தாள். எதிர்பாராதவிதமாக அவள் மதனி மரகதம் தன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஒரு வாரம் இருந்துபோக வந்திருந்தாள். அதிகப்படி செலவுக்குத் தேவையான பணத்தைத் தன் கணவனிடமிருந்து பெறலாம் என்ற எண்ணத்தோடு விஷயத்தைப் பிரஸ்தாபித்தாள் பார்வதி. சங்கரய்யரின் குணம் தெரிந்தும் அவள் இவ்வாறு செய்யத் துணிந்தது வஸந்திக்கு வியப்பாயிருந்தது.

விஷயத்தைக் கேட்ட சங்கரய்யர், "என்ன, பணமா? என்னைக் கேட்டால்?" என்றார்.

" பின் யாரைக் கேட்பது?"

" எனக்குத் தெரியாது. ஆனால் பைசாக் காசு இங்கே புரளாது." சங்கரய்யர் பணம் தர மறுத்ததும் பார்வதி அம்மாளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தாய் படும் அவஸ்தையைக் கண்ட வஸந்திக்கும் வருத்தமாகத்தானிருந்தது. பெண்ணிடம் தன் இண்டாட்டத்தை எடுத்துக் கூறினாள் பார்வதி அம்மாள்.

"வீடு தேடி வந்தவர்களிடம், 'பணமில்லை. நீங்கள்ஊருக்குப் போங்

கள்' என்று எப்படிச் சொல்வது வஸந்தி? உன் அப்பா இப்படிச் சொல்கிறாரே!" என்றாள்.

"மாமியைத் திருப்பி அனுப்பினால் மானமே போய் விடும், அம்மா!"

"அதுதான் நானும் பார்க்கிறேன். ஒரு வாரமாவது அவர்களை வைத்துக் கொண்டு செய்ய வேண்டாமா? அதுவும் ஊருக்கு அனுப்பும்போது குழந்தைகளை வெறும் கையுடன் அனுப்பவும் முடியாதே! ஏதாவது வாங்கிக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். என்ன செய்வதென்றே தெரியவில்லையே!"

வஸந்தி யோசனையில் ஆழ்ந்தாள். திடீரென்று அவள் முகம் பிரகாசித்தது.

"அம்மா! போன தீபாவளிக்கு நீ எனக்கொரு ஜோடி தங்க வளையல்கள் வாங்கிக் கொடுத்தாயே, அதை விற்று விடேன்" என்று கூறினாள்.

"விற்பதா? உன் வளையல்களை விற்பதா? அது முடியாத காரியம்."

"ஏனும்?"

"ஏனா? அவைகளை விற்க எனக்கு எப்படி மனம் வரும்? எவ்வளவு ஆசையாக உனக்காக வாங்கினேன். வாங்கின கையாலேயே விற்கச் சொல்கிறாயே!"

"வேறு வழி இல்லையே, அம்மா!"

பார்வதி யோசித்தாள்; ஆம், வேறு வழி இல்லைதான். மகள் கூறியவாறே வளையல்களை விற்று விடுவது என்று தீர்மானித்து அவைகளைப் பெட்டியிலிருந்து எடுத்தாள். ஆனால்...

சீ! குழந்தையின் நகையை விற்பதா? அவளுக்கு எவ்வளவு பிடித்தமான வளையல்கள்! எவ்வளவு ஆசையாய்ப் போட்டுக் கொள்வாள்! அவைகளை அணியும்போது அவள் முகத்தில் தவழும் இன்பமே அலாதிதான். அந்த வளையல்களை விற்பதைவிடக் கடனே வாங்கி விடலாம் அல்லவா?

கடன் வாங்கினால்தான் என்ன?

கடன் வாங்கிவிட்டால் பிறகு வஸந்தி வெகுவாய்க் கோபிப்பாள். தன்னை வேற்று மனுஷியாக மதித்ததாகத் தாய்மேல் குற்றம் சாட்டுவாள். அதை எப்படிப் பொறுக்க முடியும்? அதைவிட வளையல்களை விற்பதே மேல்.

மனத்தில் ஒரு தீர்மானமுமில்லாமல் இப்படியும் அப்படியும் வெகுநேரம் எண்ணமிட்ட பிறகு பார்வதி அம்மாள் வளையல்களை எடுத்துக் கொண்டு தட்டான் கடையை நோக்கி வேகமாக நடந்தாள்.

★

வஸந்திக்கு விவாகம் நடந்தேறியது. அதற்கு முன்னாலேயே தான் விற்ற வளையல்களுக்குப் பதிலாக வேறு ஒரு ஜோடி வளையல்கள் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று பார்வதியம்மாள் நினைத்தாள். அது முடியாமல் போகவே "வரும் கார்த்திகைப் பண்டிகைக்காவது வாங்கிக் கொடுத்துவிட வேண்டும்" என்று தீர்மானித்தாள்.

சம்சாரசாகரத்தில் மூழ்கியவர்கள் செய்யும் தீர்மானங்களெல்லாம் பலித்து விடுவதில்லையே! அதைப்போல் பார்வதி அம்மாளின் தீர்மானமும் பலிக்காமல் போய் விட்டது.




"ஏதாவதொரு தடை வந்து கொண்டேயிருக்கிறது. என்ன செய்யலாம்? பிழைத்துக் கிடந்தால் அடுத்த கார்த்திகைக்குள் வாங்கிக் கொடுத்துவிட வேண்டும். வளையல்களை விற்றதிலிருந்து ஏனோ என் மனமே சரியில்லை" என்று எண்ணமிட்டாள்.

மூன்று மாதங்கள் சென்றன. அப்போது வேறொரு ஊரில் தனிக்குடித்தனம் வைத்திருந்தாள் வஸந்தி. ஒருநாள் அவளுக்குச் சங்கரய்யரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் பார்வதி அம்மாள் மரணத்தறுவாயில் இருப்பதாகவும் வஸந்தியைக் காண விரும்புவதாகவும் எழுதப்பட்டிருந்தது.

வஸந்தி திடுக்கிட்டாள். தந்தையிடமிருந்து வந்த கடைசி இரு கடிதங்களிலிருந்து அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று அவள் அறிந்திருந்தாள். ஆனால் அவர் கடிதங்களை எழுதியிருந்த விதத்திலிருந்து கவலைக்கு இடமில்லை என்றே வஸந்தி எண்ணியிருந்தாள். அப்படியிருக்க அணுகுண்டை வீசித் தலைமேல் எறிந்ததுபோல் இதென்ன செய்தி?

அன்னையின் அருகே ஓடோடிச் சென்றாள் மகள். அவளைத் தழுவிக்கொண்டு வெகுநேரம் கண்ணீர் விட்ட பார்வதி கடைசியாக, "வஸந்தி! நான் பிழைக்க மாட்டேன். உன் வளையல்களைத் திருப்பித் தராமலேயே போகிறேன். வரும் கார்த்திகைப் பண்டிகையன்றாவது உன் கையில் ஒரு புதுஜோடி வளையல்கள் மின்னினால்தான் என் ஆத்மா சாந்தியடையும். உன் அப்பாவிடம் நடந்தவற்றையெல்லாம் கூறி வாங்கித்தரச் சொல்" என்றாள்.





பார்வதி அம்மாள் இறந்து பத்து நாட்களாயின. அன்னை போன பிறகு அவள் செய்த இக்காரியத்தைப் பற்றித் தந்தையிடம் பிரஸ்தாபிக்க வஸந்தி விரும்பவில்லை. 'கார்த்திகைக்குள் ஒரு ஜோடி வளையல்கள் வாங்கிக் கொள்ள வேண்டும். அவ்வளவுதானே? நானே பணம் சேர்த்து வாங்கிக் கொள்கிறேன்' என்று சொல்லிக் கொண்டாள்.

அதிலிருந்து அவள் பணம் சேர்ப்பதில் முனைந்தாள். ஒவ்வொரு மாத இறுதியிலும் அம்மாதப் பணத்தில் மிஞ்சுவதைப்பெட்டிக்கு அடியில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டாள். அன்னையின் ஆசையை எப்படியும் பூர்த்தி செய்து விடலாம் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்து வந்தது.

*

அன்று ஆபீஸிலிருந்து திரும்பிய கணவனைப் பார்த்து வஸந்தி, "ஏன் ஒருமாதிரி இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"என் நண்பன் பரசுராமன் இல்லே? அவன் மனைவி ரொம்ப உடம்பு சரியில்லாமல் படுத்துக் கொண்டிருக்கிறாளாம். சேர்த்து வைத்திருந்த பணத்தை யெல்லாம் போன மாதம் தில்லியில் அவன் தங்கைக்குக் கல்யாணம் நடந்தபோது அதற்குப் போய் வர எடுத்துச் செலவழித்து விட்டானாம். இப்போது வைத்தியத்துக்குப் பணம் இல்லை, பாவம். அதற்காகச் செட்டியாரைக் கடன் கேட்டானாம். அவரோ தேனொழுகப் பேசி விட்டுக் கடன் கொடுக்க மறுத்து விட்டார். என்னைக் கேட்டான். அவன் முகத்தைப் பார்த்தால் பரிதாபமா யிருந்தது. கடன் கொடுக்கச் சம்மதித்து விட்டேன்."

"உங்களிடம் பணம் இல்லையே, பின்...."

"என் மோதிரத்தை விற்றால் எழுபத்தைந்து ரூபாய் வராதா? அவனுக்கு வேண்டியது அவ்வளவுதான்."

"மோதிரத்தை விற்று? அது உங்கள் தகப்பனாரின் அடையாளமல்லவா? அதை ஒரு நாளும் விற்கக் கூடாது."

"எனக்கு மட்டும் இதை விற்பதில் இஷ்டமென்று நினைக்கிறாயா வஸந்தி? எவ்வளவு மனப் போராட்டத்துக்கப்புறம் இந்தத் தீர்மானம் செய்திருக்கிறேன் தெரியுமா? என் தகப்பனார் தம் வாழ்நாள் முழுவதையும் பிறருக்காகவே அர்ப்பணம் செய்தார். அவரது மோதிரம் என் கையில் உபயோகமற்றுக் கிடப்பதைவிட ஒருவனுக்கு உதவியாகவாவது இருக்கட்டும்."

"என்ன இருந்தாலும்..."

"வேறு வழி இல்லே, வஸந்தி!"

வழி இல்லையா? ஏன் இல்லை? வஸந்திக்குப் பெட்டிக்கடியில் இருந்த பணத்தின் ஞாபகம் வந்தது. அதை அடுத்துத் தாயின் கடைசி விருப்பமும் நினைவுக்கு வந்தது. அவள் எப்படி அம்மாவின் கடைசிக் கோரிக்கையைப் பூர்த்தி செய்ய விரும்பினாளோ, அப்படித் தானே கோவிந்தனும் தன் தகப்பனார் கொடுத்த மோதிரத்தைப் பத்திரப்படுத்த விரும்புவான்? இப்போது தன் கடமை என்ன?

மோதிரத்தைக் குறித்துக் கோவிந்தன் கூறியது அவள் காதுகளில் மீண்டும் ஒலித்தது.

கல்கெமிகோவின்

காந்தரிடைன்

கூந்தல் தைலம்



மிகவும் உத்தமமான ஆலிவ் ஆயிலும் மற்ற தாவர எண்ணெ களும் சேர்ந்த தரமான காந்த ரிடைன்டன் விஞ்ஞானமுறையில் கலக்கப்பட்டிருக்கின்றன. இத்தைலம் அழுக்குகளை நீக்கி முடி வளர்ச்சியைத் துரிதப் படுத்துகிறது.

இதன் நறுமணம் அலாதி யானது. மிகச் சிறந்தது.

5 அவுன்ஸ் அழகான சீசா

கல்கத்தா கெமிகல் சோ. லிட்.,
கல்கத்தா - 29.

CAR-TR-4

தென் இந்திய ஆபீஸ் : 5/149, பிராட்வே, சென்னை-1

5,00,000 கதிர்கள் | பருத்தி நூல்கள் | கௌ. 80 வரை நூல்கள்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்., மதுரை

மில்கள் : மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்

★

கைத்தறி இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கான சகலவிதமான நூல்கள்

★

விசேஷ ரகங்கள் :

கயிறுகள், விழுதுகள், கித்தான்கள், நாடாக்கள் முதலியவைகளுக்கான விசேஷ நூல்கள்-தையல் நூல்-முறுக்கேற்றிய திரித்த சரடுகள் முதலியன

★

மானேஜர்கள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

பாண்டியன் பில்டிங்

போன் : 420 (4 லைன்) மதுரை தந்தி : "ஹார்வி"

காந்தித் தாத்தா!

தமிழமுகன்

○✻○

தாத்தா காந்தித் தாத்தா ;— தேசம்
  தழைக்க வந்த தாத்தா !
பார்த்தால் துன்பம் எல்லாம்—பஞ்சாய்ப்
  பறந்து போகும் தாத்தா !

உலகம் போற்றும் தாத்தா ;—அகிம்சை
  உபதே சித்த தாத்தா !
கலகம் கண்டால் போதும் ;— அங்கே
  காலால் நடக்கும் தாத்தா !

சத்தியாக் கிரகத் தாத்தா ;— அன்பைச்
  சாதித் திட்ட தாத்தா !
பக்தி யுள்ள தாத்தா ;— ராம
  பஜனை செய்யும் தாத்தா !

வயிரம் கொண்ட தாத்தா ;— உரிமை
  வாங்கித் தந்த தாத்தா !
துயரம் வந்த போதும் — அதைத்
  துணிந்து எதிர்க்கும் தாத்தா !

கோலை யூன்றும் தாத்தா ;— அணு
  குண்டும் வெல்லும் தாத்தா !
ஏழை எளியோர்க் கெல்லாம்—மிக
  இரக்கம் காட்டும் தாத்தா !

நாட்டுக் கெல்லாம் தாத்தா ;—காந்தி,
  நமக்கெல் லாமே தாத்தா !
பாட்டுப் பாடி தம்பி,—அவரைப்
  பணிந்து போற்று தம்பி !

'எவ்வளவு மனப் போராட்டத்துக்கப்புறம் இந்தத் தீர்மானம் செய்திருக்கிறேன் தெரியுமா?' வஸந்திக்கு ஒரே குழப்பமாயிருந்தது.

மறுநாள் காலை அவள் கணவனிடம் எழுபத்தைந்து ரூபாயை நீட்டினாள்.

" உங்கள் சிநேகிதனிடம் கொடுத்து விடுங்கள் " என்றாள்.

கோவிந்தனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

" இது ஏது வஸந்தி ?"

" சிக்கன முறை கையாண்டதன் பலன் " என்று கூறிச் சிரித்தாள் அவள்.

" ஏ, அப்பா ! நீ ரொம்பக் கெட்டிக்காரி தான். இவ்வளவு பணம் சேர்த்து வைத்திருப்பாய் என்று நான் கனவில்கூட நினைத்ததில்லையே ?" என்று கூறி வியந்தான்.

கணவனுடைய பாராட்டுதல், ஒரு சிறிது அவள் மனக் குழப்பம் தீர்ந்து விடுவதற்கு உதவி செய்தது.

★

அன்று கார்த்திகைப் பண்டிகைக்கு முந்திய தினம். வஸந்தியின் மனத்தில் நிறைவே இல்லை. கணவனிடம் பணத்தைக் கொடுத்ததற்காக அவள் வருந்தவில்லை. ஆனால் " அது இருந்திருந்தால்...." என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை.

வேலையிலிருந்து திரும்பிய கோவிந்தன் வெகு உற்சாகத்தோடு காணப்பட்டான். அவன் முன் காப்பி பலகாரம் கொண்டு வந்து வைத்தாள் வஸந்தி. அவள் முகம் சோர்ந்தாற் போலிருந்தது.

" என்ன ஒரு மாதிரியாய் இருக்கிறாய் ?" என்று கேட்டான்.

" ஒன்றுமில்லை."

" என்னிடம் சொல்லக் கூடாதோ ! அப்படி என்ன பிரமாத ரகசியம் ?"

" ஒன்றுமில்லை. கொஞ்சம் சிரியேன், பார்க்கலாம். இந்தச் சோகம் உனக்குப் பொருத்தமாகவே இல்லை."

வஸந்தி இலேசாக ஒரு வறட்டுச் சிரிப்பு சிரித்தாள்.

"அப்படி, வா வழிக்கு...உம், உம், சொல்ல மறந்து விட்டேனே ! பரகராமன் வாங்கிய கடனை மாதம் ஐந்து ரூபாயாகக் கொடுத்து விடுகிறேனென்று சொன்னானல்லவா? இன்று ஒரு ஐந்து ரூபாய் கொடுத்தான். கார்த்திகைக்காக உனக்கொரு பட்டு ரவிக்கை வாங்கினேன். வரும் வழியில் தையற்காரனிடம் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன். அதைத் தவிர இந்தப் பொட்டலத்திலிருப்பதை உனக்காக ஆசையாக வாங்கி வந்தேன்" என்றான்.

பொட்டலத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்தாள் வஸந்தி. அதில் ஒரு ஜோடி கண்ணாடி வளையல்கள் இருந்தன. அவை தங்க நிறத்தில் அமைந்து தங்கத்தைப் போலவே பிரகாசித்துக் கொண்டிருந்தன. வஸந்தி, கணவன் முகத்தைப் பார்த்தாள். அதிலிருந்த மகிழ்ச்சியைப் பார்த்தாள்.

"உன் கைக்கு அழகாயிருக்குமென்று வாங்கினேன். பிடித்திருக்கிறதா வஸந்தி ?"


கோவிந்தன் முகத்தில் களங்கமற்ற இன்பம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. அவனது செயலிலே பொதிந்திருந்த அன்பு அவன் முகத்திலும் பிரகாசித்தது. அந்த நிமிஷம் வஸந்திக்குத் தன் அன்னை கூறிய சொற்கள் ஞாபகத்துக்கு வந்தன. "உன் கையில் புது ஜோடி வளையல்கள் மின்னினால்தான் என்னுடைய ஆத்மா சாந்தியடையும்."

வஸந்தியின் முகம் மலர்ந்தது. கண்ணாடி வளையல்களாயிருந்தால் என்ன ? அவையும் புது ஜோடி வளையல்கள்தானே! கண்ணாடி வளையல்கள் மின்னக் கேட்க வேண்டுமா ?

ஆம்! அன்னையின் கோரிக்கை எதிர்பாராத விதத்தில் நிறைவேறி விட்டது.

கணவனைப் பார்த்துப் புன்னகை தவழும் முகத்துடன் பதிலளித்தாள் வஸந்தி. " பிடிக்காமலென்ன ? மிகவும் பிடித்திருக்கிறது!" அவள் உள்ளத்தில் அப்போதிருந்த நிறைவு முகத்திலும் பிரதிபலித்தது.








*

கவி ரவீந்திரநாத் தாகூரும், மானிலத்தை வாழ்விக்க வந்த மகாத்மாவும்.

சேவாக் கிராமத்தில் அன்னை கஸ்தூரிபாயும் அண்ணல் காந்தியும்.

சேவாக் கிராமத்தில் காந்தி மகாத்மாவுடன் ராஜாஜி உரையாடிக் கொண்டிருக்கிறார்.

*







*


தேசத் தந்தை காந்திஜியும் ஜனாப் ஜின்னாவும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருக்கின்றனர்.


பம்பாய் அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தில் கவிக் குயில் சரோஜினி தேவியோடு மகாத்மா காந்தி.

மகாத்மாவும் ஜவாஹர்லால் நேருவும் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருக்கின்றனர்.

*







○✱○

புனித காசி க்ஷேத்திரத்திலே காந்திஜியும் அன்னை கஸ்தூரிபாயும் தங்கியிருந்த போது எடுத்த படம்.

1914-ம் வருஷத்தில் நிகழ்ந்த சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு அஹிம்சா வீரர் செல்கிறார்.


லண்டனில் பாரிஸ்டர் காந்தி.

○✱○





இதோ
உங்களுக்கு
முற்றிலும் புதிய
மாதிரியான
இரு பவுடர்கள்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER
ஸாண்டால்
சந்தனத்துடன் கூடிய
பால்கம் பவுடர் ...
ஸாண்டல் வுட்
டாய்லட் பவுடர்
சுத்தமான தனி
சந்தனத்தை
மென்மையாக்கப்பட்டது.
டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்
A.K.GOPAL


சித்திரத் தொடர்கதை (2)
சோதிடப் புலி
அசோகன்
சேச்சே! அவரு எங்கள் ஊர்க்காரரு. கொஞ்ச நாட்களாகவே தான் தங்கச்சிக்கு உடல் சுகம் இல்லே. இப்பொழுது எப்படி இருக்கிறது என்று அவரைக் கேட்டுப் போகலாம் என்று வந்தேன்!
நல்ல ஆள் அப்பா நீ! தொப்பியும் திப்பியும் போட்டுக் கொண்டு வந்து 'என் ஜோசியக் கலையைப் பறித்து விட்டாயே!
சார், தபால்!
மங்களம்! சரோஜாவைப் பெண் பார்க்க நாளை மணிக்கு வருவாங்க. தனம்! ஹாலைச் சுத்திப் பெருக்கு. ஏய் செல்வம்! சாமிக்கு போய் விட்டாயா கம்பளத்தை உதறிப் போடு. — சரோஜா! அலங்காரம் செய்து கொள்!
நான் அப்புறம் வந்து அவரைப் பார்த்துக் கொள்கிறேனுங்க. இப்பொழுது வேலை அதிகம் போலிருக்கிறது!
சரோஜா! நகைகளெல்லாம் போட்டுக் கொண்டு அழகாக இருக்கணும் தெரிந்ததா!


மணி நாலரை யாகி விட்டதே! இன்னும் வரக்காணோமே?
இவள் தான் என் மகள் சரோஜா!... அம்மா சரோஜா! இவர்களை வணங்கு!
வரணும்! வரணும்! உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.
உணவு அருந்தப் போகலாமா?
அம்மாடியோவ்! இவ்வளவா?
தொடரும்

மாயப் பந்து

27. கலாவுக்கு ஆபத்து!

கலா தன்னைப் பார்த்து வேடர்கள் வருவதையும் அவர்களுடைய சம்பாஷணைகளையும் கவனித்துக் கொண்டே படுத்துக் கொண்டிருந்தாள். "இந்த ஆபத்திலிருந்து இனி மேல் தப்ப முடியாது. என் அண்ணன் இருந்தால் இப்படியெல்லாம் நடக்குமா? ஒரு நாளும் நடக்காது. என் உயிருக்கும் அபாயம் வந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு காலம் காப்பாற்றி வந்த மந்திர ஜமக்காளத்துக்கும் ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த அடர்ந்த காட்டிலே தனிமையாக இருக்கும் எனக்குக் கடவுளைத் தவிர உதவி புரிபவர் யார் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லை. மிருகங்களை வேட்டையாடி அவற்றின் மாமிசத்தைத் தின்பவர்களிடமிருந்து நான் உதவியை எப்படி எதிர்பார்க்க முடியும்? எப்படி இருந்தாலும் இவர்கள் பேசிக் கொண்டிருப்பதிலிருந்து என் பறக்கும் ஜமக்காளத்தை அபகரித்துக் கொள்ளுவதிலேயே நாட்டம் கொண்டிருக்கிறார்கள். என் அண்ணனும் என்னை விட்டுப் பிரிந்து விட்டான். அப்படி இருக்கும் பொழுது இனிமேல் திரும்பி என் வீட்டுக்குப் போய் அப்பாவையும் பார்க்க முடியாது. அதனால் இனி மேல் என்ன துன்பம்வந்தால் என்ன? தைரியத்துடன் எதிர்த்துப் போராடப் போகிறேன். வருகிற ஆபத்து வரட்டும்" என்று தனக்குத் தானே தைரியம் செய்து கொண்டாள் கலா.

நான்கு வேடர்களும் கைகளைக்கொட்டி ஆரவாரம்செய்து கொண்டும், சீட்டி அடித்துக் கொண்டும் ஜமக்காளத்தில் படுத்துக் கொண்டிருந்த கலாவை நெருங்கினார்கள். அவர்கள் நெருங்கி வருவதைப் பார்த்த கலா கண்களை மூடிக் கொண்டு தூங்குபவள் போல் பாசாங்கு செய்தாள்.

நெருங்கி வந்த வேடர்களில் ஒருவன், "ஏ, பெண்ணே! எழுந்திரு. இந்தப் பயங்கர மிருகங்கள் கொண்ட இந்த நடுக் காட்டில் தனியாக ஏன் படுத்துக் கொண்டிருக்கிறாய்? ஜனநடமாட்டமே இல்லாத இந்த நடுக் காட்டில் எப்படி நீ இங்கே வந்து சேர்ந்தாய்?" என்று கேட்டான்.

அவன் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்லுவது என்று கலாவுக்குத் தெரியவில்லை. நடந்த விஷயங்களை அப்படியே சொன்னால் ஒருவரும் அப்பொழுது தனக்கு உதவிக்கு வரமாட்டார்கள் என்ற உண்மையை அறிந்து கொண்டாள். தன்னை ஏதாவது துன்பத்துக்கு ஆளாக்கினால்







என்ன செய்வது என்று யோசித்தாள். பிறகு இப்பொழுது எழுந்து உட்கார்ந்து ஜமக்காளத்தைப் பறக்கவிட்டு இவர்களிட மிருந்து தப்பித்துக் கொள்ளலாமா என்று யோசித்தாள். அப்படிப் பறக்க யத்தனிக்கும் பொழுது வேடர்களும் ஜமக்காளத்தில் ஏறித் தன்னைத் துன்பப்படுத்தினால் என்ன செய்வது என்று நினைத்தாள். 'வேண்டாம். இப்பொழுது தப்ப வேண் டாம்' என்று நிச்சயித்தாள்.

அப்படி அவள் யோசித்துப் படுத்துக் கொண்டிருக்கும் பொழுது, "என்னவம்மா! நாங்கள் கேட்பதற்குப் பேசாமல் இருக்கிறாய்? எழுந்திரு. இல்லாவிட்டால் நாங்கள் உன்னை எழுப்பிவிட நேரிடும்" என்றார்கள்.

அவர்கள் சொல்வதைக் கேட்டுப் பயந்து கலா உடனே தூக்கத்திலிருந்து எழுந்
இருந்தது போல் எழுந்திருந்து அவசரம் அவசரமாக முத்துமாலையைக் கழற்றி ஜமக்காளத்தையும் மடித்துத் தனது பையில் போட்டுக் கொண்டு ஒன்றும் தெரியாதவள் போல் சுற்றுமுற்றிலும் பார்த்தாள். பிறகு தனக்கு முன்பாக நிற்கும் வேடர்களைப் பார்த்து, "நீங்கள் யார்?" என்று பலத்த குரலில் கேட்டாள்.

"நாங்கள் இந்தக் காட்டில் வசிக்கும் வேடர்கள். நீ யார்? எப்படி இங்கே வந்தாய்?" என்று கேட்ட வேடர்களுக்குக் கலா, "நான் யாராய் இருந்தால் உங்களுக் கென்ன? நான் எதற்காக இங்கே வந்தேன் என்பது உங்களுக்கு ஏன் தெரிய வேண்டும்?" என்று அலட்சியமாகப் பதில் அளித்தாள்.



"அது போகட்டும். நீ இந்தக் காட்டில் இந்த இடத்துக்கு முதலில் வந்தபோதும் இந்த ஜமக்காளத்துடன் ஆகாயத்திலிருந்து தொப்பென்று கீழே குதித்தாய் அல்லவா? உண்மையைச் சொல்!"

"இதில் உண்மையென்ன? பொய் என்ன? ஆகாயத்திலிருந்து நான் இந்த ஜமக்காளத்துடன் தான் கீழே குதித்தேன்!"

"அந்த ஜமக்காளத்தை எப்படிப் பறக்க விடுவது என்பதைச் சற்றுச் சொல்லிக் கொடு. எங்களுக்கு அதன் மீது பறந்து செல்ல வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அந்த மந்திர ஜமக்காளம் எங்களிடம் இருந்தால் இந்த நாட்டிலே உள்ள எல்லாக் காடுகளுக்கும் சீக்கிரம் சீக்கிரமாகப் போய்க் கொடிய மிருகங்களை யெல்லாம் வேட்டையாடுவதற்குச் சௌகரியமாக இருக்கும்."

"என் ஜமக்காளத்தைப் பற்றி உங்களுக்கு நான் எதற்குத் தெரியப்படுத்த வேண்டும்? ஜமக்காளத்தை உங்களிடம் கொடுக்கவும் மாட்டேன். அதை எப்படிப் பறக்கவிடுவது என்பதையும் சொல்லமாட்டேன்."

"மயிலேமயிலே இறகுபோடுன்னு போடுமா? இந்த ஜமக்காளத்தை நானே எடுத்துப் பறக்க விடுகிறேன், பார்!" என்று கூறி வேடன் ஒருவன் கலாவின் தோளில் மாட்டியிருந்த பையை எடுக்கப் போனான்.



ஆனால் அவள் அதற்கு இடம் கொடுக்காமல் அவ்விடத்தை விட்டுப்போக யத்தனித்தாள்.

"ஏ பெண்ணே! இந்தக் காட்டை விட்டு எங்கள் அனுமதியில்லாமல் தப்பி ஓட முடியாது. கொண்டா, அந்த ஜமக்காளத்தை" என்று அவளிடத்தில் இருந்த பையைப் பிடித்தான் ஒருவேடன். உடனே மற்றொரு வேடன் பையிலிருந்த ஜமக்காளத்தை எடுத்து. "இதோ நான் பறக்க விடுகிறேன்" என்று ஜமக்காளத்தைக் கீழே விரித்தான். எல்லா வேடர்களும் அதன்மீது உட்கார்ந்தார்கள். 'ஜமக்காளமே! பற பற' என்று வேடர்கள் கத்தினார்கள். ஜமக்காளம் பறக்காமல் போட்டபடியே இருக்க, அவர்கள் கோபம் கொண்டார்கள். ஜமக்காளத்தில் ஏமாந்து உட்கார்ந்திருந்த வேடர்களைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தாள் கலா.

மற்றொரு வேடன் ஜமக்காளத்திலிருந்து எழுந்து அவளிடம் நெருங்கி, 'ஏ பெண்ணே! இனிமேல் இந்த ஜமக்காளம் உன்னுடையதல்ல. அதில் நாங்கள் பறந்து செல்லாவிட்டாலும் படுத்து உறங்குவதற்காகவாவது உபயோகப்படுத்துவோம். அதற்குக்கூட நீ இனிமேல் அதை உபயோகப்படுத்த முடியாது. பெண்ணே! அந்தப் பையிலே முத்து மாலையைப் போல் ஒன்றைப் பார்த்தேன். எங்க வீட்டுக்காரிக்கு முத்து மாலைமேல் ரொம்ப இஷ்டம். அதை நான் எடுத்துக் கொள்ளப் போகிறேன்" என்றான். கலா தோளில் மாட்டி இருக்கும் பையிலிருந்த முத்து மாலையைக் கையில் எடுத்துக் கொண்டான்.

"இந்தப் பையையும் என்னிடத்தில் எதற்காக விட்டு வைக்கிறீர்கள்? அதையும் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று தன்னிடமிருந்த பையையும் எடுத்துக் கீழே விட்டெறிந்தாள் கலா.

"என்னிடமிருந்த சாமான்கள் யாவற்றையும்தான் எடுத்துக் கொண்டு விட்டீர்களே. என்னை விட்டுவிடுங்கள். நான் போய் வருகிறேன்" என்றாள்.

"உன்னை விட்டுவிடுவதா? ஒரு நாளும் முடியாது. பலம் வாய்ந்த நாங்கள் நான்கு வேடர்களும் கெஞ்சிக் கேட்டும் ஜமக்காளத்தை எப்படிப் பறக்க விடுவது என்று கேட்டால் சொல்ல மாட்டேன் என்று சொல்லி விட்டாய். எங்களிடம் இது வரையிலும் ஒருவரும் அவமரியாதையாகப் பேசியது இல்லை. அப்படி இருக்கும்பொழுது உன்னைச் சும்மா விட்டுவிடுவோமா?" என்றான் ஒரு வேடன்.

உடனே மற்றொரு வேடன், "அண்ணே! இவளைச் சும்மா விடக் கூடாது. இந்த மரத்திலேயே இவளைக் கயிற்றினால் கட்டிப் போட்டுவிட வேண்டும்!" என்றான்.

"ஏ, பெண்ணே! இதோ பார். கொடிய விலங்குகளைக் கட்டும் இந்தக் கயிற்றினால் உன்னை இந்த மரத்தில் கட்டப்போகிறோம். சீக்கிரம் இந்த ஜமக்காளத்தை எப்படிப் பறக்க விடுவது என்பதை மாத்திரம் சொல்லிவிடு. உன்னை விட்டு விடுகிறோம். இனிமேல் அந்த ஜமக்காளத்தை உனக்குத் திருப்பிக் கொடுக்கப்போவதில்லை. உனக்கு அது இனிமேல் உபயோகப்படாமலிருக்கும்பொழுது நாங்கள் அதை உபயோகித்தால் உனக்கு என்ன? உடனே சொல்" என்றான் ஒரு வேடன்.

ஆனால் கலா அந்த வேடன் சொல்லுவதைக் கவனிக்காதது போல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டிருந்தாள். வேடர்கள் ஐந்து நிமிஷ நேரம் பொறுத்துப் பார்த்தார்கள். கலா அசைவற்று நின்று கொண்டிருப்பதைப் பார்த்துக் கோபமடைந்து அவளை நன்றாகத் தலை முதல் கால் வரையில் மரத்தோடு சேர்த்துக் கட்டினார்கள். கடவுள்தான் தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நம்பிக்கையுடன் இருந்த கலா அந்த நம்பிக்கையையும் சிறிது நேரத்தில் இழந்தாள்.

* * *

மரத்துக்கு அடியில் படுத்துக்கொண்டு நன்றாக அயர்ந்து தூங்கிய மால்கோஷ் மறுநாள்காலையில்தான் எழுந்திருந்தான். எழுந்து எங்கே போவது என்பதே அவனுக்கு விளங்கவில்லை. அவன் நினைவில் அப்பொழுது உற்றார் உறவினர்களோ அல்லது சிநேகிதர்களோ கிடையாது. உலகத்தில் உள்ள இன்ப துன்பங்களிலே அவனுக்குப் பங்கு கிடையாது. அவனுக்கு ஒரே நினைவுதான். அதுதான் சாப்பாடு. மாயப் பந்து இருக்கும்பொழுது அவனுக்கு என்ன குறைச்சல்? பசி எடுக்கும்பொழுது சாப்பிட்டு விட்டு ஊர் ஊராக நடந்து சுற்றிக் கொண்டே இருந்தான்.

கார்குர் மால்கோஷைச் சரியானபடி துன்புறுத்தத் தீர்மானித்து ஏதோ மருந்துப் பொருள் கலந்த திரவத்தை அவன் தலையில் கொட்டிவிட்ட படியினால் மால்கோஷ் சுய புத்தியை இழந்து தன்னைப் பற்றிய நினைவையே மறந்து விட்டான். கார்குர் தன்னுடைய மந்திர சக்தியினால் மால்கோஷை மட்டும் முன்னதாக மயக்கமடையச் செய்யவில்லையானால், அவன்மீது மருந்து கலந்த திரவத்தைக் கொட்ட இடங் கொடுத்திருக்க மாட்டான். வெகு நாட்கள் திக்கற்றவன் போல் அலைந்து கொண்டிருந்தான் மால்கோஷ். உடம்புக்குக் குளிப்பது என்பதே அவனிடம் இல்லை. அவன் போட்டிருந்த ஜிப்பாவும், பைஜாமாவும் அழுக்குப் படிந்து பல இடங்களில் கிழிந்திருந்தன. எங்கெங்கே தோன்றுகிறதோ அங்கெல்லாம் படுத்துக் கொள்ளுவான்.

இவைகளெல்லாம் மால்கோஷுக்கு ஒரு பைத்தியக்காரனைப் போல உள்ள தோற்றத்தையே கொடுத்தன. (தொடரும்)


நரைக்கிறதா?


பாருங்கள்!
சொத்தையைத் தடுக்க விசேஷ பாதுகாப்பு*
TEST K.42
Kolynos
கோலினூஸ்
ஸூப்பர்-வொயிட்
டூத்பேஸ்ட்
உங்கள் நகையழகைப் பாதுகாக்கும்
* 'கோலினூஸ் ஸூப்பர்-வொயிட்' டூத்பேஸ்ட் (படத்தில் வெள்ளை பாகம்) சொத்தைக்குக் காரணமான கிருமிகளைத் (கருப்பு பாகம்) தடுக்கிறது (சாம்பல்நிற வட்டம்) என விஞ்ஞான பரீட்சை K. 42 நிரூபித்துள்ளது.
பெப்பர்மின்டின் குளுமை வாய்ந்த இனிய சுவையை அனுபவியுங்கள்!
Kolynos TOOTHPASTE
SUPER WHITE
பாருங்கள்! பிடிப்பதற்கு சௌகரியமான பிரத்தியேகவித மூடி
ஜெப்ரி மானேர்ஸ் அண்ட் கோ. பிரைவேட் லிட்.

மாலவல்லியின் தியாகம்


அத்தியாயம் 14

ஆசிரமத்துக்கு ஆபத்து!

பெருஞ்சிங்கன் தன் பார்வையைத் திருப்பி அந்தப் பெண்ணைப் பார்த்து, ''நாங்கள் சிறிது நேரம் இங்கு களைப்பாறி விட்டுச் செல்லலாம் என்று நினைக்கிறோம்'' என்று கூறினான்.

''தாராளமாக...'' என்று அப்பெண் உபசாரமாகச் சொல்லி விட்டுச் சட்டென்று உள்ளே சென்றாள். குதிரை வீரர்கள் யாவரும் குதிரையிலிருந்து இறங்கி அந்தக் குகைக்கு வெளிப்புறத்திலிருந்த சிறிய மண்டபத்தில் அமர்ந்தனர். அந்தச் சமயத்தில் அந்தக் குகைக்குள் அந்தப் பெண் வேறு யாருடனோ ஏதோ பேசுவது கேட்டது. சில விநாடி நேரத்தில் அவர்கள் எதிரில் வயதான ஜைன சந்நியாசி ஒருவர் வந்து நின்றார். ''நீங்கள் சோழ நாட்டைச் சேர்ந்தவர்களா? சந்தோஷம். வாருங்கள், இங்கே தாராளமாகத் தங்கி இருக்கலாம். பிரயாணத்தினால் மிகவும் களைப்படைந்தவர்கள் போல் தோன்றுகிறது. சமீபத்தில் உள்ள சுனைக்குச்சென்று காலைக் கடனை முடித்துக் கொண்டு வந்தீர்களானால் ஏதேனும் ஆகாரம் செய்யலாம். மனித சஞ்சாரமற்ற இடத்தில் தெய்வாதீனமாக வரும் உங்களைப் போன்றவர்களை உபசரிக்கத்தான் நாங்கள் இருக்கிறோம்'' என்றார். அந்த சந்நியாசியின் அன்பான மொழிகள் அவரிடம் மிகுந்த மரியாதையும் பக்தியும் வைக்கும் வண்ணம் இருந்தன. முனிவரின் ஆக்ஞைப்படி தங்கள் காலைக்கடனை முடித்துக் கொள்வதற்காகச் சுனையை நோக்கி நடந்தனர். அவர்கள் சுனையை நாடிப் போய்க் கொண்டிருக்கும்பொழுது நந்திபுரத்து வீரன் தன் நண்பனிடம் மெதுவான குரலில் ஏதோ சொல்லிக் கொண்டு வந்தான். அதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டு வந்த பெருஞ்சிங்கன் ''நீ நினைப்பது முட்டாள்தனம். காணாமல் போன திருபுவனிதான் இந்தப் பெண் என்று எந்தக் காரணத்தினால் முடிவு கட்டுகிறாய்?'' என்று கேட்டான்.

''அவளுடைய அங்க அடையாளங்களிலிருந்துதான் நான் தெரிந்து கொண்டேன். சிவர ஆடையைக் களைந்து வெண்ணிற ஆடை அணிந்திருக்கிறாள்'' என்றான் நந்திபுர நகர வீரன்.



கி. ரா. கோபாலன்

''அப்படியா...? இப்படி நினைப்பதும் புத்திசாலித்தனம்தான். அந்தப் பெண்ணைப் பார்த்தால் நெடு நாட்களாக இந்த மலைப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகிறவள்போல் தோன்றுகிறது. எதையும் தீர விசாரிக்காமல் முடிவு செய்து விடக்கூடாது. எனக்குத் தோன்றவில்லை, அவள் இடங்காக்கப் பிறந்தாரின் மகளாய் இருப்பாளென்று'' என்றான் வில்லவன்.

''அவள் நம்மைக் கண்டதும் மிகவும் பயந்தவள்போல் மிரண்டு விழித்தாள். அதிலிருந்தே நான் தெரிந்து கொண்டு விட்டேன், நாம் தேடிக் கொண்டு வரும் பெண் இவள்தானென்று'' என்று பிடிவாதமாகச் சொன்னான் நந்திபுர நகர வீரன்.

''உன் கோணல் புத்திக்குத் தோன்றியது அவ்வளவுதான். சரி! உன் தீர்மானப்படியே அவள் உங்கள் காவலரின் மகளாக இருக்கட்டும். அவளை என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று கேட்டான் பெருஞ்சிங்கன்.

''எங்கள் கடமையைச் செய்வோம். எப்படியாவது அவளைக் கடத்திக் கொண்டு போய் எங்கள் காவலரிடம் ஒப்படைப்பதுதான் எங்கள் கடமை'' என்றான் நந்திபுர நகர வீரன்.

எல்லோரும் சுனையை அடைந்து பல் விளக்கி விட்டுக் கிளம்பினர். ''அந்தப் பெண்ணை எங்கள் எதிரில் கடத்திக் கொண்டு போவதென்பது முடியாத காரியம்...'' என்றான் வில்லவன்.

''நாங்கள் எங்கள் காவலரின் மகளைத் தேடி அழைத்துக் கொண்டு போவதைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் தான் நீங்கள் இருவரும் எங்களைப் பின் தொடர்ந்து வந்திருக்கிறீர்கள் என்பது இப்பொழுதுதான் விளங்குகிறது. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களுக்குப் பயந்து நாங்கள் கோழைகள்போல் ஓடி விட மாட்டோம்'' என்றான் நந்திபுர நகர வீரனில் ஒருவன்.

''அப்படியா! உங்கள் சாமர்த்தியத்தையும்தான் பார்ப்போமே'' என்றான் பெருஞ்சிங்கன்.

அவர்கள் அந்தக் குகை வாசலை அடைந்தபொழுது அந்தப் பெண் ஏதோ காரியமாகக் குகைக்குள்ளிருந்து வெளியே வந்து கொண்டிருந்தாள். இப்படிப்பட்ட சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவன் போல் நந்திபுர நகர வீரர்களில் ஒருவன் அந்தப் பெண்மீது திடீரென்று பாய்ந்து அவளை அப்படியே தூக்கிக் குதிரையில் இருத்த




முயற்சி செய்தான். இதைக் கண்ட வில்லவன் அவன்மீது பாய்ந்து அவனை அப்பால் பிடித்துத் தள்ளினான். அந்தப் பெண் வீறிட்டுக் கத்திய குரல் கேட்டுக் குகைக்குள்ளிருந்த வயதான ஜைன சந்நியாசி வெளியே வந்தார். ''இதென்ன அநியாயம்? கேட்பாரில்லையா....?'' என்று கத்தினார்.

அந்தப் பெண் விக்கி விக்கி அழுது கொண்டே குகைக்குள் ஓடி ஒளிந்து கொண்டாள். சில விநாடி நேரத்தில் பழையாறை வீரர்களுக்கும் நந்திபுர நகர வீரர்களுக்கும் பெருஞ்சண்டை மூண்டது. நெடுநேரப் போராட்டத்துக்குப் பின் நந்திபுர நகர வீரர்கள் களைப்படைந்து ஓடத் தலைப்பட்டனர். பழையாறை வீரர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தி அவர்களுடைய குதிரைகளின் மீது ஏறிக்கொண்டே செல்லும்படி சொன்னார்கள். அவர்களும் வெட்கத்தோடு தங்கள் குதிரைமீது அமர்ந்து வந்த வழியிலேயே திரும்பிச் சென்றனர்.

''இப்படிப்பட்ட ஆபத்தான சமயத்தில் உங்களைப் போன்ற வீரர்களை அந்த அருகத பரமேஷ்டி தான் அனுப்புகிறார். முன்பு ஒரு தடவை இப்படித்தான் இப்பெண்ணைக் கடத்திக் கொண்டு செல்ல நினைத்த முரடர்களிடமிருந்து இரண்டு வீரர்கள் வந்து காப்பாற்றினர். ஒரு பெண்ணை வைத்துக் காப்பாற்றுவதென்றால் இவ்வளவு ஆபத்தா? இந்தச் சந்நியாசிக்கு இந்தத் தொல்லைகளெல்லாம் எதற்கு? இவளை அழைத்துக்கொண்டு போய்க் காப்பாற்றுவதாகச் சொன்ன அந்த வாலிபன் எப்பொழுது வருவானோ? அவன் கங்க நாட்டைச் சேர்ந்தவன் என்று சொன்னான். அவனோடு சோதிடன் ஒருவனும் வந்திருந்தான். நீங்களும் சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள்தானே? உங்களுக்குத் தெரியுமா?'' என்றார் அரிஷ்டநேமி.

அந்த ஜைன முனிவரின் வார்த்தையைக் கேட்டுப் பழையாறை வீரர்கள் இருவரும் சிறிது சம்சயம் கொள்ளலாயினர். கங்க நாட்டைச் சேர்ந்த இளைஞனைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது. ஆனால் சோழ நாட்டைச் சேர்ந்த சோதிடர் என்றதும் அவர்களுக்குச் சிறிது சந்தேகம்தான் ஏற்பட்டது. ''சோழ நாட்டைச் சேர்ந்த சோதிடர் என்று சொன்னீர்களே, அவர் எப்படி இருந்தார்?'' என்று கேட்டான் பெருஞ்சிங்கன்.

அந்த ஜைன முனிவர் சொல்லிய அடையாளத்திலிருந்து அவர் கோடீச்சுவரத்துச் சோதி



டர் சந்தகராகத்தான் இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டனர்.

"அந்தச் சோதிடர் பெயர் சந்தகர். அவரை எங்களுக்கு நன்கு தெரியும். ஆனால் கங்கபாடியிலிருந்து வந்த இளைஞரைப் பற்றி எங்களுக்குத் தெரியாது. அவர் எப்படி இருந்தார்?"

"அந்த வாலிபன் மிகவும் கம்பீரமாகவும் அழகாகவும் இருந்தான். தன்னை ஒரு சாதாரணப் போர்வீரன் என்று சொல்லிக் கொண்டான். ஆனால் அவனைப் பார்த்தால் ஒரு இளவரசன் போல்தான் தோன்றியது. அந்த இளைஞன்தான் என்னிடம் நெடு நாட்களாக வளரும் இந்தக் குணமான பெண்ணைத் தன் நாட்டுக்கு அழைத்துப் போய்த் தானே காப்பாற்றுவதாகச் சொன்னான். அவன் கூறிய வார்த்தைகளிலிருந்து அவனே இப்பெண்ணை மணம் புரிந்து கொள்வானென்றுதான் தோன்றியது. இந்தப் பெண்ணும் அந்த வாலிப வீரனிடம் தன் மனத்தைப் பறி கொடுத்திருக்கிறாள் என்று தெரிகிறது. அந்த வாலிபனின் வரவை எதிர்பார்த்து ஒவ்வொரு நாளும் அவள் துடித்துக் கொண்டிருக்கிறாள் என்று எனக்குத் தெரிகிறது. என்னதான் ஒரு துறவியினுடைய குகையில் வாழ்ந்த பெண்ணாயினும் இந்த உலகத்தின் மோகம் அவளை விட்டு விலகி விடவில்லை. பாவம்! பெண் தானே? அந்த வாலிபன் எப்பொழுது வருவான்; அவன் கையில் இவளை என்றைக்கு ஒப்படைப்போம் என்றுதான் துடித்துக் கொண்டிருக்கிறேன். அதற்குள் எவ்வளவு ஆபத்தோ? நீங்கள் காஞ்சிக்குத்தானே போகிறீர்கள்? அவர்களும் காஞ்சிக்குப் போவதாகத்தான் சொன்னார்கள். அங்கு அவர்களைப் பார்த்தால், சொல்லுங்கள்" என்றார்.

பெருஞ்சிங்கன் மனத்தில் பலவித எண்ணங்கள் தோன்றின. அந்தப் பெண் அந்த முனிவரால் அனாதையாக வளர்க்கப்படுகிறாள் என்பதை உணர்ந்துகொண்டான். அதோடு அந்தப் பெண்ணை அதற்குமுன் யாரோ கடத்திச் செல்ல முயன்ற பொழுது சோதிடர் சந்தகரும் வேறொரு வீரனும் தடுத்துக் காப்பாற்றி இருக்கிறார்கள். அந்தப் பெண்ணைக் கடத்திச் செல்ல நினைத்தவர்கள் யாரென்பதை அந்த முனிவரிடமிருந்து தெரிந்து கொள்ள நினைத்தான். "ஏற்கனவே இந்தப் பெண்ணைக் கடத்திச் செல்ல நினைத்த முரடர்கள் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?" என்றான்.

"யாரோ ஒரு புத்த பிக்ஷுவும் அவனைச் சேர்ந்த சிலரும் ஒருநாள் இரவு திடீரென்று வந்து இந்தப் பெண்ணைப் பலவந்தமாகத் தூக்கிச் சென்றனர். அந்தச் சமயம் அந்த வீர இளைஞனும் அந்தச் சோதிடரும் தெய்வாதீனமாக வந்து அவளைக் காப்பாற்றி என்னிடம் ஒப்படைத்தனர். அந்தச் சமயம்தான் அந்த வாலிபன் இந்தப் பெண்ணின் வாழ்க்கைப் பொறுப்பைத் தானே ஏற்றுக் கொண்டு அவளைக் காப்பாற்றுவதாகச் சொன்னான்" என்றார்.

ஒரு பௌத்த பிக்ஷு இந்தப் பெண்ணைக் கடத்திக் கொண்டு போனார் என்பதைக் கேட்டதும் பெருஞ்சிங்கன் ஆச்சர்ய மடைந்தவனாக, "பௌத்த பிக்ஷு என்று சொன்னீர்களே அவர் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?" என்றான். "அவரைப் பற்றி விவரமாக எனக்கொன்றும் தெரியாது. ஆனால் அவர் சோழ நாட்டைச் சேர்ந்தவரென்றும், பூர்வாசிரமத்தில் அரசாங்கத்தில் பெரும் பதவி வகித்தவரென்றும், இப்பொழுது ஏதோ சாம்ராஜ்யச் சூழ்ச்சி செய்வதற்காகவே துறவுக்கோலம் பூண்டு இரிவதாகவும், அந்த வாலிபர் மூலமாகவும் சோதிடர் மூலமாகவும் தெரிந்து கொண்டேன். சன்மார்க்கக் கொள்கைகளை உலகில் நிலைநாட்டப் பிறந்த மகான் பெயர்களைச் சொல்லிக் கொண்டு ஏற்படுத்தப்படும் சமயங்களில் இத்தகைய சூழ்ச்சிக்காரர்களும் வஞ்சகர்களும் புகுந்து அந்த உத்தம சீலர்களின் உயர் லட்சியங்களுக்கு இழுக்கை உண்டாக்குகிறார்களே என்ற கவலைதான் எனக்கு. புத்த பிக்ஷுவின் வேடத்தில் திரியும் அந்தக் கயவனுக்குப் பல்லவ சக்கரவர்த்தியின் சகோதரன் சிம்மவர்மர் நெருங்கிய நண்பரென்று கேள்விப்பட்டேன். சிம்மவர்மர் ஜைன சமயத்தைச் சேர்ந்தவராயிருந்து, அதைக் காப்பாற்றுகிறவர்போல் பேசித் திரிந்தாலும் அவரும் பலவித தீமையான காரியங்களைச் செய்து வருகிறார் என்று



அறிந்தேன். அவர்தான் இப்பெண்ணைத் தூக்கிக் கொண்டு வரும்படி அந்தப் புத்த பிக்ஷுவையும் மற்றவர்களையும் அனுப்பியதாகத் தெரிந்தது. எப்படியோ அந்த ஆபத்திலிருந்து எங்களைக் காப்பாற்ற இரண்டு உத்தம வீரர்களைக் கடவுள்தான் அனுப்பியிருக்கவேண்டும்."

ஜைன முனிவரின் வார்த்தைகளிலிருந்து அந்த புத்தபிக்ஷுவாக வந்தவர் கலங்கமாலரையர்தான் என்பதை எளிதாக அறிந்து கொண்டான் பெருஞ்சிங்கன். அந்தப் பெண்ணை அவர் கடத்திச் செல்ல முயற்சித்ததிலிருந்து அந்தப் பெண்ணைப் பற்றி ஏதோ அந்தரங்க ரகசியம் இருக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. "கடைசியில் அந்தப் புத்த பிக்ஷு என்னவானார், அவரை விட்டு விட்டார்களா....?" என்று கேட்டான்.

"அவர்கள் அந்த பிக்ஷுவுக்குச் சரியான தண்டனை கொடுப்பதாக இருந்தார்கள். நான் துறவுக் கோலத்தில் இருப்பவரை இம்சிக்க வேண்டாம், நற்புத்தி புகட்டி அனுப்புங்கள் என்று வேண்டிக் கொண்டேன். அவர்களும் என் வார்த்தைக்கு இணங்கி அப் பிக்ஷுவின் சீவர ஆடைகளைக் களையச் செய்து, சாதாரண ஆடைகளை அணிந்து கொள்ளச்செய்து எச்சரிக்கை செய்து அனுப்பினார்கள்" என்றார் அரிஷ்டநேமி முனிவர்.

"சரிதான். இந்தப் பெண் எத்தனை நாட்களாக உங்களிடம் வளர்கிறாள்? இவள் பெற்றோர்கள் யார்? உங்களுக்குத் தெரியுமா?" என்றான் வில்வலன்.

"இவள் குழந்தைப் பருவத்திலிருந்தே என்னிடம்தான் வளர்ந்து வருகிறாள். இவளுடைய பெற்றோர்களைப் பற்றி எனக்குத் தெரியாது. பல வருடங்களுக்கு முன் சோழ நாட்டில் திருப்புறம்பயத்துக்குச் சமீபமாக இவளை ஒரு கபாலிகன் காளிக்குப் பலி கொடுக்க நினைத்தபொழுது நான் காப்பாற்றிக் கொண்டு வந்தேன். அன்றிலிருந்து நான்தான் வளர்க்கிறேன்" என்றார்.

இவள் ஒருவேளை இடங்காக்கப் பிறந்தாரின் மகளாகவே இருப்பாளோ என்று ஒரு சந்தேகம் பெருஞ்சிங்கன் மனத்தில் ஏற்பட்டது. அவன் அந்த ஜைன முனிவரிடம், "இப்பொழுது இந்தப் பெண்ணை இரண்டு வீரர்கள் தூக்கிச் செல்ல நினைத்தார்களே, அவர்கள் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"எனக்கு எப்படித் தெரியும்? அவர்களும் உங்களைச் சேர்ந்தவர்கள் என்றுதான் நினைத்தேன். அழகான பெண்ணென்றால் மோகம் தலைக்கேறி விடுகிறது. இதிலிருந்து நாம் உலகத்தைக் காப்பாற்றுவது என்பது மிகவும் கடினம்தான்" என்றார் அரிஷ்டநேமி.

"அவர்கள் மோகத்தினால் இந்தப் பெண்ணைக் கடத்திச் செல்ல நினைக்கவில்லை. உண்மை வேறு. அவர்கள் நந்திபுர நகரைச் சேர்ந்தவர்கள். நாங்கள் பழையாறை நகரைச் சேர்ந்தவர்கள். நந்திபுரத்து நகரக் காவலரின் மகள் சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே காணாமற் போய் விட்டாள். பல ஆண்டுகளுக்குப் பிறகு புத்த பிக்ஷுணிக் கோலத்திலிருந்த அவளை எங்கிருந்தோ அழைத்து வந்து மாளிகையில் அடைத்து வைத்து, அவளுக்கு மணம் முடிக்கவும் தீர்மானித்திருந்தனர். ஆனால் அந்தப் பெண் ஒருவருக்கும் தெரியாமல் மறுபடியும் எங்கோ மறைந்து விட்டாள். அவளைத் தேடிக் கண்டுபிடித்து அழைத்துச் செல்ல வந்த ஏவலாளர்கள்தான் அவர்கள். இங்கு அவர்கள் வந்ததும், இந்தப் பெண்களைப் பார்த்ததும் இவள் தங்களுடைய காவலரின் மகள்தான் என்று தீர்மானித்துப் பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு செல்வதற்கு முயன்றனர். அதைத்தான் நாங்கள் தடுத்து விட்டோம்" என்றான்.

இதைக் கேட்டதும் அரிஷ்டநேமி முனிவர் மிகவும் ஆச்சர்ய மடைந்தார். "அப்படியா....? நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?" என்றார்.


"எங்கள் மன்னரும் அந்தப் பெண்ணைத் தேடிக் கண்டு பிடித்துக் கொண்டு வரும்படி எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார். அதனால் நாங்களும் அந்தப் பெண்ணைத் தேடிக் கொண்டு காஞ்சியை நோக்கிப் புறப்பட்டோம். இடையே இப்படி நடந்தது" என்றான் பெருஞ்சிங்கன்.


அரிஷ்டநேமி முனிவர் சிறிது நேரம் யோசித்தார். "உண்மையாகவே இவள் நந்திபுரத்துக் காவலரின் மகளாகவே இருந்தாலும் இருக்கலாம்.." என்று கூறினார்.

"இவளை அவருடைய மகள் என்றால் புத்த பிக்ஷுணிக் கோலத்திலிருந்த பெண் யார்?" என்றான் வில்வலன்.

"அவள் யாரோ? ஒருவேளை அவளே அவருடைய மகளாக இருந்தாலும் இருக்கலாம்" என்றார் ஜைன முனிவர்.

"இது குழப்பமாகத்தான் இருக்கிறது. இருக்கட்டும். அந்த ஏவலாளர்கள் தவறான அபிப்பிராயத்தோடு போயிருக்கிறார்கள். ஆகையால் இந்தப் பெண்ணுக்கு எப்பொழுதும் ஆபத்து உண்டு என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள். இந்த ஆபத்திலிருந்து இந்தப் பெண்ணைக் காப்பாற்றுவதற்கு எப்படியாவது முயற்சி செய்தாக வேண்டும்" என்றான் பெருஞ்சிங்கன். (தொடரும்)


மேலும் மலிவானது!
குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்
PROTEX
All Purpose
TOILET POWDER
ப்ரோடெக்ஸ்
சர்வ பிரயோக டாய்லட் பவுடர்
ஜயண்ட்சைஸ் அழகிய டப்புடன் கிடைக்கும்!


எடுப்பான தோற்றத்திற்கு
தற்காலத்திய பெண்மணிகள் மிகவும் விரும்புவது
TWO X TWO
Popular
புல் வாயில்
வெண்மையானதும் பிரிண்ட் செய்யப்பட்டதும்
★ ராஜலக்ஷ்மி 48"
★ ராஜஷோபா 45"
பயனியர் பீஸ்குட்ஸ் கம்பெனி


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!
கால்கேட் டூத் பிரஷ்


நீண்ட, அடர்ந்த ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும் பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயிலை தடவுங்கள். கூந்தலின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப் படுத்துக.
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர்



தந்தையும் தனயனும்

பியாரிலால்

[1948ம் ஆண்டு காந்தி மகான் ஹிந்துமுஸ்லிம் கலவரம் குறையாமலிருப்பதைக்கண்டு ஆற்றமாட்டாது, இரு சமூகத்தாரிடையே சமாதானம் நிலைநாட்ட உண்ணாவிரதம் தொடங்கினார். அவருடைய தேக நிலை அப்போது கவலைக்கிடமாயிருந்தது. இந்த உண்ணாவிரதத்திலிருந்து காந்தி மகான் உயிரோடு மீள்வாரா என்ற கவலை தேச மக்களைச் சூழ்ந்து கொண்டது. அப்போது காந்தி மகானின் அருமைப் புதல்வர் தேவதாஸ் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார். ஸ்ரீ தேவதாஸ் காந்திமகான் தமது தந்தை என்ற உணர்ச்சியை வென்று தேசத்தின் தந்தை, ஆண்டவனின் அருட் செல்வர் என்றே கருதிப் பழகி வந்தவர். காந்தி மகான் தேசப் பணியில் ஈடுபட்டு மகத்தான தியாகங்களில் இறங்கியபோதெல்லாம் ஸ்ரீ தேவதாஸ், காந்திஜி தமது தந்தை என்ற உணர்ச்சியின்றி, நாட்டு நலனுக்காக அவரோடு நின்று சேவை புரிந்தவர். காந்தியத்தில், காந்தி மகான் அளவுக்குப் பற்றுள்ளவர். அப்படிப்பட்டவர், 1948 ஜனவரியில் காந்தி மகான் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கத் தொடங்கிய போது எழுதிய உருக்கமான கடிதத்தையும், அதற்குக் காந்திஜி எழுதிய வேத வாக்குகளோடு சமமாக மதிக்க வேண்டிய பதில் கடிதத்தையும் இங்கே நமது வாசகர்களுக்குத் தருகிறோம். இது ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையில் ஸ்ரீ பியாரிலால் தேவதாஸ் காந்தியைப் பற்றி எழுதியிருந்த கட்டுரையிலிருந்து எடுத்தது. ஆசிரியர்]


தனயன் காந்தியின் கடிதம்

“நீங்கள் எடுத்துக் கொண்டுள்ள பணி, அளவுகடந்த பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய பணி. நீங்கள் தற்சமயம் அந்தப் பொறுமையை இழந்து அவசரப்பட்டு உண்ணாவிரதம் இருக்கிறீர்களோ என்று அஞ்சுகிறேன். இந்த அச்சத்தின் காரணமாகத்தான் உண்ணாவிரதத்தை நிறுத்தி விடுங்கள் என்கிறேன். நீங்கள் பொறுமையோடு செய்த பணி எத்தனை மகத்தான பலன்களை அளித்திருக்கின்றது என்பதை நீங்கள் சரியாக உணரவில்லை என்று நினைக்கிறேன். அந்தப் பணி நூற்றுக்கணக்கான உயிர்களை, ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது. ஏன், இன்னும் கூடக் காப்பாற்றும். நீங்கள் உயிருடன் இருந்து சாதிக்கக் கூடியதை உங்கள் மரணம் சாதிக்காது. அதனால் நீங்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டாம். என் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து நிறுத்திவிடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.”

தந்தை காந்தியின் கடிதம்

இது ஒரு அவசர முடிவுதான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவசரத்துக்குப் பொருள், என் முடிவை அறிவிக்க, நான் எழுத எடுத்துக் கொண்ட நேரம் மிக மிகச் சொற்பம் என்பதுதான். இந்த மின்னல் வேக முடிவுக்குப் பின்னால் நான்கு நாளைய இதயப் பரிசோதனையிருக்கிறது. நான்கு நாட்களாக இறைவனைப் பிரார்த்தித்து, சிந்தனை செய்தேன். அதன் பயன்தான் இந்த முடிவு. அதனால் 'அவசர முடிவு' என்பதற்கு நீயோ, மற்றவர்களோ சாதாரணமாகக் கூறும் இலக்கணம், இந்த என் முடிவுக்குச் சொல்ல முடியாது. இறைவனின் பிரேரணையின் மீது எழுதப்படும் அவசர அறிக்கையில் பாஷைத் தவறுகள் ஏற்படலாம். அதனால்தான் நீ சில திருத்தங்கள் சொன்னபோது அவற்றை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன். ஆனால் உண்ணாவிரதம் இருப்பது என்பதைப் பற்றி உன்னுடைய வேண்டுகோளையோ, மற்றவர்களுடைய வேண்டுகோளையோ நான் ஏற்கவில்லை. எனினும் உங்கள் வாதங்களையெல்லாம் கேட்டேன். அதுவே என் பொறுமையையும் பணிவையும் எடுத்துக் காட்டவில்லையா? நான் உண்ணாவிரதம் இருக்கக் கூடாது என்பதற்கு நீ தெரிவிக்கும் அச்சமும் காரணமும் சரியில்லை. உன் முயற்சி வீண். நீ என்னுடைய நண்பர்களில் மிகச் சிறந்த நண்பன் என்பதில் சந்தேகமில்லை. இருந்தாலும் உன் உள்ளத்திலிருந்து, நீ என் மகன் என்ற உணர்ச்சியை இன்னும் அகற்றிக் கொள்ளவில்லை. அதனால்தான் உனக்கு இந்தக் கவலை. அதற்கு நான் மதிப்புத் தருகிறேன். ஆனால் உன்னுடைய வாதம் உன் பொறுமையின்மையைத்தான் காண்பித்து விடுகிறது. நிலைமையை ஆழ்ந்து சிந்தித்து உணர முடியாத தன்மையைத்தான் காட்டுகிறது.

நான் இந்த முடிவை, என் பொறுமையின் எல்லை என்றே கருதுகிறேன். நான் ஒரு லட்சியத்தை எதிர்நோக்கி இதுகாறும் பொறுமையோடு இருந்தேன். அப்படி நான் பொறுமையோடிருப்பதே அந்த லட்சியத்தைக் கொன்றுவிடுகிறது. அந்த நிலையை உண்டாக்கும் பொறுமை, உண்மையில் பொறுமையா அல்லது மடத்தனமா? நான் நில்



பாரத நாட்டில் உள்ள அத்தனை மொழி பேசுபவர்களையும் காந்தி மகான் நேசித்தார் என்பதற்கு இந்தக் கையெழுத்துக்களே சாட்சி சொல்கின்றன. தேவநாகரி, ஆங்கிலம், குஜராத்தி, பாரசீகம், தமிழ், பழைய கன்னடம், மலையாளம், தெலுங்கு, கன்னடம், வங்காளி, ஒரியா ஆகிய பதினொரு மொழிகளில் காந்தி மகானுடைய கையெழுத்துக்கள்.

விக்கு வந்த பிறகு ஏற்பட்டுள்ள நற்பயன்களுக்கு நான் பொறுப்பாளி என்று ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. அப்படி ஒப்புக் கொள்வது என் ஆணவத்தைத்தான் குறிக்கும். என்னுடைய முயற்சிகளினால் எத்தனை உயிர்கள் காப்பாற்றப்பட்டன என்று யாரும் சொல்ல முடியாது. எங்கும் நிறைந்த இறைவன் ஒருவனே அதைச் சொல்ல முடியும். திற்க. சென்ற செப்டம்பர் மாதத்திலிருந்து இன்றுவரை பொறுமையின் உருவமாக இருந்திருக்கிறேன். அப்படி யிருந்த என்னை, திடீரென்று பொறுமை இழந்து விட்டதாகக் கூறுவது வெறும் அறியாமையைக் காட்டவில்லையா?

மனித முயற்சியினால் செய்யக் கூடியதெல்லாம் செய்தேன். செய்து பயனில்லை என்ற நிர்க்கதியான நிலைக்கு வந்த பிறகே நான் கடவுளைத் தஞ்சமடைந்தேன். கடவுள் எனக்கு இந்த வழியைக் காண்பித்தார். இதுதான் என் உண்ணா விரதத்தின் உட்பொருள். நான் ஏற்கனவே, நமது இதிகாசக் கதைகளில் சிறந்தது கஜேந்திர மோட்சக் கதை என்று சொல்லியிருக்கிறேன். அதை நீ ஒரு முறை படித்து அதன் பொருளைச் சிந்தித்துப் பார்ப்பது நலம். அப்பொழுது நான் செய்துள்ள முடிவு புரியும். அதைப் பாராட்டவும் முடியும்.

உன்னுடைய கடிதத்தின் கடைசிப் பகுதி உன் அன்புக்கொரு அழகிய அடையாளம். ஆனால் உன் இந்த அன்பு பாசத்தில், மாயையின் வேர்விட்டிருக்கிறது.

பாசத்தின் காரணமாக நான் உயிர் வாழ வேண்டும் என்று நினைக்கிறாய். ஆனால் நான் உயிர் வாழ்ந்தால் பெருவாரியான மக்கள் காப்பாற்றப்படுவார்கள். அதற்காக உயிர் வாழச் சொல்லுவதாகச் சொல்லுகிறாய். பாசத்தின் காரணமாக ஏற்பட்ட எண்ணம், பொதுநலக் காரியத்தோடு தொடர்பு ஏற்பட்டு விடுவதால் வந்த எண்ணம் அறிவுடைமையாகி விடாது. வாழ்வையும் உயிரின் பற்றையும் துறக்கவேண்டும். வாழ்வையும் சாவையும் ஒன்றாக நோக்கவேண்டும். இதை முதலில்கற்றுக்கொள்ளவேண்டும்;

இந்தப் பக்குவ நிலை யடையாமல், ஒருவன் 'இந்த மகத்தான காரியத்தைச் சாதிப்பதற்காக நான் உயிர் வாழ விரும்புகிறேன்' என்று சொன்னால் அது அவனுடைய மகத்தான ஆணவத்தைத்தான் காட்டும்! 'உயிருள்ள வரை முயற்சி செய்' என்பது அழகான மணிமொழி. அதிலும் ஒரு சிக்கல் இல்லாமலில்லை. அந்த முயற்சியைப் பற்றின்றிச் செய்ய வேண்டும். ஆகவே, இப்பொழுது நான் உன் வேண்டுகோளைக் கேட்க வில்லை என்பதைப் புரிந்து கொள்வாய் என்று நினைக்கிறேன். கடவுள் அளித்தது, உண்ணா விரதம். அதை அவர் ஒருவர்தான் அவர் இஷ்டப்பட்டபோது நிறுத்த முடியும். இதனிடையில் நீயும் நானும் என்ன செய்ய வேண்டும்? அவன் என் உயிரை விட்டு வைத்தாலும், எடுத்துக் கொண்டாலும் எல்லாம் நன்மைக்கே என்ற பரிபூரண நம்பிக்கை அவனிடம் வைக்க வேண்டும்.

நான் கடவுளிடம் செய்து கொள்ளும் பிரார்த்தனை இதுதான். "ஆண்டவனே! உயிர் வாழ வேண்டும் என்ற ஆசை காரணமாக, நீ குறித்த காலத்துக்கு முன்னதாகவே உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டுவிடப் போகிறேன். அத்தகைய பலஹீனத்துக்கு மட்டும் இடம் கொடுத்து விடாத ஆத்ம பலத்தை எனக்கு அருள்வாய்."

காந்தி கதை

அண்ணா, அண்ணா, காந்தித் தாத்தா
அருகில் சென்ற துண்டோ?—நீ
அவரைப் பார்த்த துண்டோ?

கண்ணா, இந்தக் கண்ணா லேயே
காந்தி ஜியைக் கண்டேன்—என்
கண் குளிரக் கண்டேன்.

அண்ணா, அண்ணா, உன்னைப் போலே
அதிர்ஷ்டம் எனக்கு இல்லை—நான்
அவரைப் பார்த்த தில்லை.

கண்ணா, அவரின் புகழ் உடம்பைக்
காண லாமே இன்றும்—நீ
கலங்க வேண்டாம் என்றும்.

அண்ணா, காந்தி கதையைக் கேட்க
ஆசை மிகவும் உண்டு—அதை
அழகாய்ச் சொல்வாய் இன்று.

கண்ணா, உனது ஆசை தீரக்
காந்தி கதையைச் சொல்வேன்—உன்
கருத்தில் பதியச் செய்வேன்.

காந்தி பிறந்தார்

ஆயிரத்து எண்ணூற்று
அறுபத் தொன்பதாம்
அக்டோபர் இரண்டுமிக
முக்கிய நாளாம்.
நீயும் நானும் நமதுதேச
மக்க ளெல்லாரும்
நினைவில்வைத்துக் கொள்ளுகின்ற
புனித நன்னாளாம்.

அந்தநாளே இந்தியர்க்கு
அதிர்ஷ்டம் பிறந்தநாள்
அந்தநாளே காந்திமகான்
அவத ரித்தநாள்.
தந்தையாகத் தலைவராகத்
தருமம் காத்திட
சத்தியமே குழந்தையாக
வந்து தித்தநாள்.

அழ. வள்ளியப்பா



இளமைப் பருவம்

போர்பந்தர் என்னும்ஓர் ஊரினிலே—
புத்திலி பாயின் வயிற்றினிலே [நல்ல
பார்புகழ் காந்தி பிறந்தனராம்—எல்லாப்
பையன்கள் போலே வளர்ந்தனராம்.

படிப்பிலே புலியாய் இருக்கவில்லை-காந்தி
பரீட்சையில் முதன்மை பெறவுமில்லை.
நடுத்தர மாக இருந்துவந்தார்—ஆனால்
'நல்லவன்' என்றே பெயரெடுத்தார்.

காந்தியின் அப்பாவோ காபாகாந்தி -அவர்
கற்றதோ ஐந்து வகுப்புவரை
வேந்தர்க்கும் யோசனை கூறுகின்ற-திவான்
வேலையைப் பார்த்துமே வந்தனராம்.

சின்ன வயதிலே காந்திமகான்—பல
சிறந்த குணங்களைக் கற்றனராம்.
என்றும் அவற்றைக் கடைப்பிடித்தே-அவர்
எல்லார் உளத்திலும் வாழ்ந்தனராம்

சிறுவராய்க் காந்தி இருக்கையிலே - அவர்
சிறந்ததோர் நாடகம் பார்த்தனராம்.
அரிச்சந் திரனது நாடகமே—அது
அவரது வாழ்வை உயர்த்தியதாம்.

அரசனும் இருந்தான் அரிச்சந்திரன்
—பின்னால்
அடிமையாய் மாறினன். ஆயினுமே
பொறுமையாய்த் துன்பத்தை ஏற்றனனே
—ஆனால்
பொய்மட்டும் சொல்ல மறுத்தனனே!

'உண்மையால் உயர்ந்தான் அரிச்சந்திரன்
—இதை
உணர்ந்துமே நானும் நடந்திடுவேன்'
என்றுநம் காந்தி முடிவுசெய்தார்-அதை
என்றென்றும் உயிர்போலக் காத்து
வந்தார்.

திருமணம்

கல்யாணம், கல்யாணம், கல்யாணமாம்
காந்திக்குக் கல்யாண வைபவமாம்
கல்யாணம், கல்யாணம், கல்யாணமாம்
கஸ்தூரி பாயுடன் கல்யாணமாம்.


மாப்பிள்ளை வயது பதின்மூன்று
மணப்பெண்ணின் வயதும் அதுவே
தான்.

சாப்பாடு மற்றுள்ள ஏற்பாடுகள்
தடபுட லாக நடந்தனவாம்.

திருமணம் என்றாலே என்னவென்று
தெரியாத தாலே காந்தியுமே
'சிறுமி ஒருத்தி கிடைத்துவிட்டாள்
சேர்ந்து விளையாட ஜோடி'என்றார்.

லண்டன் பயணம்

திருமணம் தன்னை முடித்துவிட்டோம்
—என்: பூ
திருப்தியாய்த் தந்தை மறைந்துவிட்டார்
அருமையாய் மகனைப் படிக்கவைத்தே—
நல்ல
ஆளாக்கத் தாயும்மே ஆசைப்பட்டாள்.



'காந்தியைச் சீமைக் கனுப்பிடலாய-கல்வி
கற்றுப் பாரிஸ்டராய் வந்திடுவான்
மாந்தரெல் லோரும் மதித்திடுவார்'-என்று
வயதான பெரியவர் ஒருவர்சொன்னர்.

'ஆங்கில நாட்டுக்குச் சென்றவர்கள்—பலர்
அருமைக் குணங்களை விட்டுவிட்டுத்
தீங்கான குணங்களைக் கற்றுக் கொண்டே
—மிக்க
சீரழிந் தா'ரென்றே அன்னைசொல்ல

'மாமிசம் சாப்பிட மாட்டேனம்மா - அங்கே
மதுபானம் அருந்திட மாட்டேனம்மா,
சாமிக்குப் பொதுவாகச் சொல்லுகின்றேன்
—அம்மா
சத்தியம், சத்தியம், சத்தியமே!'.

என்றே உரைத்தனர் காந்தியுமே-அன்னை
இசைந்தார் மகனை அனுப்பிடவே.
லண்டனை நோக்கியே கப்பலிலே—காந்தி
சென்றனர் கல்வியைக் கற்றிடவே.

பாரிஸ்டர் ஆனூர்!

லண்டன் நகரில் இருக்கும் போது
நடனம் பயின்றனர்!
நல்ல வாத்தி யாரி டத்தில்
பாட்டும் கற்றனர்.
என்ன முயற்சி செய்து பார்த்தும்
இரண்டும் தோல்வியே!
'இனியும் தேவை யில்லை' என்று
நிறுத்தி விட்டனர்.

சைவ உணவு கிடைக்கவில்லை.
ஆதலால் அவர்
சமையல் செய்து காலை மாலை
உண்டு வந்தனர்.



தெய்வ பக்தி கொண்டு காந்தி
பகவத் கீதையைத்
தினமும் படித்துப் படித்து ஞானத்
தெளிவு பெற்றனர்.

படிப்பு முடிந்து கப்ப லேறித்
திரும்பி வந்தனர்.
பாரிஸ் டராய் இந்தி யாவில்
காலை வைத்தனர்.
துடிது டித்துத் துறைமு கத்தில்
அழுது விட்டனர்,
துக்கத் தோடு அண்ணன் சொன்ன
செய்தி கேட்டதும்.

அன்னை இறந்து விட்ட தாக
அண்ணன் கூறவே
"அம்மா, அம்மா, உன்னி டத்தில்
அளித்த வாக்குகள்
ஒன்று கூடத் தவற வில்லை
என்று நானுமே
இன்று யாரி டத்தில் சொல்வேன்?"
என்று கதறினர்.

ஆப்பிரிக்காவில் தொண்டு

பாரிஸ்டர் தொழிலை நடத்திடவே
பம்பாய் நகருக்கு வந்தனராம்.
'பாரிஸ்டர் எம்.கே.காந்தி' என்னும்
பலகையை வாசலில் மாட்டினராம்.

வழக்குகள் ஏதும் வருவதில்லை
வந்த வழக்கும் ஜெயிப்பதில்லை.
வழக்குகள் ஏதும் இல்லையெனில்
வருவாய் கிடைத்திட வழியு
முண்டோ?

வக்கீல் தொழிலை விட்டுவிட்டு
வாத்தியா ராக மனுப்போட்டும்
தக்க தகுதிகள் இல்லையென்றார்.
சாதுவாம் காந்தியும் என்னசெய்
வார்?

ஆப்பிரிக்காவிலே உள்ளதுவாம்
அப்துல்லாக் கம்பெனி என்பதுவாம்
கூப்பிட்டுக் காந்திக்கு வேலையுமே
கொடுத்தனர் டர்பன் நகரினிலே.
ஆப்பிரிக் காவுக்குச் சென்றதுமே
அடைந்திட்ட தொல்லைகள் பற்பல
வாம்.

கேட்பவர் யாருமே இல்லையங்கே.
கேடுகள் செய்தனர் வெள்ளையர்கள்.
இந்தியக் குடும்பங்கள் அவ்விடத்தில்
ஏராள மாக இருந்தனவாம்.
இந்தியர் என்றாலே வெள்ளையர்கள்
இழிவாய் நடத்தியே வந்தனராம்.

நிறத்திமிர் கொண்டனர் வெள்ளை
யர்கள்.
நீதி மறந்தனர் வெள்ளையர்கள்.
'கறுப்பர்கள்' தம்மை ஒழித்திடவே
கடுமையாய்ச் சட்டங்கள் போட்டன
ராம்.

கொடுமைகள் யாவும் எதிர்த்திடவே
குமுறி எழுந்தனர் காந்திமகான்.
திடமாய் அவருடன் பற்பலபேர்
சேர்ந்து கிளம்பிட லாயினராம்.

சாந்த முறையிலே காந்தியுமே
சத்தியப் போரைத் துவக்கினராம்.
சாந்தமும் சத்தியம் சேர்ந்ததனால்
'சத்தியாக் கிரகம்' என்றனராம்.

சத்தியாக் கிரகம் செய்துவந்த
சத்திய சந்தராம் காந்தியினை
மிக்கக் கொடுமைப் படுத்தினராம்.
மிரட்டிச் சிறையிலே தள்ளினராம்.

இந்தியப் பெண்கள் சிறையினிலே
எத்தனை பேரோ இருந்தனராம்.
நந்தமிழ் நாட்டு வள்ளியம்மை
நல்லவளும் அதில் சேர்ந்தவளாம்.

தமிழர்கள் என்றால் காந்திஜியும்
தனியொரு பாசம் கொண்டிடுவார்.
தமிழ்மொழி தன்னையும் கற்றுவந்தார்.
சரியாய்க் கற்கவே நேரமில்லை.

இருபது ஆண்டுகள் காந்தியுமே
இருந்தனர் ஆப்பிரிக் காவினிலே.
திரும்பவும் இந்திய நாட்டினுக்குச்
சேவை புரியவே வந்தனராம்.

சபர்மதி ஆசிரமம்

இந்தியா சேருமுன்னே—புகழ்
எங்கும் பரவியதாம்.
வந்ததும் மக்களெல்லாம்—ஒன்றும்
வாழ்த்தி வணங்கினராம்.

காந்தி மகாத்மாவை—மக்கள்
காணத் துடித்தனராம்.
காந்தமாய் மக்களது—உள்ளம்
கவர்ந்திட லாயினராம்.

ஆமதா பாத்தினிலே—சபர்மதி
ஆற்றங் கரைதனிலே
சேமம் பெருகிடவே—அமைத்தார்
சிறந்திடும் ஆசிரமம்.

கல்வியைப் பெற்றிடலாம்—அங்கே
கைத்தொழில் கற்றிடலாம்.
நல்ல குணங்களெல்லாம்—கற்று
நாட்டுக் குழைத்திடலாம்.

ஹரிஜனப் பிள்ளைகளும்—சேர்ந்து
அங்கே வசித்தனராம்.
சரிசமம் யாவருமே—அங்கே
சாதிகள் ஏதும்இல்லை.

காந்தி மகானுடனே—அன்னை
கஸ்தூரி பாயும்அங்கே
சேர்ந்து உழைத்தனராம்—நல்ல
சேவைகள் செய்தனராம்.

அஹிம்சை ஆயுதம்

அந்நி யர்கள் இந்தி யாவை
அடக்கி யாண்டு வந்ததால்
ஐயோ, நமது தேச மக்கள்
அதிகத் துன்பப் பட்டனர்.



இந்தி யாவை அடைந்த உடனே
இந்த நிலைமை தன்னையே
எண்ணி எண்ணிப் பார்த்துக் காந்தி
ஏற்ற வழிகள் தேடினர்.
உலகப் போரில் எங்க ளுக்கு
உதவி செய்தால் நிச்சயம்'
உரிமை பலவும் தருவோ மென்று
உரைத்தார் வெள்ளைக் காரர்கள்.
பலம் மிகுந்த நமது வீரர்
பலரும் படையில் சேர்ந்தனர்.
பாடு பட்டு வெற்றி பெற்றும்
பலன் நமக்குக் கிடைத்ததோ?
இல்லை, இல்லை, வெள்ளையர்கள்
ஏய்த்து விட்டார் நம்மையே.
ஏதும் உரிமை அளிக்க மாட்டோம்
என்றும் கூறி விட்டனர்.
தொல்லை கொடுக்கும் சட்டம் ஒன்றும்
துரித மாகப் போட்டனர்.
சுதந்தி ரத்தைப் பற்றி எதுவும்
சொல்லக் கூடா தென்றனர்.
"நன்றி கெட்ட ஆங்கி லேயர்
இன்னும் இங்கே இருப்பதோ?
நாட்டை விட்டு அவர்கள் தம்மை
ஓட்ட வேண்டும் விரைவிலே"
என்று துடித்து இளைஞ ரெல்லாம்
இங்கு மங்குமகிளம்பினர்.
இந்தச் சமயம் காந்தி அடிகள்
எங்கும் சுற்றி வந்தனர்.
"அஹிம்சை என்னும் ஆயு தத்தால்
ஆங்கிலேயர் தம்முடன்
ஆண்மை யோடு போர் புரிந்து
அடைய லாமே சுதந்திரம்"
மகிமை பெற்ற காந்தி இதனை
வலியு றுத்திக் கூறினர்.
மக்க ளுக்குத் தேச பக்தி
வளர வழியும் செய்தனர்.

(அடுத்த இதழில் முடியும்)



சிங்கப்பூர் சேர்ந்தோம்

ஏப்ரல் இருபத்தோராம் தேதி காலையில் நாங்கள் கப்பலின் வெளித்தளத்துக்கு வந்த போது பிரயாணிகள் சிலர் ஆங்காங்கு கூடி நின்று பரபரப்புடன் ஏதோ பேசிக் கொண்டிருந்ததைக் கண்டோம். செய்தி என்னவென்று தெரிந்து கொள்ள எங்களுக்கும் ஆவல் எழுந்தது. நண்பர் ஒருவரை அணுகி விவரம் கேட்டோம்.

''நேற்று மாலை நடந்த விபத்தைப் பற்றித் தான் நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம்'' என்றார் அவர்.

''விபத்து நடந்ததா? என்ன விபத்து?...'' என்று அதிர்ச்சியடைந்தவராய்க்கேட்டோம்.

''இதுதானு பூலோகம் என்கிறீர்களே! நேற்று மாலையில் எங்கே போயிருந்தீர்கள் ?'' என்றார் அந்த நண்பர்.

''நேற்று நாங்கள் எங்கே போயிருந்தோம் என்பதே உங்களுக்குத் தெரியாதா ? நகருக்குள்ளே சென்றிருந்தோம். இரவு வெகு நேரத்துக்குப் பிறகு தானே கப்பலுக்குத் திரும்பினேம்! எனவே, விபத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியவில்லை!...கொஞ்சம் விவரமாகக் கூறுங்கள்!'' என்று அந்த நண்பருக்கு விளக்கம் கொடுப்பதற்குள் 'போதும் போதும்' என்றுகி விட்டது!

எங்கள் நிலைமையை அவர் ஒருவாறு புரிந்து கொண்டு விபத்தின் விவரத்தைக் கூறினர்:—

பாரந் தூக்கி-இயந்திரத்தின் உதவியால் கப்பலின் பாதாளக் கிடங்கிலே சரக்குகளை இறக்கி அடைக்கவும், வேண்டும்போது வெளியே எடுக்கவும் வசதியாகப் பெரிய 'திறப்பு' ஒன்று உண்டு. இது இரண்டாவது வகுப்பு அறைகளுக்கு அருகாமையில் உள்ளது. சரக்குகளின் 'ஏற்றுமதி—இறக்குமதி' முடிந்தவுடன் இந்தத் 'திறப்பு' பலகைகளைக் கொண்டு மூடப்படும். இவ்வாறு மூடப்பட்ட இடம் 'டெக்' பிரயாணிகள் காற்று வாங்கும் இடமாகப் பயன்படும்.

பினங்குத் துறைமுகத்தில் இறக்குமதியாக வேண்டிய சரக்குகளைப் பாதாளக் கிடங்கிலிருந்து தூக்குவதற்காகப் பலகைகளை அப்புறப்படுத்தி, திறப்பின் ஓரமாக அடுக்கி வைத்தார்கள். பின்னர், பாதாளக் கிடங்கிலிருந்து சரக்கு மூட்டைகள் இயந்திரத்தின் மூலம் தூக்கப்பட்டுத் துறைமுகப் 'பிளாட்பாரத்'திலே இறக்கப்பட்டன. இறக்குமதி ஏஜன்டின் வேலையாளான சீனர் ஒருவர் பாதாளக் கிடங்கிலே நின்று சரக்குகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். இயந்திர உதவியால் மூட்டைகளைத் தூக்கிக் கிளம்பிய கொக்கி ஒன்று சற்று விலகிப் பலகைகளின்மீது தாக்கி விட்டது. இதனுல் பலகை ஒன்று நழுவிப் பாதாளக் கிடங்கிலே தவறி விழுந்தது. கிடங்கிலே நின்ற சீனரின் தலைக்கு நேரே

டி. கே. சண்முகம் புத்தனேரி சுப்பிரமணியம்



அந்தப் பலகை விழுந்து விட்டது! அலறிக் கொண்டு அந்தக் கணமே உயிர் துறந்து விட்டார் அந்தச் சீனர்.

துயரச் செய்தி கேட்ட பிரயாணிகளும், துறைமுகக் கூலியாட்களும், போலீஸ் அதிகாரிகளும் அதிர்ச்சியடைந்து பரபரப்போடு கூடினர். இறந்த சீனரின் நெருங்கிய உறவினர் சிலரும் அங்கே வந்து சேர்ந்தனர். மாண்டவரின் சடலம் 'ஆம்புலன்ஸ்' வண்டியிலே கொண்டு செல்லப்பட்டது.

மேற்கண்டவாறு நண்பர் விளக்கிய விபத்து எங்களையும் ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது! புனிதமான மனித உயிர் ஒன்று போய் விட்டதே என்று வேதனைப்பட்டோம்.

"அந்த விபத்திலேயும் ஒரு விந்தையைக் கண்டோம்!" என்று மேலும் ஒரு முக்கிய செய்தியை விளம்பினார் நண்பர் :—

"விபத்தைக் கண்டு நாங்கள்தான் அதிர்ச்சியடைந்து கண்ணீர் சொரிந்தோமே தவிர, இறந்த சீனரின் உற்றார் உறவினரும் ஏனைய சீனக் கூலியாட்களும் கொஞ்சங்கூட மனக் கிலேசம் அடையவில்லை! கண் கலங்கவில்லை! ஒன்றுமே நடவாதது போன்று, உணர்ச்சியில்லாமல் நின்று பிரேதத்தை அப்புறப் படுத்துவதில் ஈடுபட்டார்கள்! இது எங்களுக்கு மிகவும் வியப்பாகவே இருந்தது! சீனர்களில் இடுக்கண் கண்டும் நடுக்கம் கொள்ளாத நெஞ்சழுத்தம் உடையவர்களும் இருக்கிறார்கள் போலும்!"

நண்பர் குறிப்பிட்டது எங்களுக்கும் நம்ப முடியாததாகவே தோன்றியது. ஆயினும், "சீனர்கள் விதியிலே அழுத்தமான நம்பிக்கையுடையவர்கள்: எளிதில் உணர்ச்சிவசப் படக் கூடியவர்களல்லர்" என்று நாங்கள் கேள்விப் பட்டது உண்மையாக இருக்கலாம் என்று மட்டும் எண்ணிக் கொண்டோம்.

பினாங்குத் துறைமுகத்துக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் மலேயாவின் மேற்குக் கரையில் போர்ட் வெல்ட், தெலுக்கான்சன், போர்ட் சுவெட்டன்ஹாம் என்னும் கோலக் கிள்ளான், போர்ட் டிக்ஸன், மலாக்கா ஆகிய ஐந்து துறைமுகங்கள் உள்ளன. இவற்றுள் கோலக்கிள்ளான்தான் இப்போது வசதியான பெரிய துறைமுகமாக இலங்குகிறது: இதனை மிகப் பெரிய துறைமுகமாக விரிவு படுத்துவதற்கு மலேயா அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது.

இராஜராஜ சோழன் காலத்தில் தெலுக்கான்சன் நகித் துறைமுகம் புகழ்பெற்று விளங்கியதாக வரலாறு கூறுகிறது. மலேயாவின் பண்டைப் புகழ் வாய்ந்த துறைமுகப் பட்டினம் மலாக்கா.

இந்தியாவிலிருந்து சிங்கப்பூர் செல்லும் பிரயாணக் கப்பல்கள் மேற்கண்ட ஐந்து துறைமுகங்களில் எதிலுமே நிற்பதில்லை. சிங்கப்பூரிலிருந்து திரும்பும் கப்பல்கள் கோலக் கிள்ளானை மட்டும் அணுகிப் பிரயாணிகளையும் சரக்குகளையும் ஏற்றி வருகின்றன.

பினாங்கிலிருந்து கிளம்பிய கப்பல் மலாக்கா ஜலசந்தியில் முன்னேறிக் கொண்டிருந்தது. தூரத்தில் அவ்வப்போது மலேயாவின் மேற்குக் கரை மங்கலாகத் தென்பட்டுக் கொண்டிருந்தது. ஏற்கனவே பிரயாணம் செய்து அனுபவப்பட்ட அன்பர்கள், "அதோ கோலக் கிள்ளான்! அதுதான் மலாக்காக் கரை!!" என்றெல்லாம் அவ்வப்போது சுட்டிக் காண்பித்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் குறிப்பிட்டது சரியா தவறு என்றுகூட எண்ணிப் பார்க்க நாங்கள் முற்படவில்லை. சிங்கப்பூர் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் புரிந்து கொண்டோம்.

கப்பலில் மலாய்மொழி தெரிந்த அன்பர்கள் ஏற்கெனவே சில வாக்கியங்களைக் கற்றுக் கொடுக்க முன் வந்தார்கள். எங்கு செல்கிறோமோ அந்த நாட்டு மொழியிலே ஓரளவு பேசக் கற்றுக்கொண்டால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்று எண்ணினோம். இந்த எண்ணத்துக்குத் துணையாக, நமது ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையின் கிளைக்கதை ஒன்று எங்கள் நினைவுக்கு வந்தது.

சாதுவன் என்ற வணிகன் ஒருவன் மரக் கலத்தில் பிரயாணம் செய்கிறான். நடுக்கடலில் அந்த மரக்கலம் விபத்துக்கு உள்ளாகி உடைந்து விடுகிறது. வணிகன் நந்தளித்துத்

சிங்கப்பூர்த் துறைமுகத்தில் கலைஞர்களை வரவேற்க அணிவகுத்து நின்ற 'சுப்பிரமணியம் பகுத்தறிவு இல்ல'த் தொண்டர்கள்.



தடுமாறி உடைந்த ஒரு மரக்கட்டையின் உதவியால் ஒரு தீவிலே ஒதுக்கப்படுகிறான்.

அந்தத் தீவின் பூர்வீகக் குடிகளைச் சந்திக்கிறான். அநாகரிகமாகத் தோன்றிய அவர்களோடு பேசிப் பழக முடியாமல் தொல்லைப்படுகிறான். அவனுக்கு ஒரு தந்திரம் தோன்றுகிறது. அந்தப் பழங்குடி மக்களின் பாஷையிலே பேசக் கற்றுக் கொண்டால் வாழ்வு கிடைக்கும் என்று நம்புகிறான். நுண்ணறிவால் தன் எண்ணத்தில் வெற்றி காண்கிறான். அவர்களுடைய மொழியிலே பேசியதும், முரட்டுக் குணம் படைத்தவர்களாகத் தோன்றிய அந்த அநாகரிக மக்களின் தலைவன் சாதுவனின் திறமையிலே மயங்கித் தன் மகளையே அவனுக்கு மணம் செய்து கொடுக்கிறான்.— இப்படியாக வளர்கிறது கதை.

முன்பின் அறிமுகமில்லாத முரட்டு மக்களையும் ''பாஷையிற் பிணித்து அவர் பான்மையன் ஆயினன்'' சாதுவன் என்ற மணிமேகலைக் குறிப்பு எங்களையும் மலாய் மொழி பேசக் கற்றுக் கொள்ளத் தூண்டத்தான் செய்தது. சாதுவனுக்குக் கிடைத்தது போன்ற ''மணப் பரிசை'' நாங்கள் விரும்பாவிட்டாலும், மலாய் மக்களின் ''குணப் பரிசா''வது கிடைக்கட்டும் என்று நாங்கள் ஆசைப்பட்டதில் தவறில்லை அல்லவா ?

எங்களுடைய ஆர்வத்தால் நாங்கள் பேசக் கற்றுக் கொண்ட மலாய் வாக்கியங்களில் சிலவற்றைக் கீழே தந்துள்ளோம்:—

மான்யா தபே—வணக்கம்.

அடா பாய் ?—சௌக்கியமா ?

மாஹு பீர்கி—எங்கே போகிறாய் ?

சாயா புலாங் — நான் போய் வருகிறேன்.

திரிமா கஸி — உங்களுக்கு வந்தனம்: 'தாங்க் யு'.


இனி ப்ரபா?—இது என்ன விலை?


மாக்கான் பீர்கி லா — சாப்பிடப் போகிறேன்; சாப்பிடப் போகிறோம்.


இந்த வாக்கியங்களைப் பேச மட்டுந்தான் தெரியும்; எழுதத் தெரியாது. எங்களுக்கு இவற்றைச் சொல்லிக் கொடுத்தவர்களுக்கே எழுதத் தெரியாதாம். மலேயாவில் பெரும்பாலான மக்களுக்கு மலாய் மொழியைப் பேசத்தான் தெரியுமே தவிர, அந்த மொழியை எழுதத் தெரியாதாம் !


சிங்கப்பூரில் இறங்க வேண்டிய நாள் நெருங்கி விட்டமையால் கப்பல் நாயகரிடமிருந்து விடைபெறுவதற்காக அவருடைய அறைக்குச் சென்றோம்:

''சிறிதும் உடல் அலுப்பு ஏற்படாமல் பத்திரமாகக் கப்பலைக் கொண்டு வந்து விட்









1. சிங்கப்பூர் கடற்கரையைப் பார்த்த வண்ணம் 'சென்னை ராஜ்யக்' கப்பலில் நிற்கும் டி. கே. எஸ். குழுவினர். 2. சிங்கப்பூர் கடல் விளையாட்டுத் துறை. 3. கவின் மாளிகையும், விண்ணளாவும் கட்டடங்களும். 4. புகழ்பெற்ற சிங்கப்பூர் சாங்கிக் கடற்கரை.



உற்சாகம் செழித்திருக்க


புது சக்தியை அளிக்கும்

பை-கோலேட்ஸ்

முறையாக உபயோகியுங்கள்

லிவருக்கு ஊக்கமூட்டுவதில் மிகச் சிறந்தது

கெடுக்க முடியாத புது சீலுடன்



குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி வியாதிகளுக்கு

ஜம்மியின் "லிவர்க்யூர்"

மாதாந்திர விஜயம்

எமது வாடிக்கையாளர்களின் நலனையும், சௌகரியத்தையும் முன்னிட்டு எமது டாக்டர் கீழ்க்கண்ட இடங்களில் ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதிகளில் விஜயம் செய்கிறார். அப்பொழுது அவரை நேரில் கலந்து ஆலோசிக்கலாம்.

ஆலோசனை நேரம்: குறிப்பு—காலை 9 முதல் 11 மணி வரை; மாலை 3 முதல் 5 மணி வரை

இடம்	தேதி	இடம்	தேதி
கரூர்	1 காலை	விருதுநகர்	9 காலை 8 to 9
சேலம்	2 காலை & மாலை	கோவில்பட்டி	9 10-30 to 12; முற்பகல்
ஈரோடு	3 காலை	தூத்துக்குடி	9 மாலை
திருப்பூர்	3 மாலை	திருநெல்வேலி	10 காலை & மாலை 11 காலை
கோயமுத்தூர்	4 காலை & மாலை	ஸ்ரீவைகுண்டம்	11 மாலை
பாலக்காடு	5 காலை	அம்பாசமுத்திரம்	12 காலை
பொள்ளாச்சி	5 2-30 to 3-30 மாலை	தென்காசி	12 மாலை
உடுமலைப்பேட்டை	5 4-30 to 5-30 மாலை	திருவனந்தபுரம்	13 காலை & மாலை
பழனி	5 6-30 to 7-30 மாலை	ராஜபாளையம்	14 காலை
திண்டுக்கல்	6 காலை	சிவகங்கை	14 மாலை
பெரியகுளம்	6 மாலை	காரைக்குடி	15 காலை & மாலை
மதுரை	7 & 8 காலை & மாலை	தேவகோட்டை	16 காலை
		புதுக்கோட்டை	16 மாலை

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்

சென்னை — திருச்சிராப்பள்ளி — கும்பகோணம்



த்வார்க்கின்ஸ்

கை ஆர்மோனியப் பெட்டிகள் செய்வதில் கைதேர்ந்தவர்கள். மேற்படி ஆர்மோனியப் பெட்டிகள் தயாரிப்பதில் புதுமையைப் புகுத்தியவர்களில் 'த்வார்க்கின்ஸ்' முன்னணியில் நிற்கிறார்கள்.

விலை: ரூ. 40/-லிருந்து ரூ. 550/-வரையில்

விலை விவர ஜாபிதாவுக்கு ஆங்கிலத்தில் எழுதுங்கள்

த்வார்க்கின் & சன் பிரைவேட் லிட்.

8/2, எஸ்பிளனேடு ஈஸ்ட், கல்கத்தா-1



கப்பலிலிருந்து திரு டி. கே. சண்முகமும், திரு டி. கே. பகவதியும் கரையில் இறங்குகிறார்கள். அவர்களை வரவேற்கத் துறைமுகத்தில் கூடியிருந்த மாபெரும் கூட்டம்.

டீர்கள். மிகவும் நன்றி" என்று அவரிடம் முகமலர்ச்சியோடு கூறினேம்.

"இதுதான் பிரயாணத்துக்கு மிகவும் உகந்த காலம். அதனுல்தான் கப்பலில் ஆட்டம் இல்லை. நீங்கள் எப்போது திரும்பப் போகிறீர்கள்?" என்று கேட்டார் காப்டன்.

"ஜூலை மாதத்தில்!"

"அப்படியா?..."

"ஏன்? அந்த மாதத்தில் கப்பலில் ஆட்டம் அதிகமாக இருக்குமோ?..."

"இல்லையில்லை! மே-ஜூன் மாதங்களில் அசைவுத் தொல்லை மிக அதிகமாக இருக்கும். ஜூலையிலும் கொஞ்சம் தொல்லையுண்டு! ஏன்? ஆகஸ்டில் திரும்புங்களேன்?"

"இல்லை: ஜூலையில் திரும்புவதென்று வகுத்து விட்டோம். கப்பல் ஆட்டத்தையும் கடற்பிணியையும் கொஞ்சம் அநுபவித்துத் தான் பார்ப்போமே! வாழ்நாளெல்லாம் உங்களைப் போன்றவர்கள் இந்தத் தொல்லைகளையெல்லாம் அநுபவிக்கிறீர்களே!" என்று நாங்கள் துணிவாகச் சொன்னதைக் கேட்டதும் காப்டன் சிரித்து விட்டார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் சிங்கப்பூர்த் துறைமுகம் கம்பீரமாகக் காட்சியளித்தது.

வெளுத்த வானமும், நீலக்கடலும், பசுமையான சிறு சிறு குன்றுகளும், வானளாவிய மாளிகைகளும், பட்டொளி வீசிப் பறக்கும் கொடிகளுடன் மிதந்து நின்ற நூற்றுக்கணக்கான கப்பல்களும் பல வர்ணக் காட்சியாகப் பரிணமித்தன.

கிழக்கும் மேற்கும் சந்திக்கும் கீர்த்திபெற்ற துறைமுகம் சிங்கப்பூர். ஆசியாக் கண்டத்தின் தென்கோடியில் உள்ள இத்துறைமுகம் பூமத்தியரேகைக்கு வடக்கில் எண்பதுமைல் தொலைவில் உள்ளது. இந்தத் துறைமுகத்திலே தான் இந்து மகா சமுத்திரமும் பசிபிக் மகா சமுத்திரமும் ஒன்ருக இணைந்து கிழக்குக்கும் மேற்குக்கும் இருக்க வேண்டிய இணக்கத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன.

உலகத்தின் மிகப் பெரிய துறைமுகங்களில் சிங்கப்பூர் முக்கியமானது. 1955-ம் வருஷத்தில் மட்டும் 3694 கப்பல்கள் இந்தத் துறைமுகத்தைப் பயன்படுத்திக் கொண்டன என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

காலை எட்டு மணிக்குத் துறைமுகத்திலிருந்து சிறிது தூரத்தில் கப்பல் நிறுத்தப்பட்டது. முதலில் 'டெக்'—'பங்க்' பிரயாணிகள் இறக்கப்பட்டுப் படகுகளின் மூலம் புறமலை என்று சொல்லப்பட்ட தீவுக்கு அனுப்பப்பட்டார்கள். அந்தத் தீவில் உள்ள தொத்துநோய் நிவாரண விடுதியில் பிரயாணிகள் மூன்று நாட்கள் தங்க வேண்டுமாம். உடல் நலப் பரிசீலனை முடிந்த பிறகு தான் அவர்கள் நகரத்துக்குள் அநுமதிக்கப் படுவார்களாம். இந்தத் தொல்லை இல்லாமல் இருப்பதற்காக 'டெக்' பிரயாணிகள் பலர் பினங்கிலேயே இறங்கி, அங்கிருந்து ரயில் மார்க்கமாகச் சிங்கப்பூருக்கு வருவது உண்டாம். உயர் வகுப்புப் பிரயாணிகளுக்கு இது போன்ற 'குவாரன்டைன்' ஏற்பாடு சாதாரணமாகக் கிடையாது என்று அறிந்து ஆறுதல் அடைந்தோம். உயர் வகுப்புப் பிரயாணிகளுக்குத் தொத்துநோய் வராது என்ற எண்ணமோ, வந்தாலும் தாங்களாகவே சமாளித்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையோ தெரியவில்லை!

கடலானது துறைமுகத்தை முட்டிக் கொண்டு நின்ற காட்சியைக் கண்டோம். அந்தக் கால்வாயின் வழியே லாகவமாகக் கப்பல் கொண்டு செல்லப்பட்டது. பகல் ஒரு மணிக்குத் துறைமுகக் கரையைச் சேர்ந்தது. 24-வது துறையில் கப்பல் நின்றது.

கரையிலே காத்து நின்ற ஆயிரக்கணக்கான அன்பர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர். நெருக்கித் திணறிக் கொண்டிருந்த கூட்டத்துக்கு முன்னல் ஒழுங்காக அணி வகுத்துத் தொண்டர்கள் பலர் காத்துக் கொண்டிருந்தனர். இவர்கள் 'சுப்பிரமணியம் பகுத்தறிவு இல்லத் தொண்டர்கள்' என்று அறிமுகப்படுத்தப் பட்டனர்.



"திரு முனிசாமி மிகுந்த பக்தி சிரத்தையோடு எனக்கு முக க்ஷவரம் செய்தார். அவரது கத்தி சுதேசிக் கத்தி தான். சோப்பில்லாமலே அவர் முகக்ஷவரம் நன்கு செய்தார்" என்று காந்திமகான் க்ஷவரக் கலைஞர் முனிசாமியைப் பாராட்டி எழுதிய கடிதத்தைக் காணலாம்.

"இந்தத் தொண்டர் படையைப் பற்றிக் கேள்விப்பட்டதும் மெய்சிலிர்த்துப்போனேன். தமிழகத்திலிருந்து இங்கு வந்துள்ள தமிழ் மக்கள் எத்தனை எத்தனையோ துறைகளில் தொண்டாற்றி வருகிறார்கள். அவைகள் எல்லாவற்றிலும் சிறந்தது இந்தத் தொண்டர்ப் படையின் அன்புத் தொண்டு. தமிழ் நாட்டிலிருந்து யார் வந்தாலும், ஏதாவது பொது விழாக்கள் கூட்டங்கள் நடந்தாலும் அங்கு இந்த 'சுப்பிரமணியம் பகுத்தறிவு இல்லத் தொண்டர்கள்' சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறார்கள். இந்தத் தொண்டர்கள் எல்லாரும் பெரும் செல்வந்தர்கள் அல்ல. மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான். தங்கள் ஊதியத்தில் சிறு பகுதியையும், தங்கள் உழைப்பையும் இம்மாதிரி பொதுப் பணிகளுக்குச் செலவு செய்து வருகிறார்கள். அந்தத் தொண்டர்களின் தொண்டை எப்படிப் பாராட்டுவது? அவர்கள் மலர்ந்த முகத்துடன் ஆற்றிய பணியைச் சொல்வதா! கடமை புணர்ச்சியுடன் செய்த சேவைகளைச் சொல்வதா? எதைப்பற்றிச் சொல்வது என்றே தெரியவில்லை. சமயம் நேர்ந்தால் பின்னும் இந்தப் பகுத்தறிவு இல்லத் தொண்டர் படையைப் பற்றிக் கூறுவோம்.

ஏணிப் பாலம் போடப்பட்டது: ஏராளமான அன்பர்கள் மாலைகளுடனும் கையெழுத்து வாங்கும் புத்தகங்களுடனும் கப்பலுக்குள் படையெடுத்து விட்டனர். இந்தக் கூட்டத்தில் சிக்கிக் கொண்டு தவித்த இருவாளர்கள் ஒலி முகமது, பே. கோவிந்தசாமிப் பிள்ளை, தமிழர் பிரதிநிதித்துவ சபைச் செயலாளர் எம். எம். மாலை, முதலிய அன்பர்களும் பத்திரிகை நிருபர்களும் எப்படியோ கப்பலின் பொழுது போக்கு மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார்கள். கலைக் குழுவினருக்கு மலர் மாலை சூட்டி வரவேற்றார்கள்.

அன்பு வெள்ளத்தில் மூழ்கித் திணறி ஒருவாறு கப்பலை விட்டு இறங்கினோம். சூழ நின்ற மக்களில் பெரும்பாலோர் தங்கச் சிரிப்புடன் எங்களை வரவேற்றார்கள். தங்கச் சிரிப்பு என்றதும் என்னமோ ஏதோ என்று எண்ண வேண்டாம். பலர் 'தங்கப் பல்' கட்டிக்கொண்டிருந்தார்கள். சில மக்களில் இளம் பெண்களும் கூடத் தங்கப் பற்களுடன் காட்சி அளித்தனர். அளவுக்கு மீறி 'ஐஸ் கிரீம்' சாப்பிடுவதனால் பற்கள் அகாலமாக விழுந்து விடுகின்றன என்று சிலர் காரணம் கூறினார்கள். சீனர்களுக்கும் மலாய்க்காரருக்கும் தங்கப் பல் கட்டிக்கொள்வது ஒரு நாகரிகமாகவே ஆகிவிட்டதென்று சிலர் குறிப்பிட்டார்கள். இந்தியர்களில் சிலரும் இந்த நாகரிகத்தைப் பின்பற்றத் தயங்காமல் இருக்கிறார்களாம்! மக்கள் வெள்ளத்திலிருந்து எங்களை ஒருவாறு மீட்டுக் கொண்டு வந்து அலங்கரிக்கப்பட்ட கார்களிலும் பஸ்ஸிலும் ஏற்றியனுப்ப வழி செய்தனர் தொண்டர்கள். நகருக்குள் நுழைந்ததும் விண்மாளிகை, விக்டோரியா மண்டபம், உயர்நீதி மன்றம், மெர்டேகா பாலம், கல்லாங் பழைய விமானத் துறை முதலியவை எங்களுக்குத் தென்பட்டன. உடன் வந்த தொண்டர்கள் இயன்ற மட்டும் இவற்றையெல்லாம் எங்களுக்கு அறிமுகப்படுத்தி வந்தார்கள்.

பகல் இரண்டுமணி யளவில் 'பிராங்கல் எஸ்டேட்' என்ற இடத்தில் எங்களுக்காக அமர்த்தப்பட்டிருந்த வசதியான பெரிய வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

அன்றிரவே சில் சாமான்கள் அனைத்தும் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு 'பாட்மிண்டன் ஹால்' என்ற இடத்துக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டு விட்டன என்பதை அறிந்து உண்மையில் வியப்படைந்தோம். (தொடரும்)



ஒரு மனிதனுடைய மனோவேகத்துக்கு இருக்கும் சக்தி அவனுடைய கால்களுக்கு இருக்கவே முடியாது என்பது எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடிய விஷயமே. ஆனால் சென்ற ஆடிக் கிருத்திகையை யொட்டி முருகப் பெருமானுடைய திவ்ய தரிசனத்துக்காக நானும் என் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சுவாமி மலைக்குச் சென்றபோது, மனிதனுடைய மனத்தைவிட அவனுடைய கால்களுக்கு அதிக சக்தியிருப்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

திருச்சியிலிருந்து எங்கள் ரயில் கிளம்பிய போது இரவு சரியாக மணி பதினொன்று. வண்டி புறப்பட்ட ஒலியோடு, 'வேல், வேல், வெற்றிவேல்!' என்று அநேகமாக எல்லாப் பெட்டிகளிலுமிருந்தே பக்தர்களின் குரல்கள் முழங்கின. அப்போது என் மெய் சிலிர்த்தது! உள்ளம் புளகாங்கித மடைந்தது.

ஒரு பிரார்த்தனையை நிறைவேற்றவே குடும்பத்திலிருந்த சிலரோடு சுவாமி மலைக்குப் போகிறேன் நான். என்னோடு வந்து கொண்டிருந்தவர்கள் எனது வயதான சித்தப்பா, சித்தி, இரு சகோதரிகள், ஒரு கடைக் குட்டித் தம்பி ஆகியோர்தாம். என் மனைவி வர முடியவில்லை; பிரார்த்தனை செலுத்துவது அவளுக்காகத்தான். புறப்பட்ட போது சரோஜாவுக்குக் கண்ணீர் விழியையே மறைத்து விட்டது! மேலே கூடத்துச் சுவரில் மாட்டியிருந்த சுப்பன் சுவாமியை நோக்கிக் கூப்பிய கரங்களுடன் அவள், "சுவாமி! மரத்துப் போயிருந்த என் கால்களில் ரத்தம் ஊறச் செய்து விட்டீர்கள். உங்களுக்கு வெள்ளிப் பாதங்களைச் செய்து அனுப்புகிறேன்..... ஆனால் என்னால் நடந்து வந்து வெள்ளிப் பாதத்தோடு நிற்கும் தங்கள் கோலத்தைப் பார்க்க முடியவில்லையே!" என்று தேம்பினாள்.

அவளுக்கு நான் சமாதானம் சொல்லி விட்டுப் புறப்பட்டேன்.

சாதாரணமாக அவ் வண்டியில் அந்த இரவு நேரத்தில் கூட்டமே இருக்காது. ஆனால் அது உற்சவ காலமாதலால் நிறையக் கூட்டம் இருந்தது.

கனமான வெள்ளிப் பாதங்கள் இருந்த மூட்டையை என் சித்தப்பா பத்திரமாகத் தமது மடியில் வைத்துக் கொண்டு இரு கைகளாலும் அதை அணைத்துக்கொண்டும் பெஞ்சியில் சப்பணம் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் நாக்கிரதைப் பேர்வழி.

என் இரு சகோதரிகளும் சித்தியும் அப்படிப் பெஞ்சிகளில் சாய்ந்து கொண்டு தூங்க ஆரம்பித்தார்கள். என் கடைக் குட்டித் தம்பி மட்டும் தனது நிஜாரின் வாயை இழுத்து விட்டுக் கொண்டு, ஜன்னலுக்கு வெளியேயும் இருளைப் பார்த்துக்கொண்டு கொட்டுக் கொட்டென்று விழித்துக் கொண்டிருந்தான்.

எனக்குப் பின்னால், வண்டியின் நடைபாதையில் எங்கள் பகுதியை நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு பேர்வழியைப் பார்த்து ராமு 'பார், அண்ணா' ஒரு நொண்டிப் பூச்சாண்டி!" என்று கூறினான்.

கைகளில் இருக்கியிருந்த கட்டைகளின் சீரான 'டகக் டகக்' நாதத்துடன் இடமாகக் கீழே தரையை உந்திக் கொண்டிருந்த ஒரு காலால் மட்டும் மெல்ல மெல்ல முன்னேறி எங்கள் பகுதிக்கு வந்தான், அந்த நொண்டிக் கிழவன். எதிர்ப் பெஞ்சியில் கொஞ்சம் காலியிருந்த இடத்தில் உட்காருவதற்காகக் கைகளிலிருந்த கட்டைகளை எடுத்து வண்டிச் சுவரில் சாய்க்கவும் முனைந்தான் அவன்.

சித்தப்பா பழைய காலத்துப் பேர்வழி. நிச்சயம் அவனிடம் டிக்கட் இருக்காது என்ற எண்ணம் வெகு சீக்கிரமாகவே வந்துவிட்டது அவருக்கு. அவனை நோக்கி இரைந்தார்.

"ஏய், ஏய்! எங்கேடா இங்கே வந்தாய்? டிக்கெட் இருக்கிறதா?"

இதற்குள் அவன், "அப்பனே, ஆறுமுகம்! ஆறுமுகம்!" என்று பெருமூச்சுவிட்டுச் சொல்லிக் கொண்டே, எதிர்ப் பெஞ்சியில் உட்கார்ந்தும் விட்டான். "இருக்கிறது சாமி!" என்றான் அலட்சியமாக.

"எங்கே போகிறாய்?"


"சாமி எங்கே இருக்காரோ அங்கே போகிறேன், சாமி!" என்று நகை கலந்த குரலில் கூறினான் அந்தக் கிழவன்.

சித்தப்பாவுக்குக் கோபம் வந்து விட்டது. "கேலி பண்ணுகிறாயா?" — இரைந்து கத்தினார் அவர்.

வண்டியில் எல்லோரும் தூங்க ஆரம்பித்தனர். ராமுவும் என் மடியில் முகம் பதித்துத் தூங்கி விட்டான். பூச்சாண்டியைக் கண்ட பயமோ என்னவோ, எனக்குப் புரியவில்லை. ஆனால் கிழவன் சித்தப்பாவை நோக்கித் தூக்கிப் போட்ட கேள்வி எங்கள் இருவரையுமே திடுக்கிட வைத்தது.

"வெள்ளிப் பாதம் போடப் போறீங்களா, சாமி?"

இவனுக்கு எப்படித் தெரியும்? இவன் பூச்சாண்டிதானோ? வழிப்பறிக் கொள்ளைக்



காரனா? திருட வந்த ஒற்றைக்கால் திருடனே தானே இவன்? சித்தப்பா வார்த்தைகளைத் திக்கித் திக்கிச் சொன்னார்.

''உன்னை யாரப்பா அதெல்லாம் கேட்கச் சொன்னார்கள்? ஒண்ட வந்த நீ....'' அவர் முடிக்கவில்லை; கிழவன் கூறினான்:

''ஒண்டவந்தேன், சாமி! ஆனால் அநாவசியமாகச் சந்தேகப்படுகிறீர்களே? உங்கள் மடியில் இருக்கும் வெள்ளிக் கால்களை அபகரித்து விடுவேன் என்று பயப்படுகிறீர்களா? சாமி! அந்தப் பயம் வேண்டாம்! நான் இங்கே இருக்கும்வரை — சுவாமிமலை போகிறவரை — உங்களுக்கு நிம்மதி இருக்காது; என்றாலும் இங்கேயிருந்து இந்த நேரத்திலெழுந்து வேறே பெட்டிக்குப் போக முடியாது. என் கதையை, இந்தக் காலொடிந்த கதையைக் கேட்கிறீர்களா, சாமி? பயமில்லாமல் உங்களுக்கும் பொழுது போகும்.....'' என்று ஆரம்பித்தான் அந்தக் கிழவன்:

*

ஏழு வருஷங்களுக்கு முன்னால் மாசிலாமணி கிழவனுமில்லை; ஒரு காலொடிந்த நொண்டியுமில்லை; அவன் உடம்பில் நல்ல வலு இருந்தது; அப்போதே நாற்பதைந்து வயது ஆகியிருந்தாலும் நல்ல இளமைக் கட்டு இருந்தது மாசிலாமணியிடம்.

ஊரில் எத்தனையோ பேர்கள் எத்தனையோ விதமான தொழில் செய்து பிழைத்தார்கள். மாசிலாமணியும் வயிற்றைக் கட்டிப் பிழைத்துத்தான் வந்தான். ஆனால் அவனுடைய பிழைப்பை ஒரு வித்தைப் பிழைப்பாக எல்லோரும் கருதினார்கள். மாசிலாமணியை ஓர் வித்தை மனிதனாகவே எல்லாரும் நினைத்தார்கள். தெருக் கோடியிலிருந்த அவன் வீட்டுக்கு 'மந்திரவாதி வீடு' என்றே பெயர் வைத்து விட்டார்கள்.

உண்மையில் மாசிலாமணி நிறையச் சொத்து சேர்த்தவனல்ல. அவன் உறைந்த அந்தக் குச்சு வீடு ஒன்றைத் தவிர, அவனுடைய ஒரே பொக்கிஷம் அருமை மகள் மாணிக்கவல்லிதான். தாயற்ற பெண்ணை அவனிடம் தாயன்பையும் சேர்த்து மாசிலாமணி பொழிந்தான்.

மாதத்தில், இருபது நாட்களுக்கும் மேலே வெளியூர்களில் தொழில் நிமித்தமாகச்சுற்றிக் கொண்டிருப்பான் மாசிலாமணி. அப்போதெல்லாம் வீட்டோடேயே இருந்து வந்த வயதான அத்தைக் கிழவியொருத்திதான் மாணிக்கவல்லிக்குத் துணை.



ஒரு முறை மாசிலாமணி வடக்கே வெகு தூரமுள்ள ஒரு ஊருக்குப் பிரயாணம் போய்விட்டு இரண்டுமாதங்கள் தாமதமாகியே ஊருக்குத் திரும்பி வந்தான்.

ரயில் நிலையத்திலிருந்து ஊர் இரண்டு கல்தூரமிருக்கும். இருப்புப் பாதையை யொட்டியே வர வேண்டும். தண்டவாளத்தின் பெரிய நதிப் பாலத்தைத் தாண்டி விட்டால்சொந்த ஊர்வந்துவிடும்.

அப்போது, இரவும் பகலும் ஒன்றையொன்று தழுவி முயும்கும் அந்திப்பொழுது. மாசிலாமணி பாலத்தைக் கடந்து ஊர் எல்லையிலிருந்த ஆலமரத்தருகில் காலை எடுத்து வைத்தபோது, அந்த மரத்துக்குப் பின்னாலிருந்து பழக்கப்பட்ட குரல்-பெண் குரல்-அதிலும் அவனது அருமைச் செல்வம் மாணிக்கவல்லியின் குரல்—அவன் காதில் விழுந்தது. கூட, ஓர் ஆண் குரல்!

விதிர் விதிர்த்துப் போய் நின்ற இடத்தில் நின்றான் மாசிலாமணி.

"நேரமாகி விட்டது. நான் வீட்டுக்குப்போக வேண்டும். விடை கொடுக்கிறீர்களா?"—இது மாணிக்கவல்லியின் குரல்.

" அப்புறம்? நாளைக்கு இங்கே சந்திப்போமா, மாணிக்கம்?" — ஆகா! இது நாட்டாண்மைக்காரர் நாராயணசாமியின் செல்வப் புதல்வன் சிங்காரவேலுவினுடைய குரல் அல்லவா!

அந்தப் பேச்சு மேலும் தொடர்ந்தது:

"இல்லை. அப்பா நாளைக்கு வந்தாலும் வந்துவிடுவார். அவருக்கு என்மேல் அதிகப் பிரியம். நாம் இப்படிச் சந்திப்பது தெரிந்தால் மிகவும் கோபப்படுவார்."

"அப்படியானால் இதற்கு முடிவு?"

"அப்பாவை நான் மெதுவாகக் கேட்கிறேன். என் ஆசைக்கு மறுத்துச் சொல்ல மாட்டார் அப்பா. அவருக்கு நான் ஒரே பெண்....வரட்டுமா, நேரமாகி விட்டது. பிறகு சந்திப்போம்" என்று கூறிவிட்டு மாணிக்கவல்லி வேகமாக அந்த இடத்திலிருந்து புறப்பட்டு விட்டாள்.

மாசிலாமணிக்கு மனம் கனத்து வந்தது. நாட்டாண்மைக்காரர் அவன் பெண்ணைக் கேட்டு ஒரு போதும் வரமாட்டார்; அவனும் மாணிக்கவல்லியை]அவருடைய மகன் சிங்காரவேலுவுக்குக் கொடுக்க ஒரு போதும் இசைய மாட்டான்.

ஒருசமயம் சிங்காரம் ஊரை விட்டு எங்கோ போய் விட்டபோது, 'அவன் இருப்பிடத்தைப் பற்றி மாசிலாமணியிடம் மந்திரம் வைத்துக் கேட்கப் பலரும் நாட்டாண்மைக்கார நாராயணசாமியைத் தூண்டினர்.


அப்போது, " மாசிலாமணி உழைத்துச் சம்பாதிக்காதவன். மந்திரக்காரன் குடும்பம் மூன்று தலைமுறைக்குக்கூட உருப்பட்டதில்லை. அவனிடம் போய் நான் மந்திரம் கேட்பதாவது? அதைவிட எங்கோ ஓடிவிட்ட என் மகன் சிங்காரம் வீட்டுக்குத் திரும்பி வராமலிருந்து விட்டாலும் பரவாயில்லை!" என்று மிகுந்த இறுமாப்புடன் கூறினர்.


மந்திரத்தில் அவருக்கு நம்பிக்கை வேண்டாம்; மறுப்பைச் சொல்லும்போது மனிதப் பண்பில் கூடவா நம்பிக்கை இல்லாமற் போய் விட்டது? மாசிலாமணியின் மனத்தில் இது ஆறாத புண்ணைத் தங்கி விட்டது. எல்லாவற்றுக்கும் மேலே அந்தச் சிங்காரம் ஊருக்குத் திரும்பிய போது, மகனுடைய நடத்தையைக் கண்டிப்பதற்குப் பதிலாக நாட்டாண்மைக்காரர், நாலுபேரிடம் மாசிலாமணியைப் பற்றிப் பரிகசித்துச் சொன்னாராம்.

இதை யெல்லாம் எண்ணும் போது ஏற்பட்ட கோபத்தையும் ஆத்திரத்தையும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

அன்று மகளிடம் எதைப் பற்றியும் அவன் கேட்கவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து ஆற்றங்கரைப் படித் துறையில் மாலை வேளையில் சிங்கார வேலுவைத் தனிமையில் சந்தித்தான்மாசிலாமணி. தன்





பழத்துக்குப் பழம் பகட்டான தோற்றம், ஆனால்...

புறத்தோற்றம் கண்களை மயக்கும். உற்றுப் பார்த்து மட்டுமே பழங்களின் தராதரத்தை கணித்துவிட முடியாது. ஆகவே வாங்கு முன்பு பழங்களை ருசி பார்ப்பதே நல்லது.

ஆனால் சோப்பு வாங்கும்போது, தின்று பார்த்து வாங்கமுடியுமா? சோப் உள்பட, பாக் செய்யப்பட்டு விற்கப்படும் எல்லா சாமான்கள் விஷயத்திலும், நம்பிக்கைக்குப் பாத்திரமான சரக்கின் வியாபாரச் சின்னம் இருக்கிறதா என்று பார்த்து வாங்குவது தான் அனுபவமுள்ளவர்களின் பழக்கம்.

தரத்திலுயர்ந்த சரக்குகளையே தவறாமல் வழங்கி வருவதன் காரணமாகத்தான் சுமார் 70 வருஷ காலமாக ஹிந்துஸ்தான் லீவர் தயாரிப்புகளிடம் பொதுமக்களுக்கு நம்பிக்கை இருந்து வருகிறது. சாமான்களின் மேன்மை நிலைபெறும் பொருட்டு, உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் அவையனைத்தையும் பரிசோதித்துப் பார்க்கிறோம். குணத்தையும் தருநிலையையும் ஊர்ஜிதம் செய்து கொள்கிறோம். நீடித்த கால சேமிப்புக்கு ஈடு கொடுக்குமா என்று நிச்சயித்துக் கொள்கிறோம்.

ஆம். இம்மாதிரி வாரத்திற்கு 1200 பரிசோதனைகளுக்கு உள்ளாகும் பொருள்கள் லைப்பாய் சோப், டால்டா வனஸ்பதி, கிப்ஸ் எஸ்.ஆர். டூத்பேஸ்ட் போன்றவை — எல்லாமே பரிச்சயமான சரக்குகள் அல்லவா? நாடெங்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவை என்பதனால் நன்கு பரிச்சயமானவை; பரிசோதித்துப் பார்க்கப்படுபவை என்பதனால் நம்பிக்கைக்குப் பாத்திரமானவை.

குடும்பந்தோறும் தழைத்தோங்க ஊழியம் புரிவது ஹிந்துஸ்தான் லீவர்

HLL. 5-X29 TM

காதல் தெய்வத்தின் தந்தையல்லவா! மாசிலாமணியைக் கண்டதும் சிங்காரம் சிரித்துக் குழைந்து வந்தான்.

பகல் முழுதும் அடித்திருந்த வெயிலில் படித்துறை துளி ஈரமில்லாமல் 'பளிச்' என்று காய்ந்திருந்தது. படித்துறை மேல் உட்கார்ந்து கொண்டான் மாசிலாமணி. சிங்காரத்தையும் அருகில் உட்காரச் சொன்னான். தயக்கத்தோடேயே சிங்காரம் அவன் அருகில் உட்கார்ந்து கொண்டான். படித்துறையில் சற்று இடைவெளி விட்டு, "பார், சிங்காரம்! என் மகளை மறந்து விடு! தயவு செய்து எங்கள் வாழ்க்கையில் குறுக்கிடாதே!" என்று கூறினான்.

திடுக்கிட்டு எழுந்த சிங்காரம், மறுத்துப் பேச ஆரம்பிப்பதற்கு முன்பே மீண்டும் சீறிக்கொண்டு சொன்னான் மாசிலாமணி.

"எனக்கும் மான அவமானம் உண்டு; என் தொழிலில் மதிப்பு உண்டு. என் மகள் உனக்கோ உன் குடும்பத்துக்கோ வேண்டாம். உன் அப்பன் ஊருக்கு நாட்டாண்மையே யொழிய, எனக்கல்ல. மறந்துவிடு, மாணிக்க வல்லியை. எச்சரிக்கை செய்கிறேன்" என்று கூறி விட்டு, சிங்காரத்தின் பதிலுக்காகக் காத்திராமல் வேகமாக அங்கிருந்து போய் விட்டான் மாசிலாமணி.

இரவு பத்து மணிக்குமேல்தான் வீட்டுக்கு வந்தான் மாசிலாமணி. சாப்பிட்டு முடித்த பிறகு, கை கழுவ, வீட்டுப் புழக்கடைத் தோட்டத்துக்கு வந்தான். இறைத்துச் சகடை 'கடகட'வென்று சுழல, புது நீர் இழுத்துத் தந்தையின் கால்களுக்கு வார்த்துக் கொண்டிருந்தாள் மாணிக்கவல்லி. கைகழுவி வாய் அலம்பி விட்டு நிமிர்ந்து ஆகாசத்தைப் பார்த்தான் மாசிலாமணி. வானுகிய கருநீலப் பட்டுத் திரையில், லட்சோப லட்சம் நட்சத்திரங்கள் ஜொலித்துக் கொண்டிருந்தன. திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது மாசிலாமணிக்கு.

"மாணிக்கவல்லி! அங்கே வானத்து மூலையைப் பார்!" என்றான்.

மாணிக்கவல்லி ஆச்சரியத்துடன் அவன் காட்டிய திசையில் வானத்தைப் பார்த்தாள். அங்கே நூத்தாறு நட்சத்திரங்கள் சுடர்விட்டுக் கொண்டிருந்தன; மற்றப்படி கருநீல இருட்டே குடிகொண்டிருந்தது அங்கே.

"பார்க்கிறாயல்லவா, மாணிக்கம்?"

"பார்க்கிறேன், அப்பா!"

"இப்போது நன்றாய்ப் பார்!"

இதென்ன! மாணிக்கவல்லிக்கு அவள் கண்களையே நம்ப முடியவில்லை! செப்பிடு வித்தையா இது? அப்பாவுக்கு எல்லாம் தெரிந்துவிட்டதா? வானத்து மூலையில் அங்கே மாணிக்கவல்லிக்குத் தெரிந்த உருவம், அவளுடைய அருமைக் காதலன் சிங்காரவேலு அல்லவா! அவளது மெய் சிலிர்த்தது.

மாணிக்கவல்லி நன்றாகப் பார்த்தாள். ஐயையோ! இதென்ன! சிங்காரவேலுவின் இரண்டு கால்களும் எங்கே? இரண்டு கால்களையும் யாரோ வெட்டிப் போட்டு விட்டாற் போல அல்லவா அங்கே நிற்கிறான்?

அன்பின் பரிசு!

தென்னாப்பிரிக்காவிலிருக்கும் பொழுது காந்திஜி தம்முடைய கையினால் செய்த செருப்புக்களை ஜெனரல் ஸ்மட்ஸுக்கு அனுப்பி வைத்தார்; காந்தி—ஸ்மட்ஸ் ஒப்பந்தத்துக்கு அறிகுறியாக. காந்திஜி அன்பளிப்பாக அளித்த செருப்புக்களைக் குறித்து ஜெனரல் ஸ்மட்ஸ் பின்வருமாறு தாம் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்:

"காந்திஜி சிறையில் எனக்காக அதிக பயனுள்ளதான ஒரு ஜோடி செருப்புக்களைத் தயாரித்து விடுதலையானதும் எனக்கு அன்பளிப்பாக அனுப்பினார். அப்படிப்பட்ட ஒரு பெரிய மகா புருஷரின் செருப்புக்களில் அடிவைக்க நான் கொஞ்சமும் அருகதை இல்லாதவன் என்று உணர்ந்த போதிலும் பல ஆண்டுகளாக அந்தச் செருப்புக்களை உபயோகித்து வருகிறேன்."

ஜெனரல் ஸ்மட்ஸ் அந்தச் செருப்புக்களை நன்கு பயன்படுத்தி வந்ததோடு, அதற்கு அடையாளமாக அவற்றை இருபத்தைந்து ஆண்டுகளுக்குப்பிறகு காந்திஜிக்கே திருப்பி அனுப்பி வைத்தார்.

"அப்பா, இதென்ன பயங்கரம்!" என்று கேட்டுக்கொண்டே மாணிக்கவல்லி கைகளால் கண்களைப் பொத்திக்கொண்டாள். ஒரு நிமிஷத்துக்குப் பிறகு மீண்டும் திறந்து பார்த்தாள். அங்கே ஓர் உருவமும் இல்லை. ஆனால் தகப்பனாரின் உக்கிரமான குரல் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

"அவனை மறந்துவிடு! அவ்வளவுதான் சொல்வேன்! இல்லாவிட்டால் மீண்டும் உன்னைச் சந்திக்க வந்தானானால், அவன் இரண்டு கால்களையும்...."

"வேண்டாம் அப்பா! சொல்லாதீர்கள், அப்பா!" என்று அலறிவிட்டு, கண் புதைத்துக் கொண்டு அங்கே இருந்து வீட்டுக்குள் ஓடி விட்டாள் மாணிக்கவல்லி.

பயப்படுத்திக் காரியத்தைச் சாதித்து விட்டதாக நினைத்தான் மாசிலாமணி.

இதைத் தொடர்ந்ததுதான் மாசிலாமணியின் வாழ்க்கைத் திருப்பமும்.

இவை யாவும் நடந்து, நாலைந்து தினங்கள் ஆகியிருக்கலாம்; ஒரு நாள் இரவு அர்த்த ராத்திரியில் கண் விழித்துக் கொண்டு பக்கத்தில் பார்த்த மாசிலாமணிக்குத் 'திக்'கென்றது. மாணிக்கவல்லியின் படுக்கை காலியாக இருந்தது!

என்னவோ அவன் மனத்துக்குத் தோன்றியது. ஓடினான் நாட்டாண்மையின் வீட்டை நோக்கி. அங்கேயும் சலசலப்பு: அவர் மகனையும் காணவில்லையாம்!

மாசிலாமணி மேலும் தாமதிக்கவில்லை. ஓடினான், ரயில் நிலையத்தை நோக்கி. மாணிக்கவல்லியை எப்படியும் தடுத்துநிறுத்தி விடுவது என்ற வெறி அவனைப் பிடித்தாட்டிக் கொண்டிருந்தது. போனான், அவர்கள் அந்த

நள்ளிரவு, பாஸஞ்சர் வண்டியில்தான் புறப்பட்டுப் போக வேண்டும்!

மாசிலாமணி அந்த இருட்டில் தலை தெறிக்க ஓடினான், தண்டவாளத்தினூடே. பாலம் குறுக்கிட்டது. வேகத்தை மட்டுப்படுத்திக் கொண்டு பாலக் கட்டைகளில் அவன் நடக்க ஆரம்பிப்பதும், தூரத்தில் ரயில் இஞ்சினின் முன்விளக்கு தெரிவதும் சரியாக இருந்தது.

அவன் உள்ள மெல்லாம் எரிந்தது! அவமானம் அணு அணுவாக அவன் உள்ளத்தையும் உடலையும் சுட்டெரித்துக் கொண்டிருந்தது!

வண்டி நெருங்கி விட்டது.

கூ..கூ..கூ..வண்டி குரல் கொடுத்துக் கொண்டே வந்தது.

ஒரு நிமிஷம், அரை நிமிஷம், ஒரு விநாடிதான் பாக்கி......பாலத்திருப்பம்; ஒதுங்கிக் கொடுக்க முனைந்தான். வேகத்தை மட்டுப்படுத்திக் கொண்டு வந்த டிரைவர், ஆசாமி ஒதுங்கிக் கொடுப்பதைக் கண்டதும், நிச்சிந்தையாக வண்டியை ஓட்ட முனைந்தார். ஆனால் அது என்ன வெறியோ மாசிலாமணி குறுக்கே வந்தான்....

சற்றுத் தொலைவில் போய்ப் பாலத்தின் நடுவில் நின்றது வண்டி. கீழே கழிவிட்டுப் போன நீரில், யாரோ மனித உருவம் தத்தளித்துக் கொண்டிருந்தது.

மூன்று மாதங்கள் தஞ்சாவூர் ஆஸ்பத்திரியில் கிடந்தான் மாசிலாமணி. ஒரு கால் போய்விட்டது; வலது கால்! ஆனால் உடைந்து விழுந்த அவனது வாழ்க்கைக் கூரை இந்தச் சம்பவத்தினால் நிலைநிறுத்தப்பட்டது என்றே சொல்ல வேண்டும்.

அன்றையதினம் இரவு மாணிக்கவல்லி உண்மையில் சிங்காரவேலுவுடன் எங்கும் ஓடிப்போய் விடவில்லை. பாலக்கரையிலிருந்த ஆலமரத்தடியில், "என்றைக்கிருந்தாலும், பெற்றோர்களின் மனம் மாறித்தான் தீரும். இதற்காக நாம் அவர்களுக்கு அவமானம் தரும் வகையில் ஓடிப் போய் விடலாமா?" என்றுதான் சிங்காரத்துக்குப் புத்தி சொல்லிக் கொண்டிருந்தாள் அவள்.

நாட்டாண்மைக்காரர் நாராயணசாமியின் மனமும் மாசிலாமணியின் மந்திரமும் சாதிக்க முடியாத ஒரு காரியத்தை, ஒரு கால் சாதித்துக் காட்டிவிட்டது. இருவரும் கண்ணீர் சொரிந்து, மனமுவந்து பிள்ளைக்கும் பெண்ணுக்கும் மணம் முடித்து வைத்தார்கள் மணப் பந்தலில்.

*

கதையை முடித்துக் கொண்டே அந்த நொண்டிக் கிழவன் மேலும் கூறினான்:

"கால் என்று சொன்னால் எனக்கு இத்தனை ஞாபகமும் வந்து விடுகிறது, சாமி! சிங்காரம் என் பெண்ணைத் திருடிக்கொண்டான் என்று நினைத்தேன்; ஆனால் உண்மையில் அவன் என் ஒரு காலைத் திருடிக்கொண்டுதான் எனக்குப் புத்தி கற்பித்தான். உந்தி உந்தி நடந்தாலும் நான் நிம்மதியாக இருக்கிறேன், சாமி! நான் எதற்காக உங்கள் வெள்ளிப் பாதங்களை—அதுவும் அந்த மூங்கனுடைய பாதங்களைத் திருடிக்கொள்ள வேண்டும்?"

கிழவன் மாசிலாமணியின் கண்களில் கண்ணீர் துளித்தது. மடிமேலிருந்த மூட்டையின் மேல் என் சித்தப்பாவின் கைகள் தளர்ந்திருந்தன. ஒரு கையால் தமது கண்களைத் துடைத்துக் கொண்டார் அவர்.


வண்டி சுவாமி மலையை அடைந்தது. எல்லாரையும் எழுப்பிக் கொண்டு கீழே இறங்கினேன் நான்.

பிரார்த்தனை யெல்லாம் முடிந்து திரும்பித் திருச்சிக்கு வந்த பிறகு, சாவகாசமாக என் மனைவியின் அருகில் உட்கார்ந்து கொண்டு அந்தக் கிழவன் கூறிய கதையை அவளுக்குக் கூறினேன்.

"அந்தக் கிழவன் தன் வாழ்க்கையில் இப்போது எல்லாவற்றையும் விடத் தனது உடைந்துபோன காலே மகத்துவம் வாய்ந்தது என்றல்லவா மகிழ்கிறான்!" என்றேன்.

இதற்குச் சரோஜா ஒன்றும் சொல்லாமல் என்னைப் பார்த்துப் புன்னகை பூத்தபடி உட்கார்ந்திருந்தாள். உண்மை, எப்போதும் உட்கார்ந்தே இருக்கும் அவளால் நடக்க முடிய வில்லை; எப்போதும் நடந்து கொண்டே இருப்பவர்கள் ஆர அமர உட்கார எப்படிப் பிரியப்படுகிறார்கள்!

மனிதனுடைய வாழ்க்கை என்பது அவனுக்கு இருக்கும் இரு கால்களில்தான் ஊன்றிக் கொண்டிருக்கிறதா?



பாக்கியவதி

கௌசிகன்

அன்று மார்க்கெட்டில் ஒரே கூட்டம்; பண்டிகையை முன்னிட்டுப் பழ வகைகளும் காய்கறிகளும் கொட்டிக் கிடந்தன. என்ன இருந்தென்ன? பாகீரதி அவைகளையெல்லாம் பார்க்கத்தான் செய்யலாம். வாங்கி அனுபவிக்கும் பாக்கியம் செய்யவில்லை. அவளிடமிருந்ததெல்லாம் இரண்டு ஒரு அணா நாணயங்கள் தான். பன்னிரண்டு நயே பைசே என்று வேண்டுமானாலும் நாகரிகமாகச் சொல்லிக் கொள்ளலாம்.

கீரைக்காரியிடம் அவள் பேரம் பேசிக் கொண்டிருந்தபோது ஒரு கார் வந்து நின்றது. திரும்பிப் பார்த்த பாகீரதி திகைத்துப் போனாள். அவள் உடல் வெட்கத்தால் குன்றிப் போயிற்று. அந்தக் காருக்குள் இருந்த உருவம் தன்னைப் பார்த்து விடாதபடி கூனிக் குறுகிய படி அந்த இடத்தைவிட்டு நழுவி ஓடி ஒளிந்து கொண்டாள். அந்த உருவம் தன்னைப் பார்த்துக் கூப்பிட்டுவிடக் கூடாதே என்று அவள் மனம் பட்டபாடு, அப்பப்பா சொல்லி முடியாது.

அவள் பார்க்க முடியாதபடி. ஆனால் இவள் தன் பார்வையால் அவளை எடை போடும்படியான இடத்தில் நின்றபடி அவளை எடை போடலானாள். காரிலிருந்து ஒயிலாக இறங்கினாள் அந்தப் பெண். இயற்கையில் அவள் கறுப்பானாலும் செல்வத்தின் மினுமினுப்பில் அந்தக் கறுப்புகூடக் காந்தி இழந்து காணப்பட்டது. முழு அகலத்துக்கு ஜரிகை போட்ட பட்டுப் புடவை உடலில் ஒட்டாமல் நழுவி நழுவி விளையாடியது. பாகீரதியின் கை அவளை அறியாமல் சாயம் மங்கிப் போன தன் நூல் புடவையை இழுத்து நேர் செய்து கொண்டது.

பழக் கடைக்காரன் மாம்பழங்களை மேல் துண்டால் பளபளவென்று துடைத்து அடுக்கிக் கொண்டிருந்தான். பாகீரதி அவன் அருகில் போய் நின்று ஐந்து தடவைகள் விலை என்ன என்று கேட்டாலும் 'இதெல்லாம் உங்களுக்குக் கட்டுபடியாகாது, அம்மா' என்று சொல்லக் கூடியவன். காரிலிருந்து இறங்கியவளின் பார்வை அந்தப் பக்கம் திரும்பியதும் எத்தனை பரபரப்புடன் எழுந்திருந்து ஓடி வருகிறான்?

இதைப் பார்த்த பாகீரதியின் உள்ளம் பொங்கியது. பழக் கடைக்காரன் சொன்ன பாதிரியையும், பங்கன பள்ளியையும், மல்கோவாவையும் இரண்டு விரல்களால் நாசுக்காக வாங்கி வேலைக்காரன் நீட்டிய பைக்குள் போட்டுக் கொண்டிருந்தாள் அவள். இதற்கு மேல் பாகீரதியால் அங்கு நின்று கொண்டிருக்க முடியவில்லை. இனந் தெரியாத ஏதோ ஒரு வேதனை அழுகை, நெஞ்சை வந்து முட்டியது. கீரைக்காரியிடம் ஓரணாவை விட்டெறிந்து விட்டு அவள் கொடுத்த கீரைக்கட்டு நல்லதுதானா என்று கூடப் பார்க்காமல் வாங்கிப் பைக்குள் திணித்துக் கொண்டு வெகு வேகமாக அந்த இடத்தைவிட்டு நகர்ந்தாள். அவள் பார்வைக்குக் கண்ணீர் வலை பின்னிக் கொண்டிருந்தது.

அந்தப் பெண்ணைப் பார்த்து—அவள் வாழ்வைப் பார்த்து—பாகீரதி இப்படிப் பொருமைப்படுவானேன்? புஷ்பாவும்,—அது தான் அந்தப் பெண்ணின் பெயர்—பாகீரதியும் அடுத்தடுத்த வீட்டில் ஒன்றாக வளர்ந்தவர்கள். ஒன்றாகவே படித்தவர்கள். ஒரே மாதத்தில்தான் அவர்களுக்குக் கலியாணமும் ஆயிற்று. ஆனால் இன்றோ வாழ்வின் இரு துருவங்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

வீதி ஓரத்திலிருந்த ஒரு ஜவுளிக் கடையில் அலங்கார ஆடம்பரப் பொருள்களைப் பகட்டாக வைத்துள்ள கண்ணாடிக் கவரின் பக்கமாகப் போய்க் கொண்டிருந்த பாகீரதிக்கு ஏதோ ஒரு எண்ணம் தோன்றியது. நடைக்குத் தடை போட்டு, 'ஷோ கேஸ்' கண்ணாடியில் பனித்திரையிட்டது போல் தெரிந்த தன் உருவத்தை ஒருமுறை பார்த்துக் கொண்டாள் அவள். புஷ்பாவின் உருவம் நினைவிலே நிழலாடிக் கொண்டிருக்கும் போது, தன் இன்றைய உருவத்தையும் அத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள ஆசைப்பட்டாளோ என்னவோ?

அவளுக்கே அவள் உருவத்தைப் பார்த்துக் கொள்ளப் பிடிக்கவில்லை. 'இருபது வயதுப் பெண்ணாகவா இருக்கிறேன் நான்?' என்ற ஏக்கப் பெருமூச்சொன்று அவள் உள்ளத்திலிருந்து சீறிக் கொண்டு கிளம்பியது. 'புஷ்பாவிடம் உள்ள இளமையின் பூரிப்பும் பொலிவும் எங்கே, நான் எங்கே?' என்பதை நினைக்

கும்பொழுது துக்கம் அவள் நெஞ்சை வந்து அடைத்துக் கொண்டது.

பாகீரதி அப்படியொன்றும் கேவலமாக இல்லை. பொன்னுடலிலே மங்களகரமான மஞ்சள் பூசிக் குளித்திருந்தாள். அக்கறை காட்டாது போனாலும் அவள் தலை மயிரைக் குடலை போல முடித்து கொண்டிருந்ததே ஒரு தனி அழகாகத்தான் இருந்தது. நெற்றியிலே ரத்தினம் பதித்தது போலப் பளிச்சென்று குங்குமம். குங்குமம் தொட்ட விரலை வகிட்டோரத்திலும் கழுத்திலும் துடைத்துக் கொண்டிருந்தாள். அதுவே கூடத் தனிச் சோபையுடன் விளங்கியது. பகட்டும் படாடோபமும் இல்லாவிட்டாலும் பதவிசாகப் பார்க்க அடக்கமாக, அழகாக இருந்தது. அவள் உருவம். ஆனால் பாகீரதியின் அப்போதைய நினைவிலே ஏற்பட்டிருந்த சலனம் அவள் உருவத்தை அவளே வெறுக்கும்படியான நிலையில் வைத்தது.


புஷ்பா!

நெஞ்செல்லாம் அவள் நினைவாகவே நடந்து கொண்டிருந்தாள் பாகீரதி. எப்படி இருந்தவள், இன்று எப்படி இருக்கிறாள்? கால்கள் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தன. நினைவோ அவளைப் பின்நோக்கி இழுத்தது.

பெற்றோரைச் சிறு வயதிலேயே இழந்து விட்ட புஷ்பா உறவினர் ஒருவர் வீட்டில் வளர்ந்து வந்தாள். சம வயதுக்காரியான தன் தோழி அந்த வீட்டில் படும் கஷ்டங்களைக் கண்டு பாகீரதியின் குழந்தை உள்ளம் அவளிடம் பரிவு கொள்ளும். காரியங்களை முடித்து விட்டு அவள் எப்போது வருவாள் என்று காத்துக் கிடப்பாள். புஷ்பா நேரம் கிடைக்கும் போதெல்லாம் நேசம் காட்டும் பாகீரதியைக் காண ஓடோடி வந்துவிடுவாள். ஒவ்வொரு நாளும் பாகீரதி பரிவோடு அவளை விசாரிப்பாள். புஷ்பா தன் கஷ்டங்களைச் சொல்லும்போது பாகீரதியின் கண்களில் நீர் முட்டி விடும். கூண்டிலிருந்து விடுபட்ட பறவையைப் போல, பள்ளிக்குச் செல்லும் நேரத்தைத் தவிப்புடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் புஷ்பாவின் குழந்தை உள்ளம்.

புஷ்பாவைவிடப் பாகீரதி சிவப்பு; அழகியும்கூட. தன் அழகிலும் வசதியான வாழ்விலும் பாகீரதிக்கு அந்தக் காலத்திலெல்லாம் கர்வம் என்றுகூடச் சொல்லலாம். கண் நிறைந்த கணவன், காதல் வாழ்க்கை என்று உல்லாசமான வருங்காலத்தை உள்ளத்திலே உருவாக்கிக்கொண்டு, வரப்போகும் கணவனை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் பாகீரதி.

இந்தத் துன்பச் சுழலிலிருந்து தன்னை விடுதலை செய்து கொண்டு போகக் கூடிய ஆண் மகன் எவனாவது வரமாட்டானா என்று புஷ்பாவும்தான் ஏக்கமுடன் காத்துக் கிடந்தாள். அவள் உள்ளத்தில் கணவனைப் பற்றிய கற்பனை எண்ணங்கள் இல்லை. இந்தக் கஷ்டங்களிலிருந்து விடுதலை பெற மாட்டோமா என்ற கவலைதான் நிரம்பியிருந்தது.





இருவரும் எதிர்பார்த்த அந்த மகத்தான மாறுதல் வந்தது. இருவரின் வாழ்விலும் வெவ்வேறான திருப்பங்களை உண்டாக்கி விட்டுச் சென்றது திருமணம்.

இள வயதிலே மனைவியை இழந்த, ஊர்பேர் தெரியாத இளைஞன் ஒருவன் எங்கிருந்தோ வந்தான், புஷ்பாவின் கணவனாக. மகிழ்ச்சியோடு குமாரின் கைப்பிடித்தாள் புஷ்பாவும்.

குணதோஷங்களை ஆராய்ந்து தம் மகளுக்கு மணாளனாக வேணுவைத் தேடிப் பிடித்தார் பாகீரதியின் தந்தை. பெண் பார்க்க வந்ததிலிருந்து நிச்சய தாம்பூலம், ஜவுளி எடுத்தல் என்று இப்படியாகச் சம்பிரதாயங்களெல்லாம் ஒன்றுவிடாமல் நடந்து அவள் கழுத்தில் மூன்று முடிச்சு விழ இரண்டு மாதகாலமாயிற்று. இந்த இரண்டு மாதங்களும் தன் கரம் பிடிக்கப் போகும் கணவன் நினைவாகவே—அந்த இன்பச் சுழலிலேயே அவள் தவித்த தவிப்பு அப்பப்பா சொல்லி முடியாது!

உண்மை தெரிந்தது!

தென்னாப்பிரிக்காவில் டால்ஸ்டாய் பண்ணையில் கால்லென்பாக் என்பவர் ஒரு பாம்பைப் பிடித்து வளர்த்து வந்தார். அதைக் கண்டதும் காந்திஜி, "நீங்கள் இந்தப் பாம்பைச் சிநேகப் பான்மையில் வளர்த்து வந்தாலும், உங்கள் பிரியத்தில் பயமும் கலந்திருப்பதால், உங்கள் நட்பை அந்த நல்ல பாம்பு தெரிந்துகொள்ளாமலே போய் விடும். அது மாத்திரம் சுதந்திரமாக இருக்குமானால் உங்களுக்கும் சரி, எனக்கும் சரி, அதனுடன் விளையாடத் தைரியம் வருமா? அந்த மாதிரி ஒரு தைரியத்தைத்தானே நாம் அடைய வேண்டும்? ஆகவே நீங்கள் இப்பாம்பை நட்பினால் வளர்த்து வந்தாலும், இதை அடக்குவதில் உண்மை அன்பு இருக்க முடியாது. நம்முடைய நடத்தை பாம்பு புரிந்து கொள்கிற மாதிரி இருக்க வேண்டும். விலங்குகள், மற்ற இனங்கள் தம்மிடம் நேசத்துடன் இருக்கின்றனவாவென்பதை உடனே தெரிந்துகொள்வதை நாம் தினமும் காண்கிறோம். தவிரவும் இந்த நல்ல பாம்பின் பழக்கவழக்கங்களைத் தெரிந்து கொள்வதற்காக நீங்கள் இப்படிச் சிறை செய்திருக்கிறீர்கள். உண்மையான அன்பு செலுத்துவதாயிருந்தால் இப்படிச் சுய திருப்திக்கு இடம் தரக் கூடாது" என்று கால்லென்பாக்கிடம் கூறினார்.

காந்திஜியின் வாதத்தில் உண்மை இருப்பது கால்லென்பாக்கின் மனதில் நன்கு பதிந்து விட்டது. ஒருநாள் பாம்பு தானாகவே தப்பி ஓடி விட்ட போது, அவர்கள் இருவருமே சந்தோஷப்பட்டார்கள்.

தொட்டதெல்லாம் பொன்னாகும் அதிர்ஷ்ட ஜாதகத்திலே பிறந்தவன் குமார். அவன் வாழ்க்கையில் தோல்வியே கண்டதில்லை. புஷ்பா எதிர்பாராது கிடைத்த இன்ப வாழ்வை எப்படி அனுபவிப்பது என்று தெரியாமல் திக்குமுக்காடிப் போனாள்.

பாரதியின் வாழ்வோ?

பெண் பார்க்க வந்தபோதே தோளில் தொங்கும் காமிராவுடன் காட்சியளித்தான் வேணு. தன் கணவன் ஒரு கலைஞன் என்று பூரித்துப் போனாள் பாரதி.

கலியாணமான புதிதில் பாரதிக்கு வாழ்க்கை இன்ப மயமாகத்தான் இருந்தது. வேணு பாரதியிடம் உயிரையே வைத்திருந்தான். அவன் ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் சாதாரணக் குமாஸ்தாதான்.

பாரதியின் வாழ்நாளிலேயே என்றும் மறக்க முடியாதது கலியாணமான முதல் வருஷத்தில் அவள் அனுபவித்த இன்ப வாழ்க்கைதான். இளமைத் துடிப்பிலே தம்பதிகள் போட்டி போட்டுக் கொண்டு ஒருவர்மீது ஒருவர் அன்பை அள்ளிச் சொரிந்து கொண்டார்கள். 'அன்னையாகப் போகிறோம்' என்பதை அறிந்தபோது அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு வேறு எதையுமே இணையாக்கிச் சொல்ல முடியாது.

குழந்தை கோபு பிறந்ததுமே தங்கள் வாழ்க்கையில் அதிர்ஷ்டமும் பிறந்து விட்டதாகப் பூரித்துப் போனாள் தாயாகி விட்ட பாரதி. ஆனால் அதுவே தன் இன்ப வாழ்வின் இறுதி—துன்ப வாழ்வின் துவக்கம் என்பதை அவள் அறியவில்லை.

வேணுவுக்குப் புகைப்படக் கலையில் சிறு வயதிலிருந்தே ஒரு பைத்தியம். எத்தனையோ அற்புதமான காட்சிகளை அவன் காமிராக் கண் சிமிட்டி வரவேற்றிருக்கிறது. இந்தக் கலையில் அவனுக்குள்ள ஆர்வத் தீயைக் கொழுந்து விட்டு எரியும்படி செய்தது அவன் எடுத்த ஒரு படம்தான்.

தமிழ் நாட்டின் சின்னமாக, அதன் செழுமையையும் பழமையையும் விளக்கும் அளவு கோலாக அமைந்திருந்தது அந்தப் படம்.

ஒரு கரை. கரையிலே சூல் கொண்ட அன்னம் சுகமாக நீந்திச் செல்கிறது. அல்லி மலர்கள் இதழ் விரித்துச் சிரிக்கின்றன. கரையிலுள்ள ஒரு சரக்கொன்றை மரம் தன் பொன் கொத்து மலர்களைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறது. ஓரத்துக் கிளையிலே ஒரு ஜோடிப் புறாக்கள். எதிர்க்கரையில் சோலை. சோலை முகட்டுக்கு மேலே கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் கோயில் கோபுரம். கோபுரத்தின் விளிம்பைத் தொட்டுக் கொண்டு மலை வாசலில் ஒளிந்துகொள்ள ஓடும் சூரியன்.

அந்த அற்புதமான புகைப்படத்தை முதலில் பாராட்டியவள் பாரதிதான். விளையாட்டாக "இதைச் சர்வதேசப் புகைப்படப் போட்டிக்கு அனுப்பினால் முதல் பரிசு கொடுத்தே ஆகவேண்டும்" என்றாள். தன் கணவனின் கைத்திறமையைப் பாராட்ட வேண்டும் என்ற ஆர்வத்திலே பிறந்த வார்த்தைகள்தான் அவை. ஆனால் மனைவியின் பாராட்டைப் பெற்ற படத்தை வேணு மறுநாளே சர்வதேசப் புகைப்படப் போட்டிக்கு அனுப்பி விட்டான்.

அதைப்பற்றி இருவருமே மறந்து விட்ட நிலையில் ஒரு நாள், குழந்தை பிறந்த குதூகலத்தில் இருந்தவர்களை மேலும் ஆனந்தத்தில் ஆழ்த்த அந்தச் செய்தி வந்தது. பாரதி சொன்னது போல வேணுவின் புகைப்படம் முதல் பரிசு பெறாவிட்டாலும் ஏதோ ஒரு பரிசைப் பெற்றது. அதற்கு உரிய தொகை இந்திய நாணயத்தில் ஐயாயிரம் ரூபாய்.

ஆச்சரியத்தினால் வாயடைத்துப்போனார்கள் தம்பதிகள். பிறந்த குழந்தையின் அதிர்ஷ்டம் என்று பூரித்தும் போனார்கள்.

எதிர்பாராது கிடைத்த அதிர்ஷ்டத்தை எப்படி எப்படி யெல்லாம் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி இருவர் உள்ளங்களும் திட்டமிடலாயின. 'அரசாங்கத்திலே வீடு கட்டுவதற்குக் கடன் கொடுக்கும் திட்டத்திலே சேர்ந்து நமக்கென ஒரு மனையை வாங்கி வீடு கட்டிக் கொள்ள வேண்டும். குழந்தையின் இடுப்புக்குச் சலங்கை. அதோடு அவளுக்கும் ஒரு மாங்காய் மாலை. இந்தச் சமயத்தில் பண்ணினால்தான் உண்டு.' கொஞ்சம் அதிகமாகவே ஆசைப்பட்டாள் பாரதி, தான் தூண்டியதினால் கிடைத்த பரிசுதானே என்ற உரிமையில். ஆனால் வேணுவோ வேறு

விதமாக முடிவு செய்து விட்டான். தொல்லை தரும் ஆபீஸ் வேலைக்குத் தலை முழுக்குப் போட்டுவிட்டுத் தன் முழு நேரத்தையும் திறமையையும் புகைப்படக் கலைக்கே செலவிடுவதென்றும் கையிலுள்ள பணத்தைக் கொண்டு சிறிய அளவில் ஒரு புகைப்பட ஸ்டுடியோ வைப்பதென்றும் முடிவு கட்டிவிட்டான்.

கணவனின் முடிவைக் கேட்டு முரண்டு பிடித்தாள் பாரதி. வேணு பிடிவாதமாகச் செயலில் இறங்கினான்.

வேணு திட்டமிட்டபடி எதுவும் நடக்கவில்லை. ஸ்டுடியோவை உருவாக்க மூவாயிரம் ரூபாய் போதும் என்று நினைத்தான். ஆனால் கடைசியில் அது வேண்டும், இது வேண்டும் என்று ஐயாயிரத்தையும் அதிலேயே முடக்கி விட்டான். அதற்குமேல் கொஞ்சம் கடனும் வாங்கி இருந்தான். முதலில் அது பாரதிக்குத் தெரியாது.

ஸ்டுடியோவிலிருந்து கிடைத்த வருமானமோ வாழ்க்கை நடத்தவே போதும் போதாததாக இருந்தது. வாழ்க்கை வசதிகளைக் குறைத்துக் கொள்ளும்படியாயிற்று. சிறிய வீட்டுக்குக் குடி மாறினார்கள்.

வருடங்கள் இரண்டு ஓடிவிட்டன. பாரதியின் மனதிலே மகிழ்ச்சி மலரவில்லை. அவள் உள்ளத்திலே வெறுப்புத்தான் வளர்ந்தது. வேதனை குடி கொண்டது.

புஷ்பா அந்த ஊரில் கண்டோன்மெண்டில் மகிமையோடு வாழுவது பாரதிக்குத் தெரியும். கலியாணமான புதிதில் அவளும் இவளைப் பார்க்க வருவாள் இவளும் அவளைப் பார்க்கப் போவதுண்டு. அந்த உறவும், வேணு புகைப்பட ஸ்டுடியோ முதலாளி ஆன பிறகு குறைவாயிற்று. பிறகு புஷ்பா போட்ட கடிதங்களுக்கும் பாரதி பதில் போடவில்லை. எப்படிப் போடுவது? தன் சிறுமையை அவள் முன் காட்டிக் கொள்ளப் பாரதிக்கு விருப்பமில்லை.

இன்று தெருக்கு நேரே எப்படியோ இருந்த புஷ்பாவை இப்படிப் பார்க்க நேர்ந்தபோது தன் அவல நிலையை அவளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவே நெஞ்சம் பொசுங்கிப் போய் விட்டது. பெண்ணுள்ளம்தானே?

ஒரு முடிவான தீர்மானத்துடன்தான் அவள் வீட்டுக்குள் நுழைந்தாள். அடுத்த வீட்டுக்காரியிடம் விட்டுச் சென்றிருந்த கோபுவுக்குப் பசி வேளை வந்து விட்டது. சிணுங்கிக் கொண்டிருந்தான். குழந்தை கோபுவைத் தூக்கிக் கொண்டபோது அவளுக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. தங்க விக்கிரகம் போன்ற தன் குழந்தையைக் கூட அவ்வளவு வசதியாக வளர்க்க முடியவில்லை.

உடனே கிளம்பி வருவதாகத் தன் அப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டு விடுவதென்று உறுதி செய்துகொண்டாள் பாரதி.

தகப்பனாருக்குக் கடிதத்தை எழுதியபிறகு அதைத் தபாலில் போடுமளவுக்குத் துணிவில்லை பாரதிக்கு. கணவனிடம் தெரிவித்து விட்டே தபாலில் சேர்க்கலாம் என்று வைத்துக் கொண்டிருந்தாள்.

அன்றிரவு வேணு வர வெகுநேரமாகி விட்டது. தினமும் இப்படித்தான். புருஷனின் வரவை ஆசையோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் மனைவி மக்களைக் காண வேண்டும் என்ற துடிப்போடு ஐந்து மணிக்கெல்லாம் ஓடிவரும் ஆபீஸ் உத்தியோகஸ்தனா வேணு? இரவு கடையை மூடிக்கொண்டு வரத் தினம் வேணுவுக்குப் பத்து மணிக்கு மேலாகி விடும்.

அன்று பாரதியின் கடுத்த முகத்தைப் பற்றி அவன் கவலை கொள்ளவில்லை. 'எப்போதுமே இப்படித்தானே' என்று சகஜமாகி விட்டது அவனுக்கு. ஆனால் சாப்பாடு முடிந்ததும், அவள் தன் முடிவைத் தெரிவித்த போது அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"அதெல்லாம் முடியாது. இப்போது உன்னை நான் அனுப்பமாட்டேன். நீயும் போகக்கூடாது. வியாபாரத்திலே சறுக்கல் ஏற்பட்டு விட்டது, மனைவியையும் பிள்ளையையும் பிறந்த வீட்டுக்கு அனுப்பி விட்டான் என்று ஊரார் ஏசுவார்கள்' என்றான்.

மறுநாள் காலை தம்பதிகளிடையே பேச்சே இல்லை. வேணு எட்டு மணிக்கெல்லாம் கடைக்குப் போய்விட்டான். போவதா வேண்டாமா என்ற குழப்பத்தில் தவித்துக் கொண்டிருந்தாள் பாரதி. இந்தச் சமயத்தில் பக்கத்துப் போர்ஷனில் குடியிருக்கும் கமலா 'கேட்டாயா பாரதி'' என்று கேட்டுக் கொண்டே கையில் ஒரு தினப் பத்திரிகையுடன் வந்தாள்.

"என்ன கமலா?'' என்றாள் பாரதி தன் உள்ளப்புயலை உள்ளுக்குத் தள்ளிக்கொண்டே.

"தன் கணவன் வேறொரு பெண்ணுடன் காதல் கொண்டிருப்பதை அறிந்த மனைவி அவர்கள் இருவரும் தனித்திருக்கும்போது, உள்ளே புகுந்து கைத் துப்பாக்கியால் கணவனையும் அவர் காதலியையும் சுட்டுக் கொன்று விட்டாளாம். பெண்ணானாலும் ரொம்பத் துணிச்சல்காரி'' என்றாள் கமலா.

பாரதி இந்தச் செய்தியை அசுவாரஸ்யமாகக் கேட்டு, "கொலை செய்யும் அளவுக்குத் துணிச்சல் ஏற்பட வேண்டுமானால் அந்தப் பெண் எத்தனை வேதனையை அனுபவித்தாளோ?'' என்றாள். பிறகு ஒரு நீண்ட பெருமூச்சுடன் "எந்த நாட்டிலே நடந்த சம்பவம் இது?'' என்று கேட்டாள்.

எளிய வாழ்க்கை

"ஏழைமக்கள் எந்த நிலையில் வாழ்கிறார்களோ அதைக் கொஞ்ச அளவுக்கு நாமும் அனுசரிப்போம். ஆப்பிரிக்காவில் எளிய வாழ்க்கைச் சோதனையைச் செய்ய முற்பட்டபோது, ஒரே அறையில் வசித்து வந்தேன். அந்த அறையே என் அடுப்பங் கரையாகவும், வருவோரை வரவேற்குமிடமாகவும், நான் குளிக்குமிடமாகவும், என் படுக்கை அறையாகவும் இருந்தது. என்றாலும் அது முற்றிலும் சுத்தமானதாக இல்லை என்று எவராலும் கூற முடியவில்லை.''

[1922 ஜனவரி 12-ம் தேதி காந்திஜி கூறியதாக 'மகாதேவ தேசாயின் நினைவுக் குறிப்பில்' காண்கிறோம்.]

"எந்த நாடா? நம்ம ஊரிலே, கன்டோன்மென்டிலே நடந்திருக்கு. புஷ்பான்னு அவளுக்குப் பேராம். அவள் கணவன் பெயர் குமார்..." கமலா பேச்சை முடிக்கவில்லை.

பாரதி, "ஐயோ, புஷ்பாவா?" என்று அலறியே விட்டாள். பரபரப்புடன் கமலாவின் கையிலிருந்த பத்திரிகையை வாங்கிப் படித்தாள். அத்தனையும் உண்மை.

பாரதிக்கு உலகமே சுழன்றது. அவளுக்கு ஒன்றுமே ஓடவில்லை. கமலா போனது கூடத் தெரியாமல் பிரமை பிடித்தவள் மாதிரி உட்கார்ந்திருந்தாள். "தபால்" என்ற குரலை அடுத்துப் 'பொத்' தென்று ஒரு கவர் வந்து அவள் காலடியில் விழுந்தது. பாரதி பரபரப்புடன் அதை எடுத்துப் பார்த்தாள்.

"அருமைத் தோழி பாரதி,

நேற்று மார்க்கெட்டில் நான் உன்னைப் பார்க்கவில்லை என்றுதானே எண்ணிக் கொண்டிருக்கிறாய்? எங்கே நான் பார்த்துவிடப் போகிறேனோ என்று ஓடி ஒளியும் அவசரத்தில் நான் கூப்பிட்டது கூட உன் காதில் விழவில்லை. என்னை நீ பார்க்க விரும்பாததன் காரணமும் எனக்குத் தெரியும். பாரதி! என் கடிதங்களுக்கு நீ பதில் போடாததிலிருந்தே அதை நான் ஊகித்துக் கொண்டு விட்டேன்.

நான் மகிமையாக வாழ்வதாக நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். நீ என்ன, உலகமே என்னைப் பற்றி அப்படித்தான் நினைக்கிறது. நல்ல ஜாதி மாம்பழத்துக்குள்ளே வண்டு இருப்பது வெளியிலிருந்து பார்த்தால் தெரிகிறதா? அது போலத்தான் என் வாழ்வும்.

பெண்களுக்கு வேண்டியது பட்டும் பகட்டும் நகையும் நாகரிகமும் அல்ல; நம் கணவனின் அன்பெல்லாம் நம் ஒருத்திக்குத்தான் என்று கர்வப்படும்படியான வாழ்க்கை அமைவதுதான்.

அந்த வாழ்க்கை எனக்கு வாய்க்கவில்லை. வண்டு குடைந்த மாம்பழத்தைப் போல என் உள்ளம் வேதனையால் சல்லடையாகத் துளைக்கப்பட்டு விட்டது. என் கரம் பிடித்தவர் முன்பு ஒருத்தியின் அன்புக்குப் பாத்திரராக இருந்தாலும் அவள் இறந்து விட்டதால் இனி எனக்கே தம்மை உரிமையாக்குவார் என்று எண்ணியிருந்தேன். ஆனால் அந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை.

இதைவிட ஒரு பெண்ணுக்கு அவள் உள்ளம் சுக்குநூறாக உடைவதற்கு வேறு என்ன வேண்டும்? ஆனால் இதையும் சகித்துக் கொண்டேன். இதற்கு மேலும் சகிக்க முடியாத நிலை எனக்கு ஏற்பட்டது! என் உரிமையைப் பறித்து வாழும் பெண்ணை என் வீட்டிலேயே என் கண் எதிரிலேயே கொண்டு வந்து குலாவ ஆரம்பித்தார் என் கணவர். இந்தக் கொடுமையை என்னால் சிறிதும் தாங்க முடியவில்லை.

என் கணவரைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே. அடிக்கடி வேட்டைக்குச் செல்லும் அவர், கைத் துப்பாக்கி வைத்துக் கொள்ள அரசாங்கத்திலிருந்து அனுமதி பெற்றிருந்தார். கல்யாணமான புதிதில் என்னிடம் அதைக் காட்டியும் இருக்கிறார். நேற்று காலையிலேயே அதை எடுத்துப் பத்திரப் படுத்திக் கொண்டேன்.

அவருடைய கபட நாடகத்துக்கும் என் வாழ்வுக்கும் இன்று ஒரு முடிவு ஏற்பட்டு விடும் பாரதி! துப்பாக்கியிலேயும் கணக்காக மூன்று குண்டுகள்தான் இருக்கின்றன.

வறுமை வாழ்வானாலும் பாரதி, நீ பாக்கியவதி. காதல் மாறாத கணவன். கட்டிக் கரும்பாக இனிக்கும் மழலை பேசும் குழந்தை. இதுதானே ஒரு பெண் தன் வாழ்வில் விரும்புவது?

அபாக்கியவதி,
புஷ்பா.

கடிதத்தைப் படித்து முடித்த பாரதியின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

"நானே பாக்கியவதி. ஆமாம் நான் பாக்கியவதிதான்" என்று அவள் வாய் முணுமுணுத்தது. 'என் வாழ்வை ஏழையென்று எண்ணி ஏங்கினேனே. கணவனின் மாறாத அன்பு ஒன்றே போதுமே. ஐயோ! அதை உதாசீனம் செய்து ஓட இருந்தேனே' என்று ஓடிப் போய் அப்பாவுக்கு எழுதியிருந்த கடிதத்தைக் கவரோடு சுக்குநூறாகக் கிழித்து எறிந்தாள். அவளால் வெகுநாட்களாக ஒதுக்கப்பட்டிருந்த உள் மனம் பேசிற்று. பேசவா செய்தது? இல்லை, கேள்விகளால் துளைத்தது.

மனச்சாட்சியின் குத்தலைத் தாங்க முடியாத பாரதி விம்மி விம்மி அழுதாள். இப்போது வேணு அவளுக்குக் கண்கண்ட தெய்வமாகக் காட்சி யளித்தான்.

பகல் ஒரு மணி. வியர்வையில் தெப்பமான சட்டையைக் கழற்றி நாற்காலி மீது போட்டுக் கொண்டே, "என்ன பாரதி, மூட்டையெல்லாம் கட்டி வைத்து விட்டாயா? டிக்கெட் வாங்க வேண்டியதுதானே?" என்று கண்களைச் சிமிட்டியபடியே கேட்டான் வேணு. இன்று அவன் முகத்தில் அயர்வுக்குப் பதில் ஆனந்தம் குடி கொண்டிருந்தது.

கண்களில் கண்ணீர் மல்க, "என் ராஜாவைப் பிரிந்து நான் எங்கும் போகப் போவதில்லை!" என்றாள். அவள் குரல் அவளுக்கே கரகரத்து ஒலித்தது.

"எனக்குத் தெரியும், என்னை விட்டு உன்னால் தனியாக இருக்க முடியாதென்று. பாரதி! ஒரு சந்தோஷ சமாசாரம். ஒரு சினிமாப் படத் தயாரிப்பாளர் தாம் எடுத்துக் கொண்டிருக்கும் படத்தின் விளம்பரங்களுக்கு வேண்டிய அத்தனை ஸ்டில் போட்டோக்களையும் நான்தான் எடுத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். ஒப்பந்தம் கூட முடிந்து விட்டது. இப்பொழுதுதான் நாம் பாடுபட்டதற்குப் பலன் வர ஆரம்பிக்கிறது. என்னைப் பாரு. அடடே, இதென்ன பாரதி! கண்ணீர் விடுகிறாய்? இன்னுமா என்னிடம் உனக்கு நம்பிக்கை இல்லை?" அதற்குமேல் அவனைப் பேச விடாமல் பாரதி கணவனின் வாயைப் பொத்தினாள். அவளாலும் சில நிமிஷங்கள் பேச முடியவில்லை.

"உங்களை நம்புகிறேன். உங்கள் உழைப்புக்கு இனி கை கொடுத்து உதவவும் செய்வேன். இத்தனை நாள் நான் சொன்னதையெல்லாம் மறந்து மன்னித்து விடுங்கள்" என்று அவன் கால்களில் விழுந்தாள் பாரதி.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.


பாருங்கள்! ஒரு அரை வில்லை
ஸன்லைட் தான்
இவ்வளவு
சலவையும்
செய்து முடித்தது!
அதன் மிகையான
நுரையே நிறைவேற்றம்
SUNLIGHT SOAP
பளிச்சென்று
வெண்மையாக
வெளுப்பது ஸன்லைட் சோப்
S. 249-50 TX

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

